

# திருக்கோயில்

நவம்பர் 1977 ரூ. 1



திருவிடைக்கழி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் புதிய இராஜகோபுர அமைப்புத் திருப்பணியை அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்பித்தல். நாகைத் துணை ஆணையர் திரு. ஆர். தண்டபாணி, B.Sc., B.L., பேராசிரியர் 'முத்தமிழ் வித்தகர்' திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், திருக்கடவூர்ப் பிச்சக்கட்டளை திரு. கனகசபைப் பிள்ளை, பேராசிரியர் திரு. மங்கலகிழார், ஆக்கூர் அ. இராமலிங்க முதலியார் முதலிய பெருமக்கள் பலர் விழாவிற் கலந்து கொண்டனர். (1-9-77).





செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலின் திருப்பணியை, முன்னாள் நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள், தொடங்கி வைத்தல் (7-9-77). காஞ்சிபுரம் உதவி ஆணையர் திரு. எ. நாராயணசாமி, B.A., அவர்கள், சென்னைத் துணை ஆணையர் திரு. ஆர். அர்ஜுனன், B.A., அவர்களும் விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பதிவு எண். எம். 7039




திருப்பதியில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் தகவல் தொடர்பு நிலையத்தை, திருமலை-திருப்பதி தேவத்தான நிர்வாக அதிகாரி திரு. பி. எஸ். இராஜகோபால இராஜு, I.A.S., அவர்கள், பீகார் மாநில முன்னாள் ஆளுநர் திரு எம். அனந்த சயனம் ஐயங்கார் B.A.,B.L., அவர்கள் தலைமையிலும், சென்னைத் துணை ஆணையர் திரு. ஆர். அர்ஜுனன், B.A., திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் நிர்வாக அதிகாரி திரு. எஸ். சோமசுந்தரம், B.A.,B.L., அவர்கள் முன்னிலையிலும் 25-9-77 அன்று குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தல்.




வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

முகப்பு:

தருமை ஆதீனத்தின் அருளாட்சியில் உள்ள, வைத்தீசுவரன் கோயில் என வழங்கும், திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருக்கோயிலும், சித்தாமிர்தம் என்னும் திருக்குளமும்.

# திருக்கோயில்

மாலை : 20 | பிங்கள ஆண்டு—கார்த்திகைத் திங்கள் நவம்பர்—1977 | மணி : 2

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள் :

''ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 12/- உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1-/ வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவருமல் தெரிவித்து உதவிஞல்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9.60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 15/-ல் இருந்து ரூ. 20/ ஆக ஜனவரி 77 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

தொடக்கவிழாச் சிறப்புரை
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்,

இராமாநுச நூற்றந்தாதி
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

''அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே''
—ஆசிரியர்

''உயர்வற உயர்நலம் உடையவன்''
—ஆசிரியர்

தெய்வத் துணை
—திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

முத்திநிலை பற்றிய அத்வைதக் கருத்து
—டாக்டர் டி. எம். பி. மகாதேவன், எம். ஏ., பி.எச்.டி

''அடித்தடித்து அக்காரம் தீற்றிய அற்புதம்''
—டாக்டர் தேவசேஞபதி, எம்.ஏ., பி.எச்.டி.

கண்ணபிரானும் உடையவரும்
—ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயில்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ. எம்.ஓ.எல்.

திருச்சிற்றம்பலக் கோவையார்
—ஆசிரியர்

கம்பர் விளக்கும் கவிதை இயல்
—ஆசிரியர்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

# தொடக்கவிழாச் சிறப்புரை★

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம்,
ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை,
சென்னை-34.

**முன்னுரை :**

காஞ்சி ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அவர்களின் அருளாசியுடன் *15-9-1977* முதல் *22-9-77* முடிய எட்டு நாட்கள், சேலம் நகரில் சிறப்புற நடைபெறும் இந்த ''அகில இந்தியக் கோவில் கலாச்சார கலைப் புத்தகக் கண்காட்சி —சமயச் சொற்பொழிவு மகா நாட்டினைத்'' தொடங்கி வைக்கும் சிறந்த நல்ல பேறு பெற்றமைக்காக, யான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இப்பேற்றினை எனக்கு வழங்கிய இம் மாநாட்டுச் செயற் குழுவினர்க்கு என் நன்றியையும், ஸ்ரீ ஆசார்யசுவாமிகள் அவர்களுக்கு என் பணிவான வணக்கங்களையும், அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கோயில்கள் :**

நமது இந்திய அல்லது பாரத தேச மக்களின் கலை கலாச்சாரம்-சமயம் தத்துவம் வாழ்க்கை முறைகள் ஆகிய அனைத்துமே, கோவில்களை அடிப்படையும் நிலைக்களமுமாகக் கொண்டே, அமைந்திருக்கின்றன. குறிப்பிட்டுக் கூறினால், கோயில்களே நமது பழம்பெரும் நாகரிகத்தையும் பண்பாட்டு நலங்களையும் விளக்கிக் கொண்டு நிற்கும் அடையாளங்களாகும். தமிழகக் கோவில்கள், கட்டிடக் கலையிலும், சிற்பத் திறனிலும், ஈடும் எடுப்பும் இன்றிச் சிறந்து விளங்குபவை. ஆழ்வார்களும், நாயன்மார்களும் புகழ்ந்து பாடித் துதித்தவை.

பல்லவர் (கி.பி. *800-900*), சோழர் (*900-1150*), பாண்டியர் (*1100-1350*), விஜயநகர அரசர்கள் (*1340-1565*) மதுரை நாயக்க மன்னர்கள் (*1600-1700*) ஆகிய பேரரசர்கள் பலர் திருப்பணி செய்தனவும், புதிதாக எடுப்பித்தனவும், நன்கொடைகள் பல வழங்கியனவுமாக எண்ணிறந்த கோவில்கள், தமிழகத்தில் உள்ளன. மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவரங்கம், கும்பகோணம், தஞ்சை, மதுரை, திருச்செந்தூர், இராமேசுவரம் முதலிய எத்தனையோ பல தலங்களிலுள்ள கோவில்கள், இன்றும் நாடோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு மகிழும் மாட்சி உடையனவாகத் திகழ்கின்றன.

**வரலாற்றுப்பெருஞ்சிறப்பு :**

இராசசிம்ம பல்லவன் (கி.பி. *685-705*) கட்டிய காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோவில், இரண்டாம் பரமேசுவர வர்மன் (கி.பி. *705-710*) கட்டிய வைகுண்டப் பெருமாள் கோவில், இராசராசசோழன் (கி.பி. *985-1014*) எடுப்பித்த தஞ்சைப் பெரியகோவில், இராசேந்திர சோழன் (கி.பி. *1012-1044*) எடுப்பித்த கங்கை கொண்ட சோழபுரம், கோவில் இரண்டாம் இராசராசன் (கி.பி. *1146-1164*) எழுப்பிய தாராசுரம் கோவில், முதற் குலோத்துங்கன் (கி.பி. *1070-1120*) எழுப்பிய மன்னார்குடி இராஜகோபாலசுவாமி கோவில், மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. *1178-1223*) தோற்றுவித்த திரிபுவனம் கம்பகரேசுவரர் கோவில் முதலியன, எல்லையற்ற வரலாற்றுப் பெருஞ் சிறப்பு வாய்ந்தனவாகும்.

**அயல்நாட்டார் பாராட்டு :**

நமது தமிழகக் கோவில்களை, அயல்நாட்டவரும் கண்டு அகம் மிக மகிழ்ந்து போற்றுகின்றனர். ஆட்சன் (HODGSON) என்ற ஆங்கிலேயர், காஞ்சிபுரம் திருவேகம்பர் கோவில் மதிலைச் செப்பனிட்டார். லியோனார்ட் பிளேசு (LEONARD PLACE) என்னும் அயலவர், மதுராந்தகம் பெருமாள் கோயிலுக்குத்

---

★ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்கள் திருமுன்னிலையில், சேலம் பிரம்ம ஞான சபையில், *15-9-77* முதல் *22-9-77* முடிய நடைபெற்ற ''அகில இந்தியக் கோயில்—கலாசார—கலை—புத்தகக் கண்காட்சி—சமயச் சொற்பொழிவு மாநாட்டினை,'' நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், *I. A. S.,* அவர்கள் தொடங்கி வைத்து நிகழ்த்திய சொற்பொழிவின் தொகுப்புச் சுருக்கக் கட்டுரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. *[15—9—77]* —ஆசிரியர்.

திருப்பணி செய்திருக்கின்றார். வில்லியம் காரோ (WILLIAM GARROW) என்பவர், பவானி சங்கமேசுவரர் கோவில் வேதநாயகி அம்பிகைக்குத் தந்தத்தால் செய்த ஊஞ்சல் ஒன்றை வழங்கி மகிழ்ந்துள்ளார். மதுரைக் கோவில் மீனாட்சியம்மைக்கு, ரூஸ் பீட்டர் (ROUS PETER) என்னும் வெள்ளையர், தங்கத் தாற் செய்த, மணிகள் பதிப்பித்த அங்கவடிகளை அளித்திருக்கின்றார். உலகப் புகழ்பெற்ற சாமர் செட்மாம் (SOMERSET MAUGHAM) என்னும், நாவல் ஆசிரியர் மதுரைக் கோவிலைக் கண்டு வியந்து, விம்மிதமுற்றதாகத் தம்முடைய (A WRITER'S NOTE-BOOK) என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய செய்திகளால் தமிழகக் கோவில்களின் சிறப்பும் பெருமையும் புலனாகும்.

### கட்டிட, சிற்பக் கலைகள் :

தமிழகத்துக் கோவில்கள் பண்டைக்காலத்தில் பல்வேறு அமைப்புக்களைக் கொண்டு விளங்கின. அமைப்பு முறைகளை ஒட்டிக்கோவில்கள் பலவகைப் பெயர்களைப் பெற்றிருந்தன. ஆரூர்ப் பூங்கோவில், கடம்பூர்க் கரக்கோவில் (தேர் போல் அமைந்தது). மீயச்சூர் இளங்கோவில், வைகல் மாடக்கோவில், கருப்பறியல் கொகுடிக்கோவில் என்று இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கும் முன்னரே இருந்து வந்த பலவகைக் கோவில்களின் பெயர்களைத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றார். தமிழகக் கோவில்களின் கட்டிடக் கலைச்சிறப்பும் பெருமையும் சுமத்திரா, ஜாவா, பாலி, போர்னியோ, பர்மா, மலேசியா, இலங்கை, இந்தோனேசியா, சயாம், கம்போடியா, சம்பா முதலிய கடல்கடந்த நாடுகளிலும் பரவி விளக்கமுற்றன. ஜாவாவிலுள்ள போராபுதூர் (கி.பி. 750-850) புத்தர் கோவிலும், கம்போடியா அங்கோர்தாம் (கி.பி. 802-820) சிவன்கோவிலும், அங்கோர்வாட் (கி.பி. 1110-1150) பெருமாள் கோவிலும், தமிழகக்கோவிற் கட்டிடக் கலை, சிற்பக் கலைகளினுடைய வளர்ச்சியின் சிறப்பையும் பரவலையும் விளக்குவனவாகும்.

### ஓவியமும்—காவியமும் :

தமிழகக் கோவில்கள், ஓவியம் காவியம் என்னும் கலைகளின் நிலைக்களமாகத் திகழ்ந்தன. மாமண்டூர்க் குகைக் கோவில் வெளிமண்டபத்தின் தூண்களிலும், மாமல்லபுரம் ஆதிவராக மண்டபத்தின் விதானத்திலும், தஞ்சைப் பெரிய கோவிலின் கருவறை வெளிச் சுற்றுப் புறச் சுவர்களிலும், நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரம் கோவிலிலும், சித்தன்னவாசல் முதலிய இடங்களிலுள்ள, ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழமை மிக்க சிறந்த அழகிய ஓவியங்கள் கண்டு களிக்கத் தக்கவை.

ஒவ்வொரு கோவிலுக்கும், அதனைச் சார்ந்த தலத்திற்கும் எனக் கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, மாலை, அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்களும், தலபுராணங்களும் போன்ற பன்னூற்றுக் கணக்கான இலக்கியச் செல்வங்களாகிய காவியங்கள், மிகப் பலவாகத் தோன்றி விளங்கி வருகின்றன.

### இசைக்கலை :

கோவில்களில் இசைக்கலை பெரிதும் தழைத்தோங்கி வளர்ந்து வந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் ''நாளும் இன்னிசையால்'' தமிழ் பரப்பி வந்தனர். கோவில்களில் வகைவகையான தோற்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, துளைக்கருவி ஆகிய இசைக்கலைக் கருவிகள் பயிலப் பெற்றன. குடுமியான்மலைச் சிகாநாதர் கோவிலில் உள்ள மகேந்திரவர்மனின் (கி.பி. 600-630) கல்வெட்டு, இசைக்கலை உண்மைகள் பலவற்றை அறிவிக்கின்றது. மதுரைக் கோவிலின் திருச்சுற்றில் கூத்தப்பிரான் முன்னிலையில் உள்ள தூண் ஒன்றில் 35 வகையான தாளங்கள் குறிக்கப்பெற்றுள்ளன. தேவார நாயகம், தமிழ் விரகர் என்னும் பெயர்களையுடைய அலுவலர்கள் பலர், பண்டைக்காலத்திற் கோவில்களில் அரிய பல சிறந்த பணிகள் ஆற்றி வந்தனர்.

### நடனக் கலை :

கோவில்களில் இசைத் தமிழேயன்றி, நாடகத் தமிழும் போற்றி வளர்க்கப்பட்ட வந்தது. கதை தழுவி வரும் நாட்டிய நாடகம், மெய்ப்பாடுகளாகிய உணர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்தும் நிருத்தியம், தாளத்தை அடிப்படையாகக் கொண்ட நிருத்தம், இவற்றோடு தொடர்புடைய கவுத்துவம் முதலியன, கோவில்களில் போற்றி வளர்க்கப்பட்டன. திருவண்ணாமலை, சிதம்பரம், தஞ்சாவூர் முதலிய கோவில்களில் சிவபிரான் ஆடியருளும் தாண்டவத்தின் 108 கரண வகைகள், சிற்பமாக வடித்துத் தரப்பெற்றுள்ளன. கோவில்களில் ஆடலரங்கும், நாடகசாலைகளும் இருந்தன. இசையிலும் நாடகத்திலும் வல்ல நாடகமாராயன், சாக்கைக்கூத்தன், கானம்பாடி, வாத்தியமாராயன் முதலியோர் பலர் இருந்தனர்.

### கல்வெட்டுக்கள் :

நம்முடைய முன்னோர்களின் வரலாற்றுச் செய்திகள், ஆட்சிமுறைகள் முதலியவற்றை அறிந்து கொண்டு நாம் பயன்பெறுவதற்கும், கோவில்கள் பெரிதும் துணை புரிகின்றன. கோவில்கள் காணப்பெறும் பல்லவர் சோழர் பாண்டியர் ஆகிய அரசர்கள் பற்பலரும் அமைத்து வைத்த பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்கள், பண்டைக்காலத்தில் சமயம், சமுதாயம், வரலாறு, இலக்கியம், மக்களின் வாழ்க்கை நிலை, பழக்க வழக்கப் பண்பாடுகள் முதலியவற்றை அறிவித்து உதவும் பெருஞ் சான்றுகள் ஆக நின்று நிலவுகின்றன.

உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோவிலின் மேற்குச் சுவரிலுள்ள முதலாம்

பராந்தக சோழனின் கல்வெட்டுகள் இரண்டு (கி.பி. 919-921), இந்நாளிற் போல ஊராட்சி முறை, வாரியங்கள், ஊராட்சித் தேர்தல் முறை, உறுப்பினர் ஆதற்குரிய தகுதிகள், உறுப்பினர் ஆக விரும்புபவர்பால் இருக்கக் கூடாத குற்றங்கள் என்பவற்றைப் பற்றிய செய்திகளை எல்லாம் தெளிவுற விளக்குகின்றன.

**கலைவளர் கழகங்கள் :**

கோவில்களில் புராணங்கள் முதலிய இலக்கியங்களைப் படித்து விளக்கும் படன மண்டபம், நடனமண்டபம், நாடக மண்டபம், தருக்க மண்டபம், முதலியவை இருந்தன. திருவொற்றியூர்க் கோவிலில் வியாகரணதான வியாக்கியான மண்டபம் என ஒன்று இருந்ததாகக் கல்வெட்டுக் கூறுகின்றது. இவற்றிலெல்லாம் பல்வேறு கலைகளும் நூல்களும் பயிலவும் ஆராயவும் பரப்பவும் பெற்று வந்தன.

பண்டைக் காலததில் கோவில்கள், பல்வேறு கலை நூல்களையும் ஓலையேட்டில் எழுதி வைத்துப் பாதுகாக்கும் நூலகங்களாகவும் (Libraries), விற்றல்—வாங்கல் முதலியவற்றிற் குரிய பத்திரப் பதிவுகள் செய்யும் ஆவணக் களரிகளாகவும் (Registration Offices), பயன் பட்டு வந்தன. இவைகள் சரசுவதி பண்டாரம், திருக்கைக்கோட்டி என்னும் பெயர்களைப் பெற்றிருந்தன.

**நீதி மன்றம் :**

பொது மக்களின் குறைகளைக் கேட்டு விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் நீதிமன்றங்களாகவும் கோவில்கள் பணியாற்றி வந்தன. சுந்தரர்க்கும் இறைவனுக்கும் நேர்ந்த வழக்கு திருவெண்ணெய் நல்லூர்க் கோவிலிலும், நீலி என்பவளுக்கும் வணிகன் ஒருவனுக்கும் நேர்ந்த வழக்கு பழையனூர்த் திருவாலங்காட்டுக் கோவிலிலும், விசாரிக்கப் பெற்றன என்னும் இலக்கிய செய்திகள், இங்கு நாம் நினைவுகூரத்தகும். திருமாற்பேறு, கூகூர், திருவெறும்பியூர், திருப்பனந்தாள் முதலிய தலங்களின் கல்வெட்டுக்களும், கோவில்கள் பண்டை நாளில் நீதி மன்றங்களாகத் திகழ்ந்து வந்த செய்தியினை உணர்த்துகின்றன.

**அறச்சாலைகள் :**

கோவில்கள் பலவகை அறச்செயல்கள் நடைபெறுவதற்குரிய நிலைக்களமாக இருந்தன. கோவில்களை அடுத்துப் பல திருமடங்களும், அறச்சாலைகளும் தோன்றி நடைபெற்று வந்தன. திரிபுவனம், எண்ணாயிரம், திருமுக்கூடல், பாகூர் முதலிய இடங்களில் சிறந்த கல்வி நிலையங்களும், அவற்றில் பயிலும் மாணவர்களுக்கு இலவச உண்டி உறையுள் வசதிகளும், மிகப் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை கல்வெட்டுக்களால் புலனாகின்றது.

**மருத்துவமனை :**

மக்களின் மலப்பிணிப்பை அகற்றி, உயிர் நோயைத் தீர்ப்பதற்கென அமைந்த கோவில்களில், அவர்களின் உடற்பிணிகளைத் தீர்த்து உதவுவதற்கும் தக்க வசதிகள் செய்யப் பெற்றிருந்தன. திருமுக்கூடல், திருவாவடுதுறை, திருவாமாத்தூர் முதலிய பல தலங்களில் மருத்துவ மனைகளும், திக்கற்றோர் இல்லங்களும் நடத்தப் பெற்றன.

**நிதி நிலையம் :**

தமிழகக் கோவில்கள், இந்நாளைய நிதி வைப்பு நிலையங்களாகிய வங்கிகள் போலவும், பண்டு பொதுமக்களுக்குப் பணி புரிந்து வந்தன. திருப்புத்தூர், குமாரமார்த்தாண்டபுரம், காஞ்சி, இராமேசுவரம் முதலிய கோவில்களின் கல்வெட்டுக்களால் இவ்வுண்மையை அறியலாம். கோவிலுக்கு வரும் நன்கொடைகளைப் பெறவும், கோவில் பண்டாரத்திலிருந்துபொருள்களைக் குறித்த வட்டிக்குக் கடன் தரவும், இவற்றின் தொடர்பான பத்திரங்களைப் பாதுகாக்கவும், கோவில் தொடர்புடைய வேலைகள் பலவற்றைக் கவனிக்கவும், அமிர்தகணத்தார் என்னும் குழுவினர் இருந்தனர்.

**தொழில் நிறுவனம் :**

பொது மக்கள் நலனுக்கு இன்றியமையாத சிறந்த பல உதவிகளைச் செய்வதில் கோவில்கள் முனைந்து நின்றன. இந்நாளைய ''தொழில் தரும் நிறுவனங்கள் போலக் கோவில்களில் பண்டாரர்கர்—கணக்கர்—பரிசாரகர்—திருவிளக்கிடுவோர்-மாலைகட்டுவோர்-திருமுறை ஓதுவோர்-வண்ணம் இடுவோர்-சுண்ணம் தீற்றுவோர்-சோதிடர்--தச்சர்--தட்டார்--கன்னார்--குயவர்-நாவிதர்-வண்ணார் முதலிய தொழிலாளர்கள், பற்பலர் நியமிக்கப் பெற்றிருந்தனர். இவர்களுக்குப் பரம்பரையாக வேலையும் மானியமும் அளிக்கப்பட்டன.

**பணி நிலையம் :**

கோவில்கள், படையெடுப்புகள் நிகழும் போதும், போர்கள் ஏற்படும் போதும் மக்களுக்குப் புகலிடம் அளிக்கும் அரண்களாகவும், வலிமை வாய்ந்த கோட்டைகளாகவும், படைவீடுகளாகவும் பயன்பட்டன. நாட்டில் பஞ்சம் முதலிய தீங்குகள் ஏற்படும்போது, தத்தம் பண்டாரத்திலிருந்து உணவளிப்பும் பொருளுதவிகளும் பிறவும் செய்யும் பணி நிலையங்களாகவும் கோவில்கள் திகழ்ந்து வந்தன.

இதுகாறும் கூறி வந்தவற்றால் நம் தமிழ் நாட்டிற் பழங்காலத்தில் கோவில்களே கல்விக் கழகங்களாகவும், ஆவணங்களாகவும், அறம் கூறும் மன்றங்களாகவும் அறச்சாலைகளாகவும் மருத்துவ மனைகளாகவும், மக்களுக்குத்தொழில்

தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவும் நிதிநிலையங்களாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி வந்தமை உணரலாம்.

**தத்துவ நுட்பங்கள் :**

கோவில்கள் என்பது வெறும் கட்டிடங்கள் அல்ல. கோவில்களின் அமைப்பு முறைகள், எத்தனையோ பல தத்துவ நுட்பங்களையும், யோக ஞான அனுபவச் செய்திகளையும் உட்கொண்டனவாகத் திகழ்ந்தன. பண்டைய நம் தமிழ்ச் சான்றோர்களாகிய திருமூலர் போன்ற தவ ஞானயோகச் செல்வர்கள்,

''உள்ளம் பெருங்கோவில் ஊன்உடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

என்பன போன்ற பாடல்களினுல், கோவில் அமைப்பு முறைகளின் உட்கிடையாக உள்ள தத்துவ நுட்பங்கள் பலவற்றை விளக்கியுள்ளனர்.

நம் தமிழ்ச் சான்ருேர்கள், யோகஞான நுண்ணுணர்வால் தமது உடம்பையே ஒரு கோவிலாகக் கண்டுணர்ந்தனர். அதனுல் கோவில்களை ஓர் உடம்புபோல் அமைத்து வைத்தனர். நம் உடம்பின்கண் முதன்மையான ஆறு இடங்கள் உள்ளன எனவும், அவை மூலம் கொப்பூழ் மேல்வயிறு நெஞ்சம் மிடறு புருவ நடு என்னும் ஆறும் ஆகும் எனவும் கண்டறிந்தனர். யோக நூல்கள் இவற்றை மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களாகக் கூறும். மூலாதாரம் எருவாய் கருவாய்க்கு இடையே நிலத்தின் தன்மையும், கொப்பூழ் நீரின் தன்மையும், மேல்வயிறு நெருப்பின் தன்மையும், நெஞ்சம் வளியின் தன்மையும், மிடறு விசும்பின் தன்மையும் உடையதாக விளங்கும். புருவநாடு என்பது இடை, பிங்கலை, சுழுமுனை நாடிகள் கலக்கும் இடமாகத் திகழும். இவ்விடங்களில் இறைவனின் அருள்மிகு விளக்கத்தைக் கண்டு தொழுது வழிபட்ட நம் தமிழ்ச் சான்ருேர்கள். தாம் அகத்தே கண்டறிந்த இறையருள் நிலையினை, ஏனைய எளிய பொது மக்களும் உணர்ந்து பயன்பெறுதற் பொருட்டு, அவ்வியல்பு பிழையாமல் புறத்தேயும் ஆறு இடங்களில் பொருத்தமுற ஆறு பெருந் திருக் கோவில்களாக அமைத்து வைத்துள்ளனர்.

நிலத்தின் தன்மையுடைய மூலாதாரத் தலமாகப் புற்றிடம் கொண்ட பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கின்ற திருவாரூரையும் (காஞ்சிபுரத்தையும்), நீரின் தன்மையுடைய கொப்பூழ் ஆக நீருறும் தலமாகிய திருவானைக் காவையும், உணவைச் செறிப்பிக்கும் நெருப்பின் தன்மையுடைய மேல் வயிருக நெருப்பியற் பாறைகள் மிகுந்த திருவண்ணுமலையையும், மூச்சுவளி இயங்கும் நெஞ்சமாக இறைவன் திருநடம்புரியும் தில்லைச் சிற்றம்பலத்தையும், விசும்பின் தன்மை நிலைபெறும் மிடற்றின்கண் திருக்காளத்தியையும், இடை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகள் கூடும் புருவ நடுவாக யமுனை கங்கை சரசுவதி என்னும் மூன்று ஆறுகள் கூடுகின்ற காசியையும், இவற்றிற்கு மேற்பட்ட பிரமரந்திரம் என்னும் தலை உச்சியாகத் திருக்கயிலையினையும், சிறந்த முறையில் பலவகைகளில் பொருந்துமாறு உருவகம் செய்து நம் சான்ருேர்கள் கோவில்களை அமைத்துள்ள நுட்பம் அறிந்து மகிழ்தற்குரியது. தமிழகத்தின் திருக்கோவில்கள் பற்றிய இன்னேரன்ன நுட்பச்செய்திகள் மிகப் பல.

குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே?

—திருநாவுக்கரசர்.

**முடிவுரை :**

இத்தகைய சிறப்புமிக்க கோவில்களே, நம்முடைய நலங்கருதி நமக்காக நம் முன்னேர்கள் அமைத்து வைத்து அளித்துச் சென்ற அரும்பெரும் கலைச் செல்வங்களாகும்.

''சேலேறிய வயல் தென்காசி ஆலயம்,
தெய்வச் செய
லாலே சமைந்தது, இங்கு என் செயல் அல்ல,
அதனை இன்னும்
மேலே விரிவு செய்தே புரப்பார்
அடிவீழ்ந்து, அவர்தம்
பால் ஏவல் செய்து பணிவேன்
பராக்ரம பாண்டியனே''

எனத் தென்காசி விசுவநாதர் கோவிலைக் கட்டிய பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1422-1463) பாடிய உருக்கம் மிக்க கல்வெட்டுச் செய்யுள் போன்றவை, நாம் நம் கோவில்களைத் தம் பண்டைப் பெருமையில் சிறிதும் குன்ருமல் போற்றிக் காத்து வளர்த்து வரவேண்டிய பொறுப்பையும் கடமையும் உணர்த்துவன வாகும்.

**

# இராமாநுச நூற்றந்தாதி

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

இராமாநுச நூற்றந்தாதி என்பது, திருவரங்கத்து அமுதனார் என்னும் சிறந்த வைணவப் பெருஞ் சான்றோரால் அருளிச் செய்யப்பட்ட ஓர் அரும்பெரும் நூல் ஆகும். அவர் பங்குனித் திங்களில், அஸ்த நட்சத்திரத்தில், மூங்கிற் குடியில் அவதரித்தவர். திருவரங்கம் பெரிய கோயிலில் பணி புரிந்து கொண்டு இருந்து வந்ததனால், இவருக்குப் பெரிய கோயில் நம்பி என்றும், ஒரு சிறப்புப் பெயர் வழங்கும். அஷ்டப் பிரபந்தம் என்னும் எட்டு அரும் பெரும் நூல்களைச் செய்தருளியவரும், பட்டர் திருவடிகளில் ஈடுபட்டு உய்ந்தவருமான அழகிய மணவாள தாசர் என்னும் திவ்வியகவிப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்க்கு, இவர் தந்தையார் என்று சிலரும், பாட்டனார் என்று சிலரும் கூறுவர். இவர் பல கலைகளையும் கற்று வல்லவராகித் தமக்குக் குலமரபு உரிமையாகக் கிடைத்த திருவரங்கம் திருக்கோயிற் புரோகிதத் தொழிலையும், புராணபடனத் திருத்தொண்டையும் செய்துகொண்டு, மிகவும் சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

திருவனந்தாழ்வானின் திருவவதாரமாய்த் தோன்றிய எம்பெருமானார் என்னும் இராமாநுசர், இவரைத் திருத்திப் பணி கொள்ளத் திருவுள்ளம் பற்றினர். அப்பொறுப்பைக் கூரத்தாழ்வான் பக்கல் ஒப்படைத்தார். கூரத்தாழ்வாரும் இவரை ஞானச்சுடர் கொளுவி, எம்பெருமானார் திருவடிக்கீழ்க் கொணர்ந்து சேர்த்தருளினர். எம்பெருமானார் இவரைக் குளிரக் கடாட்சித்து, கூரத்தாழ்வான் பக்கலிலேயே ஆச்ரயிக்கும்படி நியமித்தார். அதன் படியே இவரும் ஆழ்வானை ஆச்ரயித்துத் தத்துவ இத புருஷார்த்தங்களை ஐயம் திரிபறத் தெளிந்து, அவர்தம் திருவடிகளிலேயே மிகவும் ஈடுபாடு கொண்டு ஒழுகி வந்தார்.

இவ்வாறு இருக்கையில், தமது ஆசாரியரான கூரத்தாழ்வான் உகக்கும்படி, அவர்தம் ஆசாரியரான இராமாநுசர் மீது, ஒன்றிரண்டு பிரபந்தங்களைப் பாடி, அவற்றை இராமாநுசர் திருமுன்பு கொண்டு சென்று வைத்தார். எம்பெருமானாரும் அவற்றை அவிழ்த்துக் கடைக்கணித்தார். தம்மைப் பெரிதும் புகழ்ந்து போற்றிய நூல்கள், தமது திருவுள்ளத்துக்கு இசைந்திராமையால், அவரை நோக்கி, நம்மைப் பற்றிப் பிரபந்தம் பாட உமக்கு விருப்பம் இருக்குமாயின், ஆழ்வார்களிடத்திலும், திவ்வியதேசங்களினிடத்தும், நமது ஈடுபாடு தோன்றுமாறு ஒரு பிரபந்தம் செய்க என்று நியமித்தருளினர். அதன்படியே பெரியகோயில் நம்பிகள், இராமாநுசர்க்கு ஆழ்வார்களிடத்திலும், திவ்விய தேசங்களிடத்திலும் உள்ள அளவற்ற அன்பை நன்கு விளங்க வைத்து ''இராமாநுச நூற்றந்தாதி'' என்னும் இந்தப் பிரபந்தத்தை இயற்றினர்.

இயற்றிய பின்னர் அதனை எடுத்துச் சென்று, இராமாநுசர் திருவடிகளில் வைத்து வணங்கினர். ''இந்நூலைச் செவி சாய்த்துக் கேட்டு ஏற்றருளல் வேண்டும்'' என்று பணிவுடன் வேண்டிக் கொண்டார். அதற்கு இசைந்த இராமாநுசர், கூரத்தாழ்வான் முதலான பலரும் பேரோலக்கமாக இருக்க, மற்றைய முதலிகளோடும் திருச்செவி சார்த்திப் பெரிதும் மகிழ்ந்து, தம் திருவடிகளில் தொடர்புடையார்களுக்கெல்லாம், இந்தப் பிரபந்தத்தை அன்று தொடங்கி என்றும் நாள் தோறும் ஓதிவரும்படி கற்பித்தருளினர். அன்றியும் ''பெரியகோயில் நம்பி'' என்றே முன்னர்ப் பெரிதும் வழங்கப் பெற்று வந்த இவரை, இவர்தம் வாக்கு, அமுதமயமாய் இருந்ததனால், ''திருவரங்கத்து அமுதனார்'' என்றே, யாவரும் சிறப்பாக வழங்கும்படி அருள் புரிந்தார். அதுமுதல் இராமாநுச நூற்றந்தாதி பாடிய, பெரியகோயில் நம்பிக்குத் திருவரங்கத்து அமுதனார் என்ற திருநாமமே மிகவும் சிறப்பாக வழங்கத் தொடங்கிற்று.

இப்பிரபந்தம் இராமாநுசர் காலத்தில் தோன்றியதாயினும், பெரிய பெருமாளால் அமுதனார்க்கு அருளப் பாடிட்டு, இராமாநுசரால் திருச்செவி சார்த்தப் பெற்றது ஆதலால், இதுவும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களோடு ஒன்றாகச் சேர்த்து வைத்து, ஓதப் பெறுவதாயிற்று. திருக்கார்த்திகைக்குப் பின்னர் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களுக்கு ஏற்பட்டுள்ள அத்யயனம் இதற்கும் ஏற்புடையதாகும்.

## பிரபந்ந காயத்திரி :

முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா திருவாய்மொழி என்கிற நான்கு ஆயிரம் பாடல்களுள் இயற்பாடலின் சரமப் பிரபந்தமாக இந்த அந்தாதி சேர்க்கப்பட்டுள்ளது. பிரணவ அர்த்தமான முதலாயிரத்தோடு, நம்மாழ்வார் பற்றிய பாகவத சேஷத்துவத்தை விளக்கும் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் பாசுரத்தைச் சேர்த்தாற் போல, கைங்கரியத்தில்

களையறுப்பதான இயற்பாவுடனே இதனையும் சேர்த்து ஓதுதல், மிக்க பொருத்தமுடைய தேயாகும்.

## அந்தாதி :

நூறு வெண்பாவினலாயினும், நூறு கட்டளைக் கலித்துறையினலாயினும், அந்தாதித் தொகையாய்ப் பாடுவது நூற்றந்தாதியாகும். இத் திவ்வியப் பிரபந்தம் நூறு பாடல்களுக்கு மேல், எட்டுப் பாடல்கள் மிகுதியாகக் கொண்டுள்ளது. இங்ஙனம் இப்பிரபந்தத்தில் நூறு பாடல்களுக்கு மேல், நூற்றெட்டுப் பாடல்கள் அமைந்திருப்பதற்கும், பாடல்தோறும் இராமாநுசரின் திருப்பெயர் குறிக்கப் பெற்றிருப்பதற்கும், ஒரு சிறந்த காரணம் உண்டு. இராமாநுசர் திருவடிகளில் மிக்க அன்பு பூண்ட பாகவதர்களுக்கு, இப் பிரபந்தம் காயத்திரிபோல நாள்தோறும் ஓதப்படத் தக்கதாக விளங்குதல் வேண்டும் என்று கருதியே, பாடல்தோறும் இராமாநுசரின் திருப்பெயரை அமைத்து, இதனை நூற்றெட்டுப் பாடல்கொண்ட நூலாகத் திருவரங்கத்தமுதனர் செய்தருளினர் என்று பெரியோர்கள் கூறுவர். இந்நூலினைப் ''பிரபந்த காயத்திரி'' என்றும், ''பிரபந்த சாவித்திரி'' என்றும் வைணவப் பெருமக்கள் பாராட்டி ஓதி மகிழ்வர்.

முன்னை வினையகல, மூங்கிற் குடியமுதன்,
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும்,—என்னுடைய
சென்னிக் கணியாகச் சேர்த்தினேன், தென்புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்? (1)

நயந்தரு பேரின்பம் எல்லாம்
பழுதென்று, நண்ணினர்பால்
சயந்தரு கீர்த்தி இராமா
நுசமுனி தாளிணைமேல்,
உயர்ந்த குணத்துத் திருவரங்
கத்தமுது, ஓங்குமன்பால்
இயம்புங் கலித்துறை யந்தாதி
ஓத, இசை நெஞ்சமே (2)

சொல்லின் தொகைகொண் டுனதடிப்
போதுக்குத் தொண்டுசெய்யும்
நல்லன்பர் ஏத்தும் உன்நாமம் எல்லாம்,
என்றன் நாவினுள்ளே
அல்லும் பகலும் அமரும்படி
நல்கு, அறுசமயம்
வெல்லும் பரம, இராமாநுச,
இதென் விண்ணப்பமே. (3)

என்னும் மூன்று தனியன்களும், எல்லாத் திவ்விய தேசங்களிலும், இராமாநுச நூற்றந்தாதிக்கு உரியவையாக ஓதப் பெற்று வருகின்றன.

இனிஎன் குறைநமக்கு? எம்பெரு
மானர் திருப்பெயரால்
முனிதந்த நூற்றெட்டுச் சாவித்திரி
என்னும் நுண்பொருளைத்
தனிதந்த செஞ்சொற் கலித்துறை
அந்தாதி பாடித் தந்தான்,
புனிதன் திருவரங் கத்தமுது
ஆகிய புண்ணியனே.

என்ற மற்றொரு தனியனும், இராமாநுச நூற்றந்தாதி நூலுக்குரியதாகச் சில திவ்விய தேசங்களில் ஓதப்பெற்று வருகின்றது. இவற்றால் இந்நூலின் அருமை பெருமைகளை யாவரும் உணரலாம்.

## பிங்கள ஆண்டு :

இராமாநுசர் பிங்கள ஆண்டு திருவவதரித்தவர். ஆதலின், அவர் அவதரித்த பிங்கள ஆண்டின் பெயர்கொண்டு நிகழும் இந்தப் பிங்கள ஆண்டில், இராமாநுசரின் 700-ஆம் ஆண்டுவிழா எங்கணும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகின்றது. அதனையொட்டி, நம் ''திருக்கோயில்'' இதழில் இராமாநுச நூற்றந்தாதி என்னும் நூலின் பாடல்கள், அன்பர்களுக்குப் பயன்படும் பொருட்டுப் பொழிப்புரையுடன் வெளியிடப் பெறுகின்றன.

## நூற் பொழிப்புரையும், மூலமும்

### (1) சொல்லுவோம் இராமாநுசன் நாமங்களே :

நெஞ்சமே! தாமரை மலரில் நிலைபெற்ற திருமகள், அதனை விட்டு வந்து பொருந்துதற்கு ஏற்ற திருமார்பை உடையவனுன, பெருமாளின் புகழ் படிந்த பாடல்கள் நிலைபெற்ற ஊற்றமுடையவரான நம்மாழ்வார் திருவடிகளை வணங்கி உய்ந்தவரும், பற்பல கலைகளை உணர்ந்த பெருமக்கள் நிலைபெறும்படி இவ்வுலகில் வந்து தோன்றியவரும், ஆகிய எம்பெருமானருடைய திருவடித் தாமரைகளை, நாம் நிலைபெற்று வாழ்வதற்காக, அவரது சிறப்புமிக்க திருப்பெயர்களையே இடையறாது சொல்லி வாழ்த்துவோம்.

பூமன்னும் மாது பொருந்திய
மார்பன், புகழ்மலிந்த
மாமன்னும் மாதவன் அடிபணிந்து
உய்ந்தவன், பல்கலையோர்
தாம்மன்ன வந்த இராமா
நுசன் சரணுவிந்தம்,
நாம்மன்னி வாழ, நெஞ்சே
சொல்லுவோம் அவன் நாமங்களே.

### (2) விள்ளாத அன்பன் இராமாநுசன்:

தேன் நிறைந்த சோலைகளை உடைய, தென் திருவரங்கத்திலே பள்ளிகொள்ளும் பெருமாளினுடைய, தாமரை மலர்போன்ற திருவடிகளைத் தமது நெஞ்சில் வைத்துத் துதியாத மனிதர்களை விட்டொழிந்து, திருமங்கையாழ்வார் திருவடிகளிலே, என்றும் விட்டு நீங்காத பக்தியை உடையவரான இராமாநுசரின் சிறந்த சீலகுணத்தைத் தவிர, வேறு ஒன்றையும் என் நெஞ்சு நினைக்க மாட்டாது. இவ்வாறாக எனக்கு வாய்த்த சிறந்த இந்த இயல்பிற்கு, யான் ஒரு காரணத்தையும் அறியகில்லேன்.

கள்ளார் பொழில்தென் அரங்கன்
கமலப் பதங்கள்நெஞ்சிற்
கொள்ளா மனிசரை நீங்கிக்
குறையல் பிரான்அடிக்கீழ்

விள்ளாத அன்பன் இராமாநுசன்
மிக்க சீலம் அல்லால்
உள்ளது என்நெஞ்சு ஒன்றறியேன்
எனக்குஉற்ற பேரியல்பே.

## (3) பொருவருஞ்சீர் இராமாநுசன் :

மிகவும் சிறந்த இயல்பை உடைய நெஞ்சமே! அசுரப் பிறப்பை உடையவர்களான நீசர்களோடு எனக்கிருந்த தொடர்பை ஒழித்து, ஒப்பற்ற குணங்களை உடையவரும், சிறந்த ஒழுக்கம் உடையவரும், அன்பர்களுடன் கலந்து பரிவுடன் பழகும் பண்புவாய்ந்தவரும், ஆகிய இராமாநுச முனிவரரிடத்தில், அன்பு செய்கின்ற சிறந்த பேறு உடைய கூரத் தாழ்வான் போல்வாருடைய திருவடியின்கீழ், என்னையும் கொண்டுபோய்ச் சேர்த்த பேருத விக்காக, நின்னை யான் அடிபணிந்து வணங்கு கின்றேன்.

பேரியல் நெஞ்சே அடிபணிந்தேன்
உன்னைப், பேய்ப்பிறவிப்
பூரியரோடு உள்ள சுற்றம்
புலர்த்திப், பொருவருஞ்சீர்
ஆரியன் செம்மை இராமாநுச
முனிக்கு அன்புசெய்யும்
சீரிய பேறுடையார், அடிக்கீழ்
என்னைச் சேர்த்ததற்கே.

## (4) முதல்வனையே பன்னப் பணித்த இராமாநுசன் :

காலம் முதலிய எல்லாப் பொருள்களுக் கும், மூல முதல்வனான இறைவனையே எல் லாரும் உணர்ந்து நினைந்து உய்யும்படி, தாம் இயற்றிய ஸ்ரீபாஷ்யம் என்னும் விரிவுரை நூலால் அருள்புரிந்த, சிறப்புமிக்க இராமா நுசர், இவ்வுலகில் மிக இழிந்த என்னையும் ஒரு பொருளாக்கி, எனது பாவங்களை அடியோடு வேர்அற நீக்கித், தமது திருவடிகளையும் எனது தலையிலே நான் உகந்து தரிக்கும்படியாக வைத் தருளினன். இவ்வளவு பேரருள் பெற்றவனா கிய பிறகு, எனக்கு இனி எவ்விதமான குறை யும் இல்லை. *(4)*.

என்னைப் புவியில் ஒருபொருள்
ஆக்கி, மருள்சுரந்த
முன்னைப் பழவினை வேரறுத்து,
ஊழி முதல்வனையே
பன்னப் பணித்த இராமாநுசன்
பரன் பாதமும்,என்
சென்னித் தரிக்க வைத்தான், எனக்கு
ஏதும் சிதைவுஇல்லையே!

## (5) எனக்கு உற்ற செல்வம் இராமாநுசன் :

நாம் பெறுதற்குரிய செல்வமாகத் திகழ் பவர் இராமாநுசரே என்று தெளிந்து, அவர் பால் அன்பு கொள்ள மாட்டாத, குற்றம் பொருந்திய மனத்தையுடைய மனிதர்கள், இந்நூலைப் படிப்பார்களாயின், அவர்களுடைய பழிப்பே இதற்குப் புகழாக அமையும். இறை வனுடைய என்றுமுள்ள சிறந்த திவ்விய குணங்களுக்குத் தகுதியான அன்பை உடைய, அருளாளர்களாகிய, பெருமக்கள், இந்நூல் பக்தியோடு கூடிய சிறப்பு மிக்கது என்று திரு வுள்ளம் பற்றி, இராமாநுசருடைய திருப் பெயர்களைச் சொல்லுகின்ற இந்தப் பாமாலை யில் உள்ள குற்றங்களைத் தம் உள்ளத்தில் சிறிதும் கொள்ளமாட்டார்கள்.

எனக்குற்ற செல்வம் இராமாநுசன்
என்று, இசையகில்லா
மனக்குற்ற மாந்தர் பழிக்கில்
புகழ், அவன் மன்னியசீர்
தனக்குற்ற அன்பர் அவன்திரு
நாமங்கள் சாற்றும், என்பா
இனக்குற்றம் காணகில்லார், பக்தி
ஏய்ந்த இயல்பு இதுஎன்றே

## (6) மயல்கொண்டு வாழ்த்தும் இராமாநுசன் :

நல்ல சொற்களும், அவற்றின் பொருள் களும் பொருந்துமாறு தொடுத்து, அமைத்துப் பாடுகின்ற சிறந்த கவிஞர்கள், அன்பினால் மிகுந்த பெருங் காதல் கொண்டு, துதித்து வாழ்த்துகின்ற இராமாநுசருடைய பெரும் புகழை, பக்தியற்ற என்னுடைய பாவம்மிக்க நெஞ்சினாலே கவிதையினால் எடுத்துச் சொல்லு வதற்கு,யான் என் அறியாமையினால் முயற்சி செய்கின்றேன்.

இயலும் பொருளும் இசையத் தொடுத்து,
ஈன்கவிகள் அன்பால்
மயல்கொண்டு வாழ்த்தும் இராமா
நுசனை, மதியின்மையால்,
பயிலும் கவிகளில் பக்தியில்
லாத என்பாவி நெஞ்சால்
முயல்கின்றனன், அவன்றன் பெருங்
கீர்த்தி மொழிந்திடவே.

## (7) பழியைக் கடத்தும் இராமாநுசன் :

சொற்களால் எடுத்துச் சொல்லுதற்கு அப்பாற்பட்டுக் கடந்து நிற்கும் பெரும் புகழை உடையவரும், கல்விச் செருக்கு-செல்வச் செருக்கு-குலச்செருக்கு என்னும் மூவகைச் செருக்குகளாகிய படுகுழிகளைக் கடந்திருப்ப வரும், நம் தலைவருமான கூரத்தாழ்வான் திருவடிகளைச் சரணடைந்த பிறகு, எல்லாப் பாவங்களையும் கடக்கும்படி செய்கின்ற இராம மாநுசனின் புகழைப் பாடி, தீயவழிகளைத் தப்பிப் பிழைத்தல், இனி எனக்கு ஒரு சிறிதும் வருத்தமற்ற எளிய செயலேயாகும்.

மொழியைக் கடக்கும் பெரும் புகழான்,
வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்
சரண் கூடியபின்,
பழியைக் கடத்தும் இராமாநுசன்
புகழ் பாடி, அல்லா
வழியைக் கடத்தல், எனக்கு இனி
யாதும் வருத்தம் அன்றே.

## (8) பரமன் இராமாநுசன் :

வருத்தத்தைத் தருகின்ற இழிந்த புறப் பொருள்களைப் பற்றுகின்ற அறியாமை என்னும் இருளைப் போக்குவதற்காக, நமது குலத்தின் தலைவரான பொய்கையாழ்வார் முற்காலத்

தில் வேத வேதாந்தங்களில் பதிந்து கிடக்கும் பொருள்களையும், செந்தமிழ்ச் சொற்களையும் சேர்த்து, இரண்டையும் ஒரு திரியாக்கி ஒளி வீசும்படி செய்த முதல் திருவந்தாதியாகிய திருவிளக்கை, தனது திருவுள்ளத்தில் வைத்துக் கொண்டிருக்கின்ற மேலான தலைவனாகிய இராமாநுசன், எங்களுக்குக் கடவுள் ஆவார்.

*வருத்தும் புறவிருள் மாற்ற, எம்*
*பொய்கைப் பிரான் மறையின்*
*குருத்தின் பொருளையும், செந்தமிழ்*
*தன்னையும் கூட்டி, ஒன்றத்*
*திரித்து, அன்று எரித்த திருவிளக்கைத்,*
*தன் திரு உள்ளத்தே*
*இருத்தும் பரமன், இராமா*
*நுசன் என் இறையவனே.*

## (9) ஆளும் இராமாநுசன் ;

எல்லாவற்றிற்கும் தலைவனான திருமாலைக் காண்பதற்குத் துணையான இருதயத்தில், இருளாகிய அறியாமை அழியும்படி, ஞானம் என்கின்ற நிறைவிளக்கை ஏற்றிய, பூதத்தாழ்வார் திருவடிகளைத் தமது நெஞ்சத்தில் எப்போதும் தங்கியிருக்கும்படி வைத்து அனுபவிக்கின்ற இராமாநுசரின் புகழ்களை, இடைவிடாது துதிக்கின்ற நல்லோர்கள்தாம், இவ்வுலகத்தில் வேதங்களைப் பாதுகாத்து, என்றைக்கும் அழிவில்லாதபடி நிலையாகப் பாதுகாப்புச் செய்ய வல்லவர்கள் ஆவர். [திருவடி- ஆசார்யன், வணங்கத் தக்க பெரியோன்.]

*இறைவனைக் காணும் இதயத்து,*
*இருள்கெட, ஞானம்என்னும்*
*நிறைவிளக்கு ஏற்றிய பூதத் திருவடி*
*தாள்கள், நெஞ்சத்து*
*உறையவைத்து ஆளும்இராமாநுசன்*
*புகழ் ஓதும் நல்லோர்,*
*மறையினைக் காத்து, இந்த*
*மண்ணகத்தே மன்ன வைப்பவரே*

## (10) தமிழ்த்தலைவன் இராமாநுசன் :

ஒருவராலும் போக்க முடியாதபடி நிலைத்து நிற்கின்ற அறியாமையாகிய பெரிய இருளானது, முற்பட்ட பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் என்னும் இருவரும் ஏற்றிய திருவிளக்கால் அழிந்தொழிந்த பிறகு, திருக்கோவலூரில் திருமகளாகிய பிராட்டியோடு, கோவலனாகிய பெருமாளைக் கண்டு வணங்கியதை, ''திருக்கண்டேன்'' முதலிய பாடல்களினால் வெளியிட்டு உணர்த்திய, தமிழ்த் தலைவராகிய பேயாழ்வாரின் அழகிய திருவடிகளைப் போற்றுகின்ற இராமாநுசருக்கு அன்புபூண்ட பக்தர்களின் திருவடிகளைத், தம் தலையில் சூடுகின்ற செல்வத்தைப் பெற்றவர்கள், எக்காலத்தும் சிறப்பு மிக்கவர்களாவர்.

*மன்னிய பேரிருள் மாண்டபின்,*
*கோவலுள் மாமலராள்*
*தன்னொடு மாயனைக் கண்டமை*
*காட்டும் தமிழ்த் தலைவன்,*
*பொன்னடி போற்றும் இராமாநுசற்கு*
*அன்பு பூண்டவர் தாள்*
*சென்னியிற் சூடும் திருவுடையார்,*
*என்றும் சீரியரே.*

## (11) தார் இயல் சென்னி இராமாநுசன் :

சிறந்த நான்கு வேதங்களிலும் உள்ள, செம்மை வாய்ந்த பொருள் நுட்பங்களை, அழகிய தமிழ்ப் பாடல்களால் அருளிச் செய்தவரும், உலகமெங்கும் பொருந்திய புகழ் வாய்ந்தவரும் ஆகிய, திருப்பாணாழ்வாரின் திருவடிகளாகிய தாமரை மலர்களால், அழகு செய்யப் பெற்ற திருமுடியை உடைய இராமாநுசரைப், புகலிடமாகப் பற்றியவர்களின் நல்லொழுக்கச் சிறப்பானது, கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் இத்தகையதென்று என்னால் அளவிட்டுச் சொல்லித் தலைக்கட்ட முடியாதது ஆகும்.

*சீரிய நான்மறைச் செம்பொருள்,*
*செந்தமிழால் அளித்த*
*பாரியலும் புகழ்ப் பாண்பெருமாள்,*
*சரணஅம் பதுமத்*
*தாரியல் சென்னி இராமாநுசன்*
*தன்னைச் சார்ந்தவர்தம்*
*காரிய வண்மை, என்னால் சொல்லொணாது*
*இக் கடலிடத்தே.*

## (12) இணையடி அடங்கும் இதயத்து இராமாநுசன்:

உலகமெங்கும் பரவிய பெரும் புகழை உடையவரான, திருமழிசையாழ்வாரின் திருவடிகள் இரண்டும், குடிகொண்டு இருக்கப் பெற்ற திருவுள்ளத்தைஉடைய இராமாநுசரின் அழகிய பொன்போன்ற திருவடிகளை, எக்காலத்திலும் இதுவே நமக்கு இயல்பாகும் என்னும் அறிவுடன், புகலடைதலாகிய செல்வத்தை உடைய பெருமக்களுக்குத் தவிர, மற்றவர்களுக்கு அன்புபூண்டிராத மிக்க உறுதியையுடைய ஞானிகளுக்கு மட்டும்தான், அடியேன் அன்புசெய்பவனாக இருப்பேன்.

*இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கு*
*இறைவன், இணையடிப்போது*
*அடங்கும் இதயத்து இராமாநுசன்,*
*அம்பொற் பாதம் என்றும்*
*கடம்கொண்டு இறைஞ்சும் திருமுனிவர்க்கு*
*அன்றிக், காதல்செய்யாத்*
*திடங்கொண்ட ஞானியர்க்கே, அடியேன்*
*அன்பு செய்வதுவே*

## (13) மெய்யன் இராமாநுசன் :

அழகு செய்யப் பெற்ற பசுமையான, வேலைப்பாடு மிக்க துளசிமாலையையும், செந்தமிழில் இயற்றப் பெற்ற வேதங்களுக்குச் சமமான, திருமாலை திருப்பள்ளியெழுச்சி என்னும் திவ்வியப் பிரபந்தங்கள் ஆகிய சொல் மாலைகளையும், என்றும் மாறுத சிறப்புடைய திருவரங்கநாதனின் திருவடிகளில் அணிவிக்கின்ற தொண்டரடிப் பொடியாழ்வார் என்னும் சான்றோரின் திருவடிகளைத் தவிர, வேறு எதனையும் விரும்பாத, மெய்யன்பை உடைய இராமாநுசரின் திருவடிகளே எனக்குச் சிறந்த புகலிடமாகும்.

செய்யும் பசுந்துளவத் தொழில்
மாலையும், செந்தமிழிற்
பெய்யும் மறைத்தமிழ் மாலையும்,
பேராத சீர்அரங்கத்து
ஐயன் கழற்கு அணியும் பரன்தாள்
அன்றி, ஆதரியா
மெய்யன், இராமாநுசன் சரணே
கதி வேறுஎனக்கே.

## (14) பரமன் இராமாநுசன் :

கொல்லிநாட்டுக் காவலராகிய குலசேகர ஆழ்வார், வேதச் சொற்களைப் பதித்து, கலை நலம் கனியப் பாடிய பெருமாள் திருமொழி என்னும் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பாடுகின்ற, பெரியோர்களின் திருவடிகளையே துதிக்கின்ற மேலானவராகிய இராமாநுசர், என்னை விட்டு நீங்குகின்றாரில்லை. அதனால், மேல் அடைய வேண்டிய வீடுபேறு ஆகிய கதிக் காகப் பதற்றமடைந்து, வெப்பம் மிகுந்த காடுகளிலும், மலைகளிலும், கடல்களிலும் சென்று நின்றுகொண்டு, எல்லா உறுப்புக் களும் கொதிக்கும்படி, மிகவும் வருந்தித் தவம் செய்கின்ற இயல்பினை, யான் விடுத் தொழித்தேன். இராமாநுசர் என்னைக் கை விடாமல் காப்பாராதலால், யான் வருத்தம் மிக்க தவங்களைச் செய்ய வேண்டாமலே, மிகவும் எளிதாக வீடு பேற்றின்பத்தை அடைந்துவிடுவேன்.

கதிக்குப் பதறி, வெம்கானமும்
கல்லும் கடலும்எல்லாம்
கொதிக்கத், தவம்செய்யும் கொள்கையற்றேன்,
கொல்லி காவலன்சொற்
பதிக்கும் கலைக்கவி பாடும்
பெரியவர் பாதங்களே,
துதிக்கும் பரமன் இராமாநுசன்
என்னைச் சோர்விலனே.

## (15) பேராத உள்ளத்து இராமாநுசன் :

ஒருநாளும் குறைவுபடாத அன்பின் பெரிய சுழியிற் படுவதனால், பழமையாக என்றும் உள்ள திருமாலின் இயல்பைச் சிறி தும் ஆராய்ந்து பாராமல், அப்பெருமானை நோக்கிப் பல்லாண்டு பல்லாண்டு என்று வாழ்த்திக் காப்பிடுதலையே, தமக்குரிய இயல் பாகக் கொண்ட பெரியாழ்வாரின் திருவடிகள், என்றும் விட்டகலாத திருவுள்ளத்தை உடைய இராமாநுசரின், பெருமை மிக்க சிறந்த பண்பு களை நினைந்து உய்தி பெறாத அறிவற்ற மனிதர் களை, யான் ஒருபோதும் சேரமாட்டேன். எனக்கு இனி என்ன குறை உள்ளது?

சோராத காதற் பெருஞ்சுழிப்பால்,
தொல்லை மாலை ஒன்றும்
பாராது, அவனைப் பல்லாண்டு என்று
காப்பிடும், பான்மையர்தாள்
பேராத உள்ளத்து இராமா
நுசன் தன், பிறங்கியசீர்
சாரா மனிசரைச் சேரேன்,
எனக்கு என்ன தாழ்வுஇனியே?

## (16) வள்ளல் இராமாநுசன் :

திருவரங்க நாதனுடைய திருமுடியில் சார்த்தக்கடவதான, பூமாலையைத் தன்னுடைய கூந்தலில் அணிந்து சூடிக்கொண்டு கொடுத் தவளாகிய, ஆண்டாள் நாச்சியாரின் பழமை யான அருளால் வாழ்கின்றவரும், வள்ளலும் ஆகிய இராமாநுசர் என்னும் சிறந்த முனிவர், ஒரு குறையும் இல்லாமலிருந்த வேதங்கள், அற்ப அறிவினர்களால் இழிவு செய்யப்பெற்று, உலகம் முழுவதையும் கலிபுருடனே தனியாட்சி செலுத்தப்பெற்ற, கொடிய காலத்தில் வந்து அவதரித்து, வேதத்தின் சிறப்பை நிலைநாட்டி, உலகத்தையும் பலவகைகளில் பாதுகாத்து உய்யுமாறு செய்தருளியவர் ஆவார்.

தாழ்வுஒன்றில்லா மறைதாழ்ந்து,
தலம்முழுதும் கலியே
ஆள்கின்ற நாள்வந்து அழித்தவன் காண்மின்,
அரங்கர் மவுலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக்
கொடுத்தவள் தொல் அருளால்,
வாழ்கின்ற வள்ளல் இராமாநுசன்
என்னும் மாமுனியே.

## (17) இனியான் எங்கள் இராமாநுசன் :

எல்லாக் கலைகளாலும் துதிக்கப்படுகின்ற வனும், ஒப்பற்ற யானை போன்றவனும் ஆகிய, திருக்கண்ணமங்கைப் பத்தர்ஆவிப்பெருமாள் மீது, ஓதுபவர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்கின்ற திவ்வியப் பிரபந்தத் தமிழ்ப் பாடல்களை அருளிச் செய்த, நீலன் என்னும் திருமங்கையாழ்வார்க்கு இவ்வுலகில் மிக இனியவரும், எங்களுக்குத் தலைவரும் ஆகிய இராமாநுசரை அன்புடன் வந்து பணிந்த பெரியோர்கள், எவ்வளவுதான் துன்பங்கள் வந்து தம்மைப் பொருந்தினாலும், சிறிதும் வருந்தமாட்டார்கள். அவ்வாறே இன்பம் வந்தாலும் அளவுகடந்த மகிழ்ச்சி கொள்ள மாட்டார்கள்.

முனியார் துயரங்கள் முந்திலும்,
இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம், கண்ணமங்கை
நின்றானைக், கலைபரவும்
தனியானைத், தண்டமிழ் செய்த
நீலன் தனக்கு, உலகில்
இனியானை, எங்கள் இராமா
நுசனை வந்து எய்தினரே.

## (18) உய்தற்குதவும் இராமாநுசன் :

நம்முடைய ஆராய்ச்சி அறிவினால் அணுகுதற்கு இயலாத, அளவற்ற வேதங்களை, இனிய தமிழ் ஆகிய ஆயிரம் பாடல்களினால், திருவாய்மொழியாக அருளிச் செய்யும் பொருட்டு, இவ்வுலகில் வந்து தோன்றிய கோபர் என்னும் நம்மாழ்வாரைத், தம் திருவுள்ளத்தினுள் எப்பொழுதும் தியானிப்ப தற்கு உறுதிகொண்டு இசைந்த, பெரியவ ராகிய மதுரகவியாழ்வார் பெருமையினை, உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் உணர்ந்து

உய்வதற்கு உதவி புரிகின்ற இராமானுசரே, எங்களுக்கு உற்ற துணையாவார்.

எய்தற்கு அரிய மறைகளை,
ஆயிரம் இன்தமிழாற்
செய்தற்கு உலகில் வரும்சட
கோபனைச், சிந்தையுள்ளே
எய்தற்கு இசையும் பெரியவர்
சீரை, உயிர்களெல்லாம்
உய்தற்கு உதவும், இராமா
நுசன் எம் உறுதுணையே

## (19) ஆரமுதாம் இராமானுசன் :

சிறந்த பெரிய செல்வமும், தந்தையாரும், தாயாரும், உயர்ந்த ஆசாரியரும், மணம் வீசுகின்ற செந்தாமரையிலுள்ள திருமகள் கேள்வனாகிய திருமாலும் ஆகிய எல்லாம், நம்மாழ்வார் தமக்கு விளங்கப் பெற்ற இறையருட் குணங்களை முறையே அருளிச் செய்த செந்தமிழ் வேதமாகிய திருவாய்மொழியே யாகும் என்று, நீண்ட இவ்வுலகத்திலுள்ளோர் யாவரும் அறியும்படிச் செய்த இராமானுசரே, எனக்கு அரிய அமிழ்தம் போன்ற இன்பப் பொருளாவார்.

உறுபெரும் செல்வமும், தந்தையும்,
தாயும், உயர்குருவும்,
வெறிதரு பூமகள் நாதனும்,
மாறன் விளங்கியசீர்
நெறிதரும் செந்தமிழ் ஆரணமே என்று,
இந்நீள் நிலத்தோர்
அறிதர நின்ற இராமானுசன்,
எனக்கு ஆரமுதே.

## (20) மாநிதியாம் இராமானுசன் :

சந்தனச் சோலைகளையுடைய அழகிய திருக்குருகூரில் தோன்றியருளிய, பேருபகாரகர் ஆகிய நம்மாழ்வார் அருளிய, அமிழ்தம் போன்ற திருவாயினின்று வெளிப்பட்ட ஈரத் தமிழ் ஆகிய, திருவாய்மொழியின் இசையை அறிந்தவர்களுக்கு இனியவராய் இருப்பவர்களுடைய சிறப்பைப், பலகாலும் பயின்று உய்தி பெறும் சீலத்தை உடையவரான நாதமுனிகளின் திருவருள் திறத்தினைத், தம் நெஞ்சினால் வாரிப் பருகி மகிழ்கின்ற இராமானுசர், என்னுடைய சிறந்த பெருஞ் செல்வமாவார்.

ஆரப் பொழில்தென் குருகைப்பிரான்,
அமுதத் திருவாய்
ஈரத் தமிழின் இசைஉணர்ந்
தோர்கட்கு, இனியவர்தம்
சீரைப் பயின்றுய்யும் சீலங்கொள்
நாதமுனியை, நெஞ்சால்
வாரிப் பருகும் இராமானுசன்
என்றன் மாநிதியே

## (21) கதிபெற்றுடைய இராமானுசன் :

தூய ஒழுக்கமுடைய துறவிகளுக்கெல்லாம் தலைவரான, யமுனைத் துறைவர் என்னும் ஆளவந்தாரின் இணையடிகளாகிய சிறந்த துணையைப் பெற்றுள்ள, இராமானுசர் என்னைக் காத்தருளினர். ஆதலின் இனி யான், அற்பர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களின் வாயில்களைப் பற்றிக் கொண்டு, 'செல்வமாகிய மழையைப் பொழிகின்ற மேகமே' என்று பொய்யான புகழுரைகளைக் கற்பனையாகப் பாடி அலைந்து திரிந்து, இவ்வுலகில் ஒருபோதும் வருந்தமாட்டேன்.

நிதியைப் பொழியும் முகில்என்று,
நீசர்தம் வாசல்பற்றித்
துதிகற்று, உலகில் துவள்கின்றிலேன்
இனி; தூய்நெறிசேர்
எதிகட்கு இறைவன், யமுனைத்
துறைவன் இணையடியாம்
கதிபெற் றுடைய, இராமானுசன்,
என்னைக் காத்தனனே.

## (22) சேம வைப்பாம் இராமானுசன் :

கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்ற கார்த்திகேயனாகிய முருகனும், யானை முகத்தையுடைய விநாயகரும், சுடர்விடுகின்ற மூன்று கண்களை உடைய மூர்த்தியாகிய சிவபெருமானும், துர்க்கையும், வெப்பு நோய்த் தெய்வமும், புறமுதுகு காட்டிப் பயந்தோடிச் சென்று, ''மேல் கீழ் நடு என்னும் மூன்று உலகங்களையும் திருவுந்தியாகிய தாமரை மலரில் தோன்றும்படி செய்தவனே, எம்மைக் காத்தருள்க'' என்று போற்றிட, வாணாசுரனின் பிழையைப் பொறுத்து அருள்புரிந்த, தீர்த்தனாகிய திருமாலை, நாளும் புகழ்ந்து துதிக்கின்ற இராமானுசர், எனக்கு எய்ப்பில் வைப்பு என்னும் பாதுகாப்புச் சேமநிதியாவார்.

கார்த்திகை யானும், கரிமுகத்
தானும், கனலும்முக்கண்
மூர்த்தியும், மோடியும், வெப்பும்
முதுகிட்டு, மூவுலகும்
பூத்தவனே என்று போற்றிட,
வாணன் பிழைபொறுத்த
தீர்த்தனை ஏத்தும் இராமானுசன்,
என்றன் சேமவைப்பே

## (23) எப்போதும் வைக்கும் இராமானுசன் :

நல்ல சிறந்த அன்பர்கள், 'நமக்கு எய்ப்பில் வைப்பாக விளங்கிப் பயன்பட்டுப் பாதுகாக்கின்ற சிறந்த பொருள்' என்று தெளிந்து, தம்முடைய மனத்தின்கண் வைத்துப் போற்றி வழிபடுகின்ற இராமானுசனை, இந்தப் பெரிய உலகத்தில் ஒப்பு எவரும் இல்லாத, மிகக் கொடிய பாவியாகிய யான், என்னுடைய வஞ்சகம் நிறைந்த நெஞ்சில் மறவாமல் பதித்து வைத்து, எக்காலத்தும் வாழ்த்தி வணங்குவேன். மிகச்சிறந்த சான்றோர் ஆகிய இராமானுசரை, நான் வாழ்த்துதல் ஆகிய இந்தச் செயல், அவருடைய சிறந்த மிக்க புகழுக்கு என்ன தீங்கு பயக்குமோ?

வைப்பாய வான்பொருள் என்று,
நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமா
நுசனை, இருநிலத்தில்
ஒப்பார் இலாத உறுவினையேன்,
வஞ்ச நெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன், என்னாம்இது?
அவன் மெய்ப்புகழ்க்கே!

## (24) மெய்ஞ்ஞானத்து இராமாநுசன் :

முற்காலங்களிலெல்லாம், பலபல பிறவிகள் தோறும் என்னுடைய உயிரை மொய்த்து நெருங்கிச் சூழ்ந்து கொண்டிருக்கின்ற, கொடிய தீய பாவங்களினுல், யான் நரை திரை மூப்புப் பிணிகளை அடைந்து, அவற்ருல் மிகவும் துன்புற்று வருந்தி இளைத்துக் களைத்து விட்டேன். பொய்யான இழிந்த தவம் என்னும் பெயர்கொண்ட, அவச் செயல்களைப் போற்றி வருகின்ற இழிந்த சமயங்கள், இவ்வுலகில் வேரற்று ஒழியும்படி அழித்தருளிய, உண்மை ஞானத்தை உடைய இராமாநுசர் என்னும் மழை மேகத்தை, இன்று கண்டு வணங்கி, அதனுல் யான் சிறந்த பல பேறுகளைப் பெற்றேன்.

மொய்த்தவெம் தீவினையால் பல்உடல்தொறும்
மூத்து, அதனுல்
எய்த்தொழிந்தேன் முனநாட்கள் எல்லாம்;
இன்று கண்டு உயர்ந்தேன்,
பொய்த்தவம் போற்றும் புலைச் சமயங்கள்,
நிலத்து அவியக்
கைத்த மெய்ஞ்ஞானத்து, இராமாநுசன்
என்னும் கார்தனையே!

## (25) கார்ஏய் கருணை இராமாநுசன் :

மேகம் போன்ற அளவற்ற கருணையை உடைய இராமாநுசரே! துன்பங்களுக்கெல்லாம் நேரான உறைவிடமாக இருந்து வருபவன் நான். இத்தகைய என்னைத் தாங்கள் ஏற்றருளி அருள்செய்த பிறகு, உம்முடைய சிறந்த நல்ல அருட் பண்புகள், என் உயிர்க்கு உயிராக அமைந்து, அடியவனுகிய எனக்கு இப்பொழுதெல்லாம் இன்பத்தை விளைத்துத் தித்திப்பாக விளங்கி வருகின்றன. கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில், நும்முடைய அருளின் சிறப்பினை, யார்தான் அளவிட்டு அறிய வல்லவர்கள்? யாராலும் இயலாது.

கார்ஏய் கருணை இராமாநுச,
இக் கடலிடத்தில்
ஆரே அறிபவர் நின்அருளின்
தன்மை? அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான்,
நீ என்னை உற்றபின், உன்
சீரே உயிர்க்குயிராய், அடியேற்கு
இன்று தித்திக்குமே.

## (26) திக்குற்ற கீர்த்தி இராமாநுசன் :

என்னுலே செய்யப்பெற்ற பாவங்களாகிய, நிலையான பெரிய குற்றங்களையெல்லாம் போக்கியருளி, அம்மகிழ்ச்சியினுல் ஒளிவிளங்கப்பெற்று, மேகம் போன்ற வள்ளன்மை உடையவரும், திசைகளிலெல்லாம் சென்று பரவி விளங்கும் புகழையுடையவரும், ஆகிய இராமாநுசரைச் சென்று சேருகின்ற நல்லவர்கள், எத்தகைய குற்றத்தை உடையவர்களாயினும், எந்த இழிபிறப்பை உடையவர்களாயினும், எவ்வகையான ஒழுக்கத்தை உடையவர்களாயினும், அந்தக் குற்றமும், அந்தப் பிறப்பும், அந்த ஒழுக்கமுமே, நம்மை அடிமைகொள்ள வல்லனவாகும்.

திக்குற்ற கீர்த்தி இராமாநுசனை,
என் செய்வினையாம்
மெய்க்குற்றம் நீக்கி விளங்கிய மேகத்தை,
மேவும் நல்லோர்
எக்குற்ற வாளர்? எது பிறப்பு?
ஏது இயல்பாக நின்ருேர்?
அக்குற்றம், அப்பிறப்பு, அவ்வியல்பே,
நம்மைஆட் கொள்ளுமே!

## (27) வஞ்சர்க்கு அரிய இராமாநுசன் :

நெஞ்சில் பலவகையான களங்கங்களைக் கொண்ட கம்சனைச், சினந்து அழித்த குற்றமற்றவனும், பஞ்சுபோலும் மெல்லிய திருவடியை உடைய நப்பின்னையின் காதலனும், ஆகிய நம்முடைய கண்ணபிரானின் திருவடிகளைப் புகலடையாத, வஞ்சகர்கள் அணுகுதற்கு இயலாத, இராமாநுசரின் புகழைத் தவிர, வேறு எதனையும் என் வாய் கொஞ்சிக் குலாவித் துதிக்க மாட்டாது. எனக்கு இன்று எத்தகைய மேலான சிறந்த வாழ்வு கைகூடியுள்ளது!

நெஞ்சில் கறைகொண்ட கம்சனைக்
காய்ந்த நிமலன், நங்கள்
பஞ்சித் திருவடிப் பின்னைதன்
காதலன், பாதம் நண்ணு
வஞ்சர்க்கு அரிய இராமாநுசன்
புகழ்அன்றி, என்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது, என்ன வாழ்வு?
இன்று கூடியதே!

## (28) வீட்டின்கண் வைத்த இராமாநுசன் :

தென்குருகை என்னும் ஆழ்வார் திருநகரியில் தோன்றியருளிய, பேருபகாரகர் ஆகிய நம்மாழ்வாரின் பாடல்கள் என்று சொல்லப்படும், வேதப் பசுந்தமிழ் ஆகிய திருவாய்மொழியினைத் தம்முடைய பக்தி என்கின்ற திருமாளிகையில் போற்றி வைத்துப் பாதுகாத்தருளிய, இராமாநுசரின் சிறந்த புகழ் மிக்க பண்புகளை, உள்ளபடி அறிந்த சிறந்த பாகவதர்களின் திருக்கூட்டங்களை, என்னுடைய கண்கள் கண்டு இன்பம் எய்துவதற்கு, அவருடைய திருவருள், என்று எனக்குக் கிடைக்குமோ?

கூட்டும்விதி என்று கூடுங்கொலோ?
தென்குருகைப் பிரான்
பாட்டு என்னும் வேதப் பசுந்தமிழ்
தன்னைத், தன்பக்தி என்னும்
வீட்டின்கண் வைத்த இராமாநுசன்
புகழ் மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள் தன்னை, என் நாட்டங்கள் கண்டு
இன்பம் எய்திடவே!

## (29) அன்பன் அனகன் இராமாநுசன் :

மிகவும் பழமை வாய்ந்த இவ்வுலகத்தில் நிலைபெற்றுள்ள, பலவகையான உயிர்களுக்கும் தலைவன், வியக்கத் தகுந்த மாயைச் செயல்களை உடைய திருமாலே என்று, தம்முடைய நூல்களால் விளக்கி நிலைநாட்டிய பேரருளாளரும், குற்றமற்றவருமாகிய இராமாநுசர், என்னை ஆட்கொண்டருளினுர். ஆதலின்

இன்பந் தருகின்ற சிறப்பு மிக்க வீடுபேறுதான், என்னை வந்து அடைந்தால் என்ன? அல்லது எண்ணில்லாத துன்பங்களைத் தருகின்ற பல வகையான நரகங்கள்தாம், என்பால் வந்து சூழ்ந்து கொண்டால் என்ன? எனக்கு ஒரு கவலையுமில்லை.

இன்பந்தரு பெருவீடு வந்து
எய்தில்என்? எண்ணிறந்த
துன்பந்தரு நிரையம்பல
சூழில்என்? தொல்லுலகில்
மன்பல் உயிர்கட்கு இறையவன்,
மாயன் எனமொழிந்த,
அன்பன் அனகன் இராமாநுசன்,
என்னை ஆண்டனனே!

## (30) அன்பாளன் இராமாநுசன் :

மனமே! நாட்களாகவும் மாதங்களாகவும் ஆண்டுகளாகவும், இங்ஙனம் கழிந்து செல்லுகின்ற எல்லாக் காலங்களிலும், திரண்டு பலவகைப்பட்ட பிறவிகள் தோறும், நாம் அலைந்து திரிந்து உழன்று வந்தோம். அத்தகைய நாம், இன்று ஓர் எண்ணமும் இல்லாதிருந்தே, காணத் தகுந்த அழகிய தோள்களை உடைய பெரியவரும், தென் அத்தியூரர் என்னும் காஞ்சிபுரம் வரதராசராகிய பேரருளாளப் பெருமாளின் திருவடிகளில் அன்பு பூண்டவருமாகிய, இராமாநுசர்பால் சென்று அடையப் பெற்றோம். நாம் பெற்ற சிறந்த பேறுதான் எத்தகையது!

ஆண்டுகள் நாள் திங்களாய், நிகழ்காலம்
எல்லாம் மனமே
ஈண்டு பல் யோனிகள்தோறு உழல்வோம்,
இன்று ஓர் எண் இன்றியே,
காண்டகு தோள் அண்ணல், தென்அத்தி
யூரர் கழலிணைக் கீழ்ப்
பூண்ட அன்பாளன், இராமா
நுசனைப் பொருந்தினமே.

## (31) அருந்தவன் இராமாநுசன்

அற நெறிகளையும், செயல்களையும் அழிக்கின்ற கலிபுருடனால், பலவகை வருத்தங்களை அடைந்த இவ்வுலகத்தைத், தம்முடைய பெருங் கருணையினால் வந்து நிலைநிறுத்திப் பாதுகாத்தவரும், சரணாகதி என்னும் பிரபத்தி மார்க்கத்தை அறிவுறுத்திக் கடைப்பிடித்தவரும் ஆகிய, எங்கள் இராமாநுசரைப் புகலடைந்தவர்களுக்குச் சிறப்புமிக்க, ஒளிநலமும், பொறுமையும், புலன் அடக்கும் ஆற்றலும், புகழும், நல்ல திருத்தமான மெய்யுணர்வும், மேலான செல்வங்களும் எல்லாம், வந்து அடையும்.

பொருந்திய தேசும் பொறையும்
திறலும் புகழும், நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும்
சேரும்; செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால்
வந்து எடுத்து அளித்த
அருந்தவன், எங்கள் இராமா
நுசனை அடைபவர்க்கே.

## (32) பூதலம் காக்கும் இராமாநுசன் :

இலைகள் நெருங்கிப் பொருந்திய, தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் திருமகளின் கேள்வனாகிய திருமாலின் கையிலுள்ள, சுதர்சனம் என்னும் சக்கரப்படையுடன், நாந்தகம் என்னும் வாளும், கௌமோதகி என்னும் கதையும், ஒளிமிகுந்த சார்ங்கம் என்னும் வில்லும், பக்கத்தில் உள்ள அழகுமிக்க பாஞ்ச சன்னியம் என்னும் சங்கும், ஆகிய ஐந்தும், இந்தப் பூவுலகத்தைக் காக்கும் பொருட்டு, இவ்வுலகத்தில் இராமாநுச முனிவராகத். திருவவதாரம் செய்தருளின.

அடைஆர் கமலத்து அலர்மகள் கேள்வன்,
கை ஆழி என்னும்
படை யோடு, நாந்தகமும், படர்தண்டும்,
ஒண்சார்ங்க வில்லும்,
புடையார் புரிசங்கமும், இந்தப் பூதலம்
காப்பதற்கு என்று
இடையே, இராமாநுச முனி
ஆயின, இந்நிலத்தே.

## (33) நயப்புகழ் இராமாநுசன் :

உலகத்தை வருத்தப்படுத்திக் கொடுமை செய்து உண்ணுகின்ற, நீசனாகிய கலிபுருடனின், நினைக்கவும் இயலாத அளவற்ற வல்லமையை அடக்கியும்கூட, இராமாநுசரின் சிறந்த புகழானது, பெருமையின் விளக்கத்தைத் தரவில்லை. ஆனால், என்னால் ஏராளமாகச் செய்யப் பெற்ற பாவங்கள், தென்புலமாகிய எமன் உலகத்தில் எழுதி வைக்கப் பெற்றிருந்த, புத்தகக் கட்டுகளை எரித்தொழித்த பிறகே, நல்ல விளக்கத்தைப் பெறுவதாயிற்று.

நிலத்தைச் செறுத்து உண்ணும் நீசக்
கலியை, நினைப்பரிய
பெலத்தைச் செறுத்தும் பிறங்கிய தில்லை,
என் பெய்வினை, தென்
புலத்தில் பொறித்த அப்புத்தகச்
சும்மை பொறுக்கியபின்,
நலத்தைப் பொறுத்தது, இராமா
நுசன்தன் நயப்புகழே.

## (34) மயலே பெருகும் இராமாநுசன் :

இவ்வுலகத்தில் யான் வேறு எந்தத் தெய்வத்தையும் விரும்பமாட்டேன். அற்பர்களாகிய சில அறிவற்ற மனிதர்களை 'மேகம் போன்று கைம்மாறு கருதாத பெரிய வள்ளலே' என்று புகழ்ந்துபோற்றிக் கவிதைகள் பாடமாட்டேன். திருவரங்கம் என்று ஒருவர் சொல்லிய அளவிலேயே, அளவற்ற பெருங் காதல் மயக்கம் கொள்ளுகின்ற, இராமாநுசரின் தாமரை மலர் போன்ற திருவடிகளை, ஒருபொழுதும் மறக்கமாட்டேன். இந்நிலையில் யான் செய்த கொடிய பாவங்கள், எவ்வகையில் என்பால் நெருங்கி வந்து என்னைத் துன்புறுத்த முடியும்?

நயவேன் ஒருதெய்வம் நானிலத்தே,
சில மானிடத்தைப்
புயலே! எனக் கவிபோற்றி செய்யேன்,
பொன்அரங்கம் என்னில்
மயலே பெருகும் இராமாநுசன்,
மன்னும் மாமலர்த் தாள்
அயரேன், அருவினை என்னை எவ்வாறு
இன்று அடர்ப்பதுவே!

## (35) படரும் குணன் இராமாநுசன் :

பகைவர்களை அழிக்கவல்ல, ஆற்றல் மிக்க சக்கரப் படையை உடையவனும், எல்லா உயிர்களுக்கும் தலைவனும் ஆகிய கண்ண பிரான், அன்றொரு காலத்தில் அருச்சுனனுக் குச் சாரதியாக இருந்து, வேதங்களாகிய கடலில் மறைந்து கிடந்த நல்ல பொருள் நுட் பங்களாகிய மணிகளைக் கீதையின் மூலமாக உபதேசித்தருள, அதன்பின்பும் உலகிலுள்ள வர்கள் உலகவாழ்க்கைத் துன்பமாகிய படு குழியில் விழுந்து வருந்தி நிற்க, அந்தக் கீதை யின் ஒளிமிகுந்த ஞானப் பொருளைக்கொண்டு, உலகமக்களை எல்லாம் உய்விக்கும் பெருங் கருணையுடன், தாமும் அவர்களின் பின் தொடர்ந்து செல்லுகின்ற, சிறந்த குணத்தை உடையவர் இராமாநுசர். எங்களுடைய இராமாநுசரின் சிறந்த இயல்பு இதுவாகும்!

அடல்கொண்ட நேமியன், ஆருயிர் நாதன்,
அன்று ஆரணச்சொற்
கடல்கொண்ட ஒண்பொருள் கண்டு அளிப்பப்,
பின்னும் காசினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத், தானும் அவ்
ஒண்பொருள் கொண்டு, அவர்பின்
படரும் குணன், எம் இராமா
நுசன் படி இதுவே.

## (36) குடிகொண்ட கோயில் இராமாநுசன் :

உலகமெங்கும் பரவிய புகழை உடைய, இராமாயணம் என்கின்ற பக்தி வெள்ள மாகிய கடல், என்றும் குடிகொண்டு தங்கி வாழ்கின்ற கோயில் என்று சொல்லும்படி யான, திருவுள்ளத்தை உடைய இராமாநுசரின் குணங்களைப் புகழ்ந்து துதிக்கின்ற, அன்பர் களின் மணம் நிறைந்த தாமரை மலர்போன்ற திருவடிகளை அடைந்து, உள்ளம் உருகுகின்ற நல்லோர்கள், 'இவனுடைய உயிரானது இரா மாநுசர்க்கு அடிமைப் பட்டது' என்ற மூல காரணத்தைத் தெரிந்து கொண்டு, என்னையும் விரும்பி அந்த இராமாநுசர்க்கு ஆளாகும் படிச் செய்தருளினார்கள்.

படிகொண்ட கீர்த்தி இராமாயணம்,
என்னும் பக்திவெள்ளம்
குடிகொண்ட கோயில் இராமாநுசன்,
குணங்கூறும் அன்பர்
கடிகொண்ட மாமலர்த்தாள் கலந்து,
உள்ளம்கனியும் நல்லோர்,
அடிகொண்டு கொண்டுகந்து என்னையும்
ஆள்அவர்க்கு ஆக்கினரே!

## (37) வாக்கிற் பிரியா இராமாநுசன் :

புண்ணிய புருடர்களாகிய பாகவதர் களின், திருவாக்கினின்று சிறிதும் பிரியாமல், அவர்களால் எப்பொழுதும் புகழ்ந்து துதிக்கப் படுகின்ற இராமாநுசரே! நீர், என்னை இன்றைத் தினத்தில் ஒரு பொருளாகும்படி செய்து வைத்து, நுமக்கு அடிமை செய்யும் திருத் தொண்டில் நிலைநிற்குமாறு செய்தருளினீர். இன்று இங்ஙனம் செய்தருளிய தாங்கள், முற் காலமெல்லாம் வாணாளை வீணாளாகக் கழிக்கும் படி, என்னை நும் அருளுக்குப் புறம்பான, இழி செயல்களில் கிடந்து உழலும்படி தள்ளி வைத் தது எதன் பொருட்டு? தங்களுடைய திரு வருளின் திறத்தை ஆராய்ந்தால், இஃது எனக்குத் தெரிந்து கொள்ள இயலாததாக இருக்கின்றது. ஆதலின் இந்த நுண்பொருளைத் தாங்களே எனக்கு விளக்கியருளுதல் வேண்டும்.

ஆக்கி அடிமை நிலைப்பித்தனை
என்னைஇன்று ; அவமே
போக்கிப் புறத்திட்டது என்பொருளா
முன்பு? புண்ணியர்தம்
வாக்கிற் பிரியா இராமாநுச,
நின்அருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால், உரையாய்
இந்த நுண்பொருளே!

## (38) சேமங்கள் செய்யும் இராமாநுசன் :

நெஞ்சே! செல்வம் என்றும், புதல்வர்கள் என்றும், நிலம் என்றும், பூச்சூடிய கூந்தலை யுடைய அழகிய பெண்கள் என்றும், இங்ஙனம் பலவாறாக மயக்கங்கொண்டு, இளைத்து வருந்து கின்ற நமக்கு, அறியாமை காரணமாக வரு கின்ற கொடிய துன்பங்களைப் போக்கித், தமது எல்லையில்லாத பெரிய புகழைக் கொடுத்து, இராமாநுசர் செய்தருளுகின்ற நல்ல சிறந்த சேமச் செயல்கள், மற்று உள்ளவர்களுக்குச் செய்கின்ற தன்மையில் அமைந்தனவோ? நமக்கு அவர் செய்தருளுகின்ற செயல்கள், தனிப் பெருஞ் சிறப்புள்ள மேலான நன்மைச் செயல்கள் அல்லவோ?

பொருளும், புதல்வரும், பூமியும்,
பூங்குழலாரும் என்றே,
மருள் கொண்டு இளைக்கும் நமக்கு, நெஞ்சே,
மற்றுளார் தரமோ?
இருள் கொண்ட வெந்துயர் மாற்றித், தன்
ஈறில்பெரும் புகழே
தெருளும் தெருள் தந்து, இராமாநுசன்
செய்யும் சேமங்களே!

## (39) வாமனன் சீலன் இராமாநுசன் :

அனைவருக்கும் இன்ப மயமான நல்ல வீடு பேறும், சிறந்த செல்வமும், உயர்ந்த அறச் செயலும், சிறப்புமிக்க நல்ல காம நலமும், ஆகிய இவை நான்கையும், ஒவ்வொரு மனித னும் பெறுதற்குரிய சிறந்த உறுதிப் பொருள் கள் (புருடார்த்தங்கள்) என்று, பெரியோர்கள் கூறுவர். இந்த நான்கு சிறந்த உறுதிப் பொருள்களுள், காமம் என்பது, கண்ணபிரானின் திறத்திலேயே நிகழ்வது. அறம் பொருள் வீடு என்னும் மற்றவைகளும், கண்ணபிரானின் திறத் தில் நிகழும் காமமாகிய உறுதிப் பொருளுக்குத் துணையாய் அடிமையாதற்குரியவைகளே என்று, வாமனவதாரம் செய்த திருமாலுடன் ஒத்த நலத்தை உடையவரான இராமாநுசர், இவ் வுலகத்தில் நமக்கெல்லாம் அறிவுறுத்தி விளக் கம் செய்தருளினார்.

சேம நல் வீடும், பொருளும்,
தருமமும், சீரியநற்
காமமும் என்றிவை, நான்குஎன்பர்;
நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம்; அறம் பொருள் வீடு
இதற்கு என்றுரைத்தான்,
வாமனன் சீலன் இராமாநுசன்,
இந்த மண்மிசையே.

—தொடரும்

# "அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே"

## முன்னுரை :

திருவாசகம், திருக்கோவையார் என்னும் இருபெரு நூல்களும், மாணிக்கவாசகப் பெருமானரால் அருளிச் செய்யப் பெற்றனவாகும். திருவாசகத்தினை மாணிக்கவாசகர் அருளிச் செய்தார் என்பதனை மட்டும் பெரும்பாலோர் அறிவர். ஆனல் அவரே திருக்கோவையார் என்னும் பிறிதொரு நூலேயும் அருளிச் செய்துள்ளார் என்பது, நம்மில் மிகப் பெரும்பாலோர்க்குத் தெரியாது. திருக்கோவையினை இயற்றியவர் மாணிக்கவாசகர் அல்லர்; அதனைச் ''சிவபாத்தியன்'' எனப் பெயரிய வேறு பிறர் எவரோ இயற்றினராதல் வேண்டும் எனக் கூறுவோரும் ஒரு சிலர் உண்டெனில், திருக்கோவையார் பற்றி எத்துணையளவுக்கு மக்கள் ஏதும் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர் என்பது, இனிது புலனுகும்.

## திருக்கோவையார் சிறப்பு :

திருக்கோவையாரின்கண் மாணிக்கவாசகர் தாம் பெற்ற, ஐம்பொறியளவின் மேம்பட்ட, தூய கடவுளனுபவப் பேரின்ப உணர்ச்சிகளை, நம்மனேர் எளிய இனிய முறையில் உணர்தற் பொருட்டு, நமக்குக் கைவந்த ''கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்'' காதலின்ப அனுபவ உணர்ச்சி நிலேயின்கண் வைத்து, விளக்கியருளியுள்ளார். இங்ஙனம் கடவுளின்ப நலத்தின் பெற்றியினைக் காதலின்ப நலத்திேைடு, ஏற்ற பெற்றி இயைத்து விளக்கும் திருக்கோவையாரின் சிறப்பியற் பண்பொன்றுமே, நம்மை மெய் சிலிர்த்து மகிழ்ந்து விம்மிதமுறச் செய்யப் போதியதாகின்றது.

திருக்கோவையார் ஒன்றில்தான், முதன் முதலாக இத்தகைய அழகிய புதியதொரு சிறந்த விளக்கத்தினை, நாம் காண்கின்றேம். மாணிக்கவாசகர்க்கு முன்னரும் பின்னரும் எத்துணையோ பல புலவர்களும் சான்றேர்களும், காதலின்ப நலத்தினைப் பற்றிப் பாடியுள்ளனராயினும், அவர்களெல்லாரும் நம் அருமை மாணிக்கவாசகப் பெருமானைப்போல, 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க'' என்னும் நுட்பம் அறிந்து, ''கடுத்தின்னு தானைக் கட்டி பூசிக் கடுத்தீற்று மாறு போலக்'' காதலின்ப நலத்தையும், கடவுளின்ப நலத்தையும் ஒன்று சேர்த்து, ஒரு கதை போலவும், நாடகம் போலவும், தொடர்புபடுத்தி வைத்து ஒருங்கியைத்துப் பாடி, நம்மனேர்க்கு உய்தி நெறி விளக்கி உணர்வு கொளுத்தக் காண்கின் ...ம்.

## அகப்பொருளில் அருட்பொருள் :

மாணிக்கவாசகரின் ''தேனூறு செஞ் சொல் திருக்கோவை'' நூல் ஒன்றுதான், நம்மனேர் நலங்கருதி இத்தகைய வித்தகச் செயலே, முதன் முதற் புதிது புரிந்து வழி காட்டியுள்ளது எனலாம் ;

''காமம் சான்ற கடைக்கோட் காலே
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

என வரும் தொல்காப்பிய நூற்பா, ''காதலின்ப வாழ்வின் பயன் கடவுளின்ப வாழ்வினை அடைய முயலும் படிநிலேப் பயிற்சியாதலேயாகும்'' என்று மிக நுண்ணியதாகக் குறித்த அரிய கருத்தினைத் தழுவி, அகப்பொருளில் அருட்பொருளே அழகுற அமைத்து, உயரிய முறையில் விரிவாக எடுத்துத் தெளிவுற விளக்கிய பெருஞ் சிறப்பு, மாணிக்கவாசகர்க்கும், அவர் அருளிச் செய்த திருக்கோவையார்க்குமே உரியதாகும். திருவாசகம் தேன் போன்றது எனின், திருக்கோவையார் தேன் கலந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வதாகும் எனத் துணிந்து கூறலாம்.

## ஞானப்பனுவல் :

இச் சிறப்புடைமை கருதியே குமரகுருபர அடிகள், ''காமஞ்சான்ற ஞானப்பனுவல்'' எனத் திருக்கோவையாரை வியந்து புகழ்ந்து உரைத்தார். திருக்கோவையாரினை மாணிக்க வாசகர்,

''அறிவன்நூற் பொருளும்
உலகியல் வழக்கும் என
இருபொருளும் நுதலி
எடுத்துக் கொண்டனர்''

என அதற்கு உரை வகுத்த பேராசிரியர் தாமும் குறித்திருத்தல், இங்கு நாம் ஓர்ந்துணரற்பாலது. எனவே, திருக்கோவையாரானது இங்ஙனம் காதற் சுவையையும், ஞானப் பொருளினையும் ஒருங்கியைத்து விளக்கும் திறத்தினையுணர்த்தும் ஒரே ஒரு சான்றினை மட்டும், ஈண்டு நாம் கண்டமைவோம்.

## அகப் பொருட் செய்தி :

ஒரு தலைமகன், ஒரு தலைமகளைக் காதலித்தான். அக்காதல் விருப்பம் நிறைவேறத் தோழியின் துணையை நாடினன். அவளும் அவனது வேண்டுகோளுக்கு இசைந்தாள். இசைந்த தோழி, தலைமகள்பாற் சென்று, தலைமகளை ஏற்றுக் கொள்ளல் இன்றியமையாதது என்று தலைவியிடம் வற்புறுத்தி மொழிந்தாள். அது கேட்ட தலைவியும், தான் முன்னெரு நாள் சுனை நீராடச் சென்றபோழ்து, அதன்கண் தவறி விழுந்து இறக்க இருந்த நிலையில், அவ்வழியே தற்செயலாகப் போந்த தலைமகன், உடனே சுனையிடைப் பாய்ந்து, தன்னைக் காப்பாற்றிய அருஞ்செயலே நினைவு கூர்கின்றுள்.

அவன் காலத்தினுற் செய்த—செய்யாமற் செய்த—அரிய பேருதவிக்கு நன்றி பாராட்டு கின்றுள்.

''உற்றூர்க்குரியர் பொற்றெடி மகளிர்'' என்னும் முதுமொழியை எண்ணுகின்றுள். அதன் பயனுகத் தலைவனைக் கடிமணம் புணர்ந்து அணைய உடன்படுகின்றுள். அவ்வுடன்பாட்டுக் குறிப்பினையே, தோழியை நோக்கித் தலைமகள் ''அவர்க்கு அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே'' என்பதனுற் புலப்படுத்துகின்றுள்.

''உற்ற காலத்தில் வந்து, என் உயிரைக் காத்து உதவிய அப்பெருந்தகைக்கு, யான் சொல்லத்தக்க நன்றியுரை இன்னதென்று எனக்குத் தெரியவில்லை'' என்பது இத்தொடரின் பொருள். தன் நன்றியுணர்வுக்கு அறிகுறியாகத் தலைவனை மணந்து கொள்ள உடன்பட்டு இசைவு தரும் முறையில், இங்ஙனம் தலைவி கூறினுள் என்பது கருத்து. ''புனல் தருபுணர்ச்சி'' என இதனை அகப்பொருளிலக்கணங்கள் கூறும். இவ் வகைப்பொருள் துறைக்கு உரிய இக்கருத்தைத் திருக்கோவையாரில்,

''ஓங்கும் ஒருவிடம் உண்டு
அம்பலத்து உம்பர் உய்ய அன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த்
தழங்கும் அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்த அன்று
அழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கு, அறியேன்
சிறியேன் சொல்லும் வாசகமே''

என அழகுறப் பாடுகின்றுர் மாணிக்கவாசகர்!

## ''அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே''

இப்பாடலில், தலைவி தலைவன் தன்னைச் சுனையிடை வீழ்ந்து இறவாமல் காத்து உதவிய செயலை நினைவு கூர்ந்து நின்று, நன்றி பாராட்டி யதாக மட்டும் கூறி, மாணிக்கவாசகர் அமைந்து விடவில்லை.

**"பிறவியாகிய கடலில் விழுந்து தத்தளித்து வருந்தி அழிந்தொழிய இருந்த என்னைத், தானே வலிந்து வந்து பிடித்து எடுத்து, முத்திக் கரைசேர்த்துக் காப்பாற்றிப், பேருதவி புரிந்து அருளிய இறை வனுகிய தலைவனுக்கு, எத்துணையும் சிறியேனுகிய யான், நன்றியுரையாகச் சொல்லத்தக்கது இன்ன தென்று அறிகின்றிலேன்''** என்னும் நுண்ணிய ஓர் உள்ளுறைபொருளும், இவ்வினிய பாடலிற் செவ்விதின் அமைந்திருக்கக் காணலாம்.

## திருவாசகம் :

திருக்கோவையாரின்கண் வரும் இச்சிறந்த செய்யுளில் குறிக்கப்பெற்றிருக்கின்ற, இவ்வழ கிய இனிய கருத்து, மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்திலும் பின்வருமாறு அமைந்திருக் கக் காண்கின்றேம். **''பிறவியாகிய பெரிய கட லில், துன்பங்கள் ஆகிய வலிய அலைகளால் மோதித் தாக்கப்பெற்று, ஒரு சிறிதேனும் பற்றிக் கொண்டு உய்வதற்குத் தக்க துணை எதுவுமின்றி, வரைவின் மகளிர் ஆகிய கொடிய புயற்காற்றினுல் மிகவும் கலக்கப்பட்டு, காமம் என்னும் சுரு மீனின் வாயில் அகப்பட்டுக் கொண்டு, இனி நாம் தப்பி உய்யும்வழி யாது என்று, பல வகைகளில் எண்ண மிட்டு, திருவைந்தெழுத்து ஆகிய புணையையே பிடித்துக் கிடக்கின்ற என்னை, வீடுபேறு ஆகிய வளப்பம் நிறைந்த கரையில் சேர்த்துச் சிவபெரு மான் ஆட்கொண்டருளினுன்''**

என்னும் அழகிய கருத்து,

''தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றென் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்
றேனை,
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே (1)

''பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தில்
நின்கழற் புணைகொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர்வான்;
யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவுஎறிய
அழிகின்றனன், உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே'' (2)

''பிறவி என்னும் இக்கடலை நீந்தத் தன்
பேரருள் தந்தருளினுன்'' (3)

என வரும் திருவாசகப் பாடல்களில் அமைந் திருக்கக் காணலாம்.

திருவாசகமும் திருக்கோவையாரும், தம் முள் எத்துணைச் சொற்பொருள் நுட்பக் கருத் தொப்புமைகளும், இறையருளனுபவ வுணர் வின் இயைபு நலங்களும் வாய்ந்து திகழ்கின்றன என்பதற்கு, இந்த ஓர் எடுத்துக் காட்டே போதியதாகும். இங்ஙனம், அகப்பொருளில் அருட்பொருளை அமைத்து விளக்கும் திருக்கோ வையாரின் சிறப்பும், தெய்விக நலமும் எல்லை யற்றன என்பதில் ஐயமில்லை.

## முடிவுரை :

ஐம்பொறிகளினுல் நுகர்ந்தறியும் உணர்ச் கட்கு அப்பாற்பட்டு, அவற்றின் அளவுக்குள் அடங்காமல் மேம்பட்டுத் திகழும் அருளியல் அநுபவ நலங்களை, ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்னும் நிலையில் அகப்பொருளுக்குள் அமைத்து, அருட்பொருளை யுணர்த்தும் சிறப்பு விளங்க, மாணிக்கவாச அருளிய ''தேனூறு செஞ்சொல் திருக்கோவை யினை'' நாம் நன்கினிது கற்றுணர்ந்து ஓதி, இறை யருள் எய்தி நலம்பெற முயலுவோமாக.

—ஆசிரியர்

# "உயர்வற உயர்நலம் உடையவன்"

ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

## முன்னுரை :

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி, அடியார்களுக்கு அமிழ்தமாகத் திகழ்வது; தமிழ்வேதம் என்னும் பெருமை சான்றது; கடல் போல விரிந்து பரந்து, சிறந்த பொருள்நலங்கள் செறிந்தது; தொட்டனைத் தூறும் மணற்கேணி போலச் சிந்திக்குந்தொறும் சிறந்த பல கருத்துக்களைச் சுரந்து தருவது. திருவாய்மொழியின் சிறப்பிற்கு அதன் தொடக்கப் பாடலே, அரும்பெருஞ் சான்றாக அமைந்து திகழ்கிறது. ஆதலின் அதுபற்றி இங்கு இயன்ற வரை ஆராய்வோம்.

*உயர்வற உயர்நலம்*
*உடையவன் யவன்அவன்*
*மயர்வற மதிநலம்*
*அருளினன் யவன்அவன்*
*அயர்வறும் அமரர்கள்*
*அதிபதி யவன்அவன்*
*துயரறு சுடரடி*
*தொழுதெழென் மனனே!*

''என் மனமே! தன்னைக் காட்டிலும் உயர்ந்ததொன்று இல்லையாம்படி, மிகவும் உயர்ந்துகொண்டே செல்கிற நற்பண்புகளை உடையவன் யாவனோ, அவன் என்னிடத்தில் உள்ள அறிவின்மைகள் யாவும் நீங்க, ஞானத்தையும் பக்தியையும் எனக்குக் கொடுத்து அருளினான். அங்ஙனம் கொடுத்து அருளியவன் யாவனோ, அவன் மறதி என்பது சிறிதும் இல்லாத, நித்திய சூரிகளுக்குத் தலைவன். அத்தகைய தலைவன் யாவனோ, அவனுடைய-துன்பங்களை எல்லாம் நீக்குகிற-ஒளிபொருந்திய-திருவடிகளை வணங்கிப் பிறவிப் பெருங்கடலிலிருந்து மேலே எழுந்து உய்வாயாக!'' என்பது இதன் திரண்ட சாரமான பொருளாம்.

*(1)* உயர்வு அற உயர்நலம்-தம்மினும் உயர்ந்தது ஏதுமில்லை என்னும்படி உயர்ந்து கொண்டே செல்லும் நற்பண்புகள்; உயர்ந்தவை என்று மதிக்கப்பெற்றிருக்கும் மற்றைப் பொருள்களின் உயர்வு, சூரியனின் முன்னே மின்மினி போலவும், மகா மேரு மலையின் முன்னே ஒரு சிறிய கடுகு போலவும், தம் முன்னே உண்மையன்று என எண்ணும்படியும் தம்முடையதொன்றே உயர்ந்ததாய் நிலைபேறுடையதாகும்படியும் உயர்ந்துள்ள நற்பண்புகள். ஏனையோரெல்லாம் வருந்தி முயன்று அடைய வேண்டியுள்ள உயர்வுபோல அன்றி, இயல்பாகவே தன்கண் அமைந்துள்ள மிகவும் உயர்ந்த பண்புநலங்கள்.

*(2)* இறைவனுக்கு அடிமைப்படுவது இரண்டு வகைப்படும். ஒன்று-இறைவனின் குணநலன்களுக்கு வியந்து அடிமைப்படுதல்; மற்றொன்று-இயல்பாகவே என்றும் அடிமைப்பட்டிருத்தல். முன்னையதினும் பின்னையதே சிறப்புடையது. ஆழ்வார் இறைவனிடம் இயல்பாகவே அடிமைப்பட்டிருப்பவராயினும், தம்மை இறைவன் தன் திருக்குணங்களினாலேயே பெரிதும் கவர்ந்து ஆட்கொண்டருளினான். ஆதலால், அந்தக் குணங்களின் சிறப்பையே இங்கு முதன்முதலாக வியந்து பேசுகிறார்.

*(3)* ''எம்பெருமானுக்குக் குணம் இல்லை விபூதி இல்லை என்று கூறுகிற சிற்றறிவினர்களின் கழுத்தைப் பிடிப்பதுபோல, ஆழ்வார் தம்முடைய திருவாய்மொழியின் தொடக்கத்திலேயே 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்று அருளிச் செய்திருக்கும் அழகு என்னே என்னே!'' என்று கூரத்தாழ்வான் இந்த அடியைப் பலகால் கூறி வியந்து மகிழ்ந்து உருகிப் போவாராம்.

*(4)* 'உயர்வற உயர் குணம்' என்னாமல் 'நலம்' என்றது, இறைவனின் திருக்குணங்கள் எல்லாமே பெருநுகர்ச்சி பயப்பவை, நன்மையே உருவெடுத்து நிற்பவை என்பதை உணர்த்தும்.

*(5)* மயர்வு-அஞ்ஞானம், அறியாமை. அடியோடே சிறிதும் அறிவில்லாமை, ஒன்றை வேறொன்றாக அறிதல், இதுவோ அதுவோ என்று மயங்கி அறிதல், அறிந்ததைமறந்தொழிதல் என்பன பலவும் அஞ்ஞானம் எனப்படும். இனி, உடலையே உயிராக நினைத்தல் (தேகாத்ம ஞானம்), பிற தெய்வங்களுக்குத் தன்னை அடிமையாக நினைத்தல் (அந்யதாஞானம்), தனக்குத்தானே உரியவனாகவும், ஆத்மாவோடு அநுபவிக்கிற இன்பமே இன்பமாகவும் கொள்ளுதல் (விபரீதஞானம்) என்பனவும் அஞ்ஞானமெனப்படும்.

(6) மதிநலம்-மதியும் நலமும் என உம்மைத்தொகை. மதி-ஞானம். நலம்-பக்தி. இனி இதனை 'நலம் மதி' எனக் கொண்டு, நல்ல ஞானம் எனவும் பொருள் கொள்வர். அதாவது, துளசிச்செடி முளைக்கும்போதே நறுமணத்துடன் முளைக்குமாறு போலவும், கருங்காலி முதலிய மரங்கள் முளைக்கும்போதே வயிரம் பற்றி முளைக்குமாறு போலவும், பக்தியின் உருவத்தை அடைந்த ஞானம். இவ்வாறு கூரத்தாழ்வான் திருக்குமாரராகிய பட்டர் அருளிச்செய்வார்.

(7) அருளினன்-ஒரு காரணமுமின்றி, என் தகுதியின்மை நோக்கித் தவிராமல், இத்தலையில் நினைவு இல்லாமல் இருக்கவும், தானே தன் தலையளியால் எளிவந்து அருளினன்.

(8) இறைவன் திருவருள் புரிவதற்கு முன்னர், ஆழ்வார் தம்மை இல்லாத பொருளுக்குச் சமமாகவே கருதியிருந்தவராகையால், 'எனக்கு அருளினன்' என்று கூறாமல், பொதுவாக 'அருளினன்' என்ற அளவே குறிப்பிட்டார்.

(9) இனி, இறைவனின் அருளியல்பைத் தாம் அறிந்து கொள்ளவோ, அதனைப் பெறுவதற்கு விரும்பவோ சிறிதும் முற்படாமல் இருந்துங்கூட, மார்பின் கடுப்பாலே பாலைத் தரையிற் பீச்சிவிடுவாரைப்போல, இறைவன் தானாகவே வலிந்து வந்து தம்மிடம் அருள் செய்துகொண்டு நின்றான் ஆதலால், 'அருளினன்' என்றார் எனினும் ஆம்.

(10) அயர்வு-மறதி. அயர்வு அறும் அமரர்கள் இருவகையினர். எப்போதும் மறதி இன்றிக்கே இருப்பவர்கள்-நித்தியர்கள். மறதியிலிருந்து பின்பு நீங்கியவர்கள்-முக்தர்கள்.

(11) அமரர்கள்-இந்தச் சொல் 'மரணம் இல்லாதவர்கள்' என்னும் இயல்பான பொதுப் பொருளில் வரவில்லை; 'பகவானுடைய அருளநுபவம் தடைப்படுமேயானால், அப்பொழுது தங்களை உள்ளவர்களாகக் கருதாதவர்கள்' என்பதைக் குறிக்க வந்தது.

(12) 'அமரர்' என்னும் சொல்லே பன்மையை உணர்த்தப்போதுமானாலும், 'அமரர்கள்' என விகுதிமேல் விகுதியிட்டுக் கூறியது, அவர்களின் அளவற்ற பெருமைகளையும் நம்மனோர்க்கு நினைவூட்டி உணர்த்துதற் பொருட்டு.

(13) அதிபதி என்றது-இத்தகைய சிறந்த அமரர்க்குங்கூட, யானைக்குக் குதிரை வைத்தாற் போலப் பிடிகொடுக்குமாறு போன்று காட்டிப் பிடிகொடாமலே அப்பாற்பட்டு நிற்பவன் எம்பெருமான் என்பதை உணர்த்துவதற்கு.

(14) துயர் அறு சுடர்அடி-எல்லா உயிர்களின் எல்லாத் துன்பங்களையும் போக்குதலையே என்றும் தமக்கு இயல்பாகவுடைய திருவடிகள் என்னும் கருத்தில் இந்தத் தொடருக்குத் 'துயர் அறுக்கும்சுடர் அடி' என்று இராமாநுஜருக்கு முன்பிருந்த முதலிகள், பொருள்கொண்டு வந்தனர்.

(15) ஆனால், எம்பெருமானார் ஆகிய இராமாநுஜர், ''அடியார்கள் துயர் தீரவே, பகவான் தான் துயர்தீர்ந்தவனாகிறான். எம்பெருமான் 'பரதுக்கதுக்கி' யாதலால் அவன், பிறர் படும் துயர்கள் கண்டு, தான் துயர்படுபவன் ஆகிறான். அடியார்களின் துன்பநீக்கத்தையே தன் துன்பநீக்கமாகக் கொள்ளும் இயல்பினன் இறைவன்'' என்று கூறி, 'துயர் அறும் சுடர் அடி' எனப் பொருள்விளக்குவராம்.

(16) சுடர் அடி-அன்பர்கள் இறைவனிடத்தில் விரும்புவது திருவடிகளை. பால் உண்ணும் குழந்தைகள் தம் தாயின் மார்பிலே வாயை வைக்குமாறு போன்று, இவரும் 'தேனே மலரும் திருப்பாதம்' என்று போற்றப்பெறும் திருவடிகளிலே ஈடுபடுகிறார். இறைவனைக் காட்டிலும் அவனுடைய திருவடிகளே அன்பர்களுக்கு மிகவும் சிறந்தவை. 'நின்னிற் சிறந்த நின் தாளிணையவை' என்பது பரிபாடல்.

(17) இந்தப் பாடலில் 'உயர்வற உயர் நலம் உடையவன் அயர்வறும் அமரர்கள் அதிபதி' என்றதனால் அடையப்படும் இறைவனின் இயல்பு (பேற்றின் சிறப்பு) கூறப்பட்டது. 'மயர்வற' என்றதனால், பேற்றுக்குத் தடை கழிந்தபடி கூறிற்று. 'அருளினன்' என்றதனால், இறைவனே பேறு தருபவன் என்று சொல்லிற்று. 'தொழுது எழு' என்றதனால், பேற்றுக்குக் காரணமான தொண்டின் திறம் உணர்த்திற்று. 'என் மனனே' என்றதனால் தூய மனமுடையவனே பேற்றுக்கு உரியவன் என்று சுட்டிற்று.

(18) நான்கு வேதங்களின் சுருக்கம் திருமந்திரம்; திருமந்திரத்தின் சுருக்கம் அகர எழுத்து. அதுபோல, நான்கு வேதங்களின் சுருக்கம் திருவாய்மொழி; திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களின் சுருக்கம் முதல் திருப்பதிகம்; அதனுடைய சுருக்கம் முதல் மூன்று பாசுரங்கள்; அவற்றின் சுருக்கம் முதற் பாசுரம்; இந்த முதற் பாசுரத்தின் சுருக்கம் 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்னும் முதல் தொடர். இங்ஙனம் திருவாய்மொழியின் முதல் திருப்பாடலாகிய இந்தச் செய்யுளின் சிறப்பினை யாவரும் இனிது உணரலாம்.

# தெய்வத் துணை

"அருள்மொழியரசு"
திரு முருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்

கானகத்தில் ஒரு சந்நியாசி நெடுங்கால மாகத் தவஞ் செய்து கொண்டிருந்தார். அவர் சிறந்த ஒழுக்கமும், உயர் குண நலனும் உடையவர். ஒருமைப்பட்ட மனத்துடன் புலன்களை வென்று தவ வேந்தராக அவர் திகழ்ந்தார். அக் கானகத்தில் வாழும் கொடிய விலங்கினங்களும் அவரிடம் குழந்தைகள் போல் அடங்கி அன்பு செய்தன. அம் முனிவர் பெருமான், பச்சிலைகளையும், உலர்ந்த சருகுகளையும், கிழங்குகளையும், நீரையும் உணவாகக் கொண்டு உடம்பை வாட்டி, வினைகளை வீட்டித் தவசீல ராகத் திகழ்ந்தார்.

ஒரு நாள் அவர் முன் மகாலட்சுமி தேவி தோன்றிக் காட்சியளித்தனர். முனிவர் திருமகளைத் தொழுதார். ''முனீந்திரா! நீ முன்னே செய்த நல்வினைப் பயன் காரணமாகச் சில நாள் நான் உன்னிடம் தங்கியிருக்கப் போகிறேன்.''

''தாயே! நான் தவத்தையே தனமாகக் கொண்டவன். வெறுக்கை (செல்வம்) மீது வெறுக்கையுற்றவன். உமது கருணையும் அதனால் வரும் செல்வமும் நாட்டில் இல்லறத்தாருக் கல்லவா வேண்டும். என்னிடம் நீ இருந்து பயனில்லையே.''

''தபோதனரே! இப்போது உனக்குச் செல்வம் வேண்டாம் என்றிருக்கலாம். முன்னே நீ செய்த புண்ணியத்தின் பயனாக உன்னிடம் குறிப்பிட்ட ஒரு காலம் வரை இருக்கத்தான் வேணும். இது இறைவனுடைய அருளாணையின் நியதி. நான் உன்னிடம் இருக்கும்போது உனக்கு எல்லாம் நன்மையாகத்தான் முடியும். ஒரு பயமும் வராது. உனக்கு சகலச் சித்திகளும் உண்டாகும். அரச மரியாதைகள் கிடைக்கும். உலக மக்கள் மதித்துக் கொண்டாடி உபசரிப்பார்கள்'' என்றாள்.

முனிவர் ''அம்மா! எல்லாம் ஈசன் செயல். உன் கருணை கடாட்சப்படி நடக்கட்டும்'' என்றார். அவரிடம் லட்சுமியின் பரிபூரண அருள் பதிந்தது. முனிவர் நீராடித் திரும்பும் வழியில் ஒரு பெரும் புதையல் வெளிப்பட்டது. அதில் தங்கப் பவுன்கள் நிறைந்திருந்தன. லட்சுமி ...டாட்சம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் ...வருடைய காலடியில் அது வந்தது. அவரோ ...ஆசாபாசம் விட்டவர். அதைக் கண்டு சிரித் ...ர். தேவி! இது எனக்கு ஏன்? தலை மயிர் அ...லாதவருக்கு மலர்ச் செண்டால் என்ன ...ன்? தவஞ் செய்கின்ற எனக்கு இப்பணம் எதற்கு? என்று கூறி, அதனைத் தீண்டாமலேயே தான் தவஞ் செய்யும் மரத்தடி யடைந்தார்.

மறுநாள் முனிவர் ''நம்மிடம் திருமகள் தங்கியிருக்கின்றாளே! அரச மரியாதை கிடைக்கும் என்றாளே! இதைச் சோதித்துப் பார்ப்போம்'' என்று எண்ணினார். அந்தக் காட்டுக்கு அருகில் இராஜசேகரம் என்ற ஒரு நகரம். அதனைப் பராந்தகன் என்ற அரசன் அரசு புரிந்து வந்தான். முனிவர் அரசவை சென்றார். பெரிய மண்டபம்; அமைச்சர்கள், பிரதானியர்கள், ஏனைய பரிசனங்கள் புடை சூழ மன்னர் பெருமான் அரியணை மீது அமர்ந்திருந்தான். முனிவரைக் கண்டு எழுந்து எதிர் வந்து தொழுதான்.

முனிவர் அம்மன்னவன் தலையில் இருந்த மணி மகுடத்தைக் காலால் உதைத்தான். (லட்சுமி தேவியின் சொல்லைச் சோதிக்குமாறு இவ்வாறு செய்தார்). சபையில் உள்ளவர்கள் ஆ! ஆ! என்று அலறினார்கள். அமைச்சர்கள் திடுக்கிட்டார்கள். மன்னவன் மனம் பதறியது. அந்த ஒரு கணத்தில் அந்த சபையே ஆடி விட்டது; முனிவருக்கு என்ன ஆபத்து வருமோ என்று எல்லோரும் எண்ணினார்கள். இலட்சுமி தேவி முனிவருடைய நடையை நோக்கிப் புன்னகை புரிந்தாள். இந்த முனிவரிடம் நாம் அருள் புரிந்தால் இவன் வெறி பிடித்தவன் போல் இப்படி மன்னவனுடைய மணி மகுடத்தையே உதைத்தானே என்று கருதினாள். உடனே திருமகள் அருளால் அந்தக் கிரீடத்திலிருந்து ஒரு நாகப்பாம்பு வெளிவந்து படம் எடுத்து ஆடியது. இதைக் கண்ட அரசனும் அவையோரும் அதி அற்புதங் கொண்டார்கள். ஆ! முனிவர் பெருமான் திரிகால ஞானி. நமக்கு வர இருந்த இடரைக் கருணையினால் தவிர்த்தருளினார்.

இந்தப் பாம்பு முடிக்குள் நுழைந்திருக்க வேண்டும். நான் இதை அறியாமல் எடுத்துத் தலையில் அணிந்து கொண்டேன். ஆ! இந்தப் பாம்பு கடித்திருந்தால் நான் மாண்டுபோவேன். இதைக் கானகத்தில் தவஞ் செய்யும் இவர் யோகக் காட்சியால் கண்டு, நாகப் பாம்பு கடித்து அதனால் நான் மாளாது வாழும் பொருட்டு என்னைக் காத்தருள வேண்டி வந்து உதவி செய்தார் என்று மன்னவன் நினைத்தான்.

மாதவ முனிவருடைய மலரடி மீது பல முறை வீழ்ந்து வணங்கினான். ''சிறியேனை

வாழ வைத்த தெய்வமே! என் இடர் களைந்த எந்தை பெருமானே! குடி முழுதாண்ட குரு மணியே! தங்கட்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன். தேவரீரை என் உயிருள்ள வரை பூசிப்பேன், நேசிப்பேன்'' என்றெல்லாந் துதித்தான். எல்லோரும் அவருடைய அடி மலர் மீது வீழ்ந்து தொழுதார்கள்.

அவரைப் புஷ்ப ரதத்தின் மீது ஏற்றிக் குடை, சாமரம், ஆலவட்டம் முதலிய உபசாரங்களுடன் மேள தாளங்கள் முழங்க விண்ணுலகம் அதிருமாறு, வாண வேடிக்கையுடன் ஊர்வலம் செய்தார்கள்.

முனிவர் சிந்திக்கின்றார். இது என்ன விந்தை. ஒரு விநாடியில் நமக்கு இத்துணைச் சிறப்பும், ராஜ மரியாதையும், நகர்வலமும் நடைபெறுகின்றன. மன்னவனைக் காலால் உதைத்தேன். என் காலை வெட்டித் தண்டிக்க வேண்டிய மன்னன், காலில் வீழ்ந்து அடிமையாகி நிற்கின்றான். இது திருமகள் அநுக்கிரகம். முடியிலிருந்து அவள் சர்ப்பமாக வந்து இத்தனைக் கூத்தும் புரிவிக்கின்றாள். அவள் இன்னும் என்ன என்ன திருவிளையாடல் செய்யப் போகின்றாளோ? என்று எண்ணித் தமக்குள் சிரித்துக் கொண்டார்.

அரண்மனைக்கு அருகில் உள்ள பூங்காவனத்துக்கு இடையில் கட்டியுள்ள சந்தன மாளிகையில் முனிவரைப் புதிய வெல்வெட்டு விரித்த ஆசனத்தில் அமர வைத்து மன்னன், மன்னனுடைய மனைவி, மக்கள் முதலியோர் மயில் விசிறி எடுத்து விசிறி, பால் பழம் தேன் இளநீர் தந்து உபசரிக்கின்றார்கள். அதல பாதாளத்தில் இருந்த ஒருவனை இமய மலையின் உச்சியில் அமர்த்தியது போல் இருந்தது. காட்டில் தனித்துப் போற்றுவார் ஒருவருமின்றிக் காய், சருகு உண்டிருந்த முனிவர் இன்று ராஜபோகத்துடன் தங்கப் பிடியிட்ட வெண் சாமரம் மன்னவனே வீச, பஞ்சு மெத்தையிட்ட தந்தக் கட்டிலில் வீற்றிருக்கின்றார்.

இப்படி சில தினங்கள் கழிந்தன. முனிவர் முடி மன்னனை நோக்கித் தான் கானகம் போக வேணும் என்றார். மன்னவன் மறுத்துத் தேவரீர் இங்ஙனமே இருந்து எங்களை உய்விக்க வேண்டும் என்றான். முனிவர் மீளவும் இலட்சுமியின் கருணையின் வலிமையைச் சோதிக்க நினைத்தார்.

நடு இரவு. அரசனும் அரசமா தேவியும் ஒரு கட்டிடத்துக்குள் பஞ்ச சயனத்தின் மீது பள்ளிகொண்டு உறங்கிக் கொண்டிருந்தார்கள். முனிவர் அந்தப் படுக்கை வீட்டுக்குள் நுழைந்து மன்னவன் முதுகிலும், மகாராணியின் முதுகிலும் பளார் பளார் என்று நான்கு அடி கொடுத்து, இருவருடைய கரங்களைப் பிடித்து, கரகர என்று மாடுகளை இழுத்து வருவதுபோல் இழுத்துக் கொண்டு வெளியே வந்தார். இது எத்துணை அடாத செயல். அரசருடைய படுக்கையறையில் மற்றவர் நுழையலாமா? கோப்பெருந்தேவியை மற்றவர் தீண்டலாமா? தீண்டி அடிக்கலாமா? தலை போகின்ற காரியம்.

மன்னவன் இன்னதென்றறியாமல் திகைத்து நின்றான். இலக்குமி தேவி திடுக்கிட்டாள். தவ முனிவர் திடீர் என்று இந்த அடாத செயலைச் செய்து நம்மைச் சோதிக்கின்றாரே! நாம் அவரிடம் தங்கியிருக்கின்றபோது அவருக்கு ஒரு அவமரியாதை வரக்கூடாதே என்று எண்ணினாள். உடனே திருமகள் செயலால் அரசன் படுத்திருந்த கட்டிடம் திடீர் திடீர் என்று இடிந்து விழுந்தது. இதைக் கண்ட மன்னவன் ஆ! ஆ! நான் இதன் உள்ளே படுத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தேனே. கட்டிடம் இடியப் போவதை அறிவுக் கண்களால் அறிந்த அருந்தவமுனிவர் என்னைக் காக்கும் கருணையால் இங்ஙனஞ் செய்தனர். இல்லையேல் நானும் என் தரும பத்தினியும் மாண்டு ஒழிந்திருப்போம். இப் பேராபத்திலிருந்து என்னைக் கருணை மேலீட்டினால் காத்தருளினார்.

''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் மாற்ற லரிது''

இந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகுமா? வாழ்நாள் முழுவதும் நாம் இவருக்கு மீளா அடிமையாகி வாழ்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்'' என்று எண்ணிய பராந்தகன் மாதவருடைய மலரடியைப் பல காலும் பணிந்து எழுந்தான். கண்ணீரால் அவருடைய கால்களைக் கழுவினான். இச் செயலைக் கண்ட முனிவருக்கு அதி ஆச்சரியம் ஏற்பட்டது. திருமகளின் கருணைத் திறத்தை நினைத்து நினைத்து விம்மிதம் அடைந்தார். கமலாசனியின் கருணையின் வலிமைதான் என்னே? உலகமெல்லாம் இறைஞ்சும் இந்தக் கோமகனைக் கோவணாண்டியின் கால்மேல் வீழ்ந்து வணங்குமாறு செய்கின்றாள். தேவியின் பெருமையே பெருமை. அவளின் அருளிருந்தால் துரும்பும் அரசு புரியுமே? அம்மம்ம! நினைக்கவும் முடியாத அற்புதம். செய்யத் தகாத செயலைச் செய்த எனக்குச் சிறப்பின் சிகரம் சேர்கின்றது என்று சிந்தித்தார். தேவியை வந்தித்தார்.

இவ்வாறு முனிவர் சில காலம் அரச மரியாதைகளுடன் மிக உயர்ந்த சுகாசனங்களில் அமர்ந்து எல்லோருடைய வணக்கங்களுக்கும் உரியராய் விளங்கினார். ஒரு நாள் இரவு இலட்சுமி தேவி அவளுடைய கனவில் தோன்றி ''முனிவரே நான் நாளை காலை உம்மை விட்டு அகலுவேன். இனி உமக்கு இங்கு ஒரு உபசாரமும் நடவாது'' என்று கூறி மறைந்தாள். முனிவர் எழுந்தார். திருமகள் விலகிவிட்டா[illegible] என்பதை உணர்ந்தார்.

முனிவர் முதல் நாள் மன்னவன்பால் கொடுத்த மாம்பழத்தை வெட்டிக் காலையில் ஒரு துண்டை யுண்டான். உடனே மயங்கி விழுந்தான். அரச வைத்தியர்கள் வந்தார்கள். அம் மாம்பழத்தில் நஞ்சு கலந்திருக்கின்றதெ[illegible] அறிந்தார்கள். நஞ்சு தணியும் நன் மருந்[illegible] நல்கினார். பராந்தகன் குணம் அடைந்தான்[illegible] அக் கனி அரண்மனை நந்தவனத்தில் பழுத்[illegible] அது மரத்தில் இருக்கும்போது நல்ல ந[illegible] அதில் நஞ்சைக் கக்கியிருந்தது. முனிவர்

கனி நஞ்சு கலந்ததென்பதை அறியாது மன்னனிடம் முதல் நாள் மாலை தந்தார்.

மன்னவன் ‘‘ஓ! இந்த முனிவர் இப்பழத்தில் நஞ்சூட்டி நம்மைக் கொன்று அரசுரிமையைக் கைப்பற்றக் கருதினார் போலும். இவரைக் கொல்வது நல்லதன்று. முன் இரு முறை நம் மரணத்தைத் தடுத்து உதவி செய்தனர்.

‘‘கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்’’

ஆதலால் இவருடன் இனி பழகக் கூடாது என்று தன் மனத்துக்குள் நினைத்து, தன் ஏவலரிடம் முனிவரை யாதொரு இடையூறும் இன்றிக் காட்டில் விட்டு வருமாறு கட்டளையிட்டான். காவலர் முனிவரை அழைத்துப் போய்க் கானகத்தில் விடுத்து, ‘‘முனிவரே! எமது மன்னரைக் கொல்லுமாறு நீர் நஞ்சு கலந்த கனியைத் தந்த காரணத்தால் உம்மை மன்னர் அகற்றி விட்டார். இனி நகருக்குள் வராதீர்; வந்தால் தலைபோகும்’’ என்று கூறிச் சென்றார்கள்.

முனிவருக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஆ! திருமகள் செய்யும் திருவிளையாடல்தான் என்னே! அவள் விலகிய அடுத்த கணத்தில் எனக்கு அரச மாளிகையில் இடமில்லை; அன்றியும் அரசனுடைய வெறுப்பும் ஏற்பட்டது. திருமகள் கடாட்சம் இருந்தால் தீமையும் நன்மையாகும். அவளுடைய கடாட்சம் இல்லையேல் நன்மையும் தீமையாக முடியும். நான் தந்த மாம்பழமே நஞ்சாக மாறி எனக்கு இந்த நிலையமைந்தது. நான் சுகத்தை விரும்பாதவன். துக்கத்தை வரவேற்கின்றவன். சாமானியமான மனிதர்கள் என்றால் கதி கலங்கி, மதி மயங்கி அதிக வேதனை அடைவார்கள். நேற்று அரச போகம். இன்று காட்டில் நிற்கும் யோகம். தேவி! நின் திருக் கூத்தை யறிந்தேன். சில காலம் என்பால் தங்கி, வேண்டாம் என்ற உயர்ந்த சிறப்பையெல்லாம் எனக்கு வலிதில் தந்து விளையாடினாய். அம்மா! நீ ஆண்டியை அரசனாக்குவாய்; அரசனை ஆண்டியாக்குவாய் ; துரும்பை இரும்பாக்குவாய் ;இரும்பைத் துரும்பாக்குவாய்; குட்டிச் சுவரை அரண்மனையாகச் செய்வாய்; அரண்மனையைக் குட்டிச்சுவராக்குவாய் ; உன்னால் எல்லாம் ஆகும். தாயே! உனக்கு வணக்கம்’’ என்று தேவியைத்தொழுது விட்டு எப்போதும்போல் மனத்தை யடக்கித் தவஞ் செய்யத் தொடங்கினார்.

## கடவுள்

‘‘உலகம் எங்கணும் ஓர் ஒழுங்குமுறை நிலவுகின்றது. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும், வாழ்கின்ற ஒவ்வோர் உயிரையும், மாற்ற முடியாத ஆற்றல் மிக்க ஒரு பெருஞ் சட்டம், ஆட்சி புரிந்து வருகின்றது. அஃது ஒரு குருட்டியற் சட்டம் அன்று. ஏனெனில், குருட்டியற் சட்டமாயின், உயிரும் அறிவும் உடைய பொருள்களின் இயக்கத்தை வரையறை செய்து நடத்த, அதனால் இயலாது. எனவே, வாழ்வனைத்தையும் ஒரு வரையறை செய்து நடத்துவிக்கும் அந்தச்சட்டம் தான் கடவுள்!

சட்டமும், சட்டத்தை வகுப்பவனும் ஒன்றே. நாம் அறிந்து கொள்ளாமை காரணமாகச் சட்டத்தினையோ, அதனை வகுத்தவனையோ இல்லை என்று சொல்லுவது பொருந்தாது. உலகில் நிலவும் அரசின் நெறியினை அறியாமையினாலோ, இல்லை என்று சொல்லுவதனாலோ, நமக்கு ஏதும் பயன் விளையாது. அதுபோலவே நாம் கடவுளை இல்லை என்பதனால், நமக்கு அவர்தம் சட்டங்களினின்று விடுதலை ஏற்பட்டு விடாது. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதனால், நம் வாழ்க்கை தொல்லைகள் இன்றி எளியதும் இனியதுமாக அமையும். அங்ஙனமே கடவுளின் இயற்கைச் சட்ட திட்ட நெறிமுறைகளுக்கும், நாம் கட்டுப்பட்டு ஒழுகினால் தான், நம்முடைய வாழ்க்கைப் பயணம், எளிமையும் இன்பமும் நிறைந்ததாக அமையும்.’’

**—காந்தியடிகள்**

தமிழாக்கம் : ந. ரா. முருகவேள்.

# முத்திநிலை பற்றிய அத்வைதக் கருத்து

''வேதாந்த வித்தகர்''

டாக்டர் டி. எம். பி. மகாதேவன், எம்.ஏ., பி.எச்டி.

முத்தி பெறுதலே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை இந்தியர்கள் வற்புறுத்துவதே, இந்தியக் கலாசாரத்தைத் தற்கால மனிதனுக்கு மிகப் பொருத்தமாகச் செய்கிறது. முத்தி அல்லது மோட்சம் என்பது, இந்தியாவில் பெரும்பான்மையினரின் கருத்துப்படி, இறந்தபின் வேறொரு உலகத்தில் ஏற்படும் அனுபவம் அன்று; அது ஆன்மாவின் நிரந்தர இயற்கையாக உள்ள மேலான இன்பம். பூர்ணத்துவம் ஆகிய பேரின்பத்தைத் தேடி நாம் எங்கோ செல்ல வேண்டியதில்லை. அது நம்முள்ளேயே இருக்கின்றது; அதன் பக்கமாக நாம் திரும்பினால் அதனைக் காணலாம். அளவுக்கு மீறிப் புறத்தில் இன்று மனம் அலையும் மக்களுக்கு, அகவயமாதல் பற்றிய இந்த அறிவுரையை விடச் சிறந்தது வேறொன்றும் இருக்க முடியாது. அந்தராத்மாவே உலகில் எங்கும் உள்ள மனிதன். ''ஆத்மாவுக்கு மேல் ஒன்றும் கிடையாது. அதுவே முடிவு, அதுவே இறுதியான லட்சியம்'' என்று கடோபநிஷத் கூறுகிறது.

ஆத்மா மோட்சத்தின் தன்மையானது. அத்வைதத்தில் ஆத்மா, மோட்சம் என்னும் இரண்டு சொற்களுக்கும் பொருள் ஒன்றே. ஆத்மா எப்பொழுதும் ஸ்வதந்திரமாயிருப்பது; ஸ்வதந்திரமே அதன் இயற்கை; அவித்தையின் காரணமாக இவ்வுண்மை உணரப்படுவதில்லை. மோட்சமடைவதற்காகச் செய்ய வேண்டுவது அவித்தையைப் போக்குவது மட்டுமே. இவ்வுண்மை, பந்தமாகவுள்ள சம்சாரத்தை நீக்குவதற்கும் பொருந்தும். அவித்தையை நீக்கும்போது மோட்சம் அடையப் பெறுவதாகவும், பந்தம் நீக்கப் பெறுவதாகவும் கூறுகிறோம் என்பது உண்மையே. ஆனால் 'அடையப் பெறுவது' 'நீக்குவது' என்னும் சொற்களை உருவகமாகக் கொள்ள வேண்டும். அடைவது இருவகையானது, நீக்குவது இருவகையானது. அடையாததை அடைவதும், முன்னரே அடைந்ததை அடைவதும்; நீக்கப் பெறாததை நீக்குவதும், முன்னரே நீக்கியதை நீக்குவதும். இவற்றுள் ஒவ்வொன்றிலும் முதல் வகைக்குச் செயல் கட்டாயமாகிறது; இரண்டாவது வகையான அடைவதற்கும் நீக்குவதற்கும் அவ்வாறு அன்று. இதனைப் பின்வருமாறு விளக்குவோம். பொன்னால் ஒரு நகை செய்வதற்குச் செயல் தேவை. இதற்கான பணம் சேர்ப்பது மட்டும் போதாது. பொன்னை வாங்கி நகை செய்யவோ, பொற்கொல்லனிடம் சென்று நகை வாங்கவோ வேண்டும்-இது அடையப் பெறாததை அடைகின்றதற்கு எடுத்துக்காட்டு. அடுத்தவகைக்கு உதாரணம் பின்வருமாறு; அவனுடைய கழுத்தில் அணிந்து கொண்டிருக்கிற தங்கச் சங்கிலி காணாமற் போய்விட்டதாக ஒருவன் நினைத்துக் கொள்கிறான். சங்கிலி அவன் கழுத்தில்தான் இருக்கிறது; ஆனால் அவன் மருட்சி நிலையில் இருக்கிறான். அவன் சங்கிலியைத் தேடத் தொடங்கி விடுகின்றான்.

வழிப்போக்கன் ஒருவன் இந்நிலையைப் பற்றித் தெரிந்து கொண்டவுடன், தங்கச் சங்கிலி கழுத்திலேயே இருப்பதை மருட்சியடைந்தவனுக்குச் சுட்டிக் காட்டுகின்றான். அவன் சங்கிலியை இறுகப் பிடித்துக் கொள்கிறான். மகிழ்ச்சியில் குதிக்கிறான். 'என்னுடைய அருமையான சங்கிலியை மீண்டும் பெற்றுவிட்டேன்' என்று கூச்சலிடுகிறான். இது முன்னரே அடையப் பெற்றதை அடைவதற்கு எடுத்துக் காட்டு. இந்நிலையில் இருந்தவன் சங்கிலியை 'மீண்டும் பெறுவதற்குச் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. அவனுக்குத் தேவையானது. சங்கிலி காணாமற் போகவில்லை என்னும் அறிவு மட்டுமே. நீக்குவது இருவகையானது என்று கூறினோம். உண்மையான பாம்பை அழிப்பதற்குத் தடியால் அடிப்பது போன்ற செயல் தேவைப்படுகிறது; இது முதல் வகைக்கு எடுத்துக் காட்டு. கயிறாக உள்ள பாம்பை அழிப்பதற்கு எவ்வளவு அடித்தாலும் பயனில்லை. போதிய வெளிச்சமே தேவைப்படுகிறது. இது இரண்டாம் வகையான நீக்குவதற்கு எடுத்துக் காட்டு. இனி மோட்சம் 'அடைவது' 'சம்சாரத்தை நீக்குவது' என்பவற்றை இங்கே இரண்டாம் வகையான உருவகப்பொருளில் கொள்ள வேண்டும். மோட்சம் என்றும் உள்ளது. எனவே எப்போதுமே அடையப் பெற்றிருப்பது. அவித்தையின் காரணமாக அது அடையப்பெறாததைப் போல் தோன்றுகிறது. ஞானம் உதிக்கும்போது அதன் நிரந்தர இயற்கை வெளிப்படுகிறது. இவ்வாறே அவித்தையினால் உண்டாக்கப் பெற்ற பந்தமும் உண்மையன்று. ஞானம் உதயமாகும் போது பந்தம் முன்னரே நீக்கப் பெற்றிருப்பதால் நீக்கப் பெறுவதைப்போல் தோன்றுகிறது. இவ்வகையில் மோட்சம் அடைவதற்கும், [பந்]தத்தை நீக்குவதற்கும் தேவைப்படு[வது] ஞானமே, செயலன்று என்பது தெளிவாகு[ம்].

தம்முடைய மாண்டுக்ய காரிகை-பாஷ்யத்தில் ஸ்ரீ சங்கரர் பின்வருமாறு கூறுகிறார்:

''ஜீவர்கள் அவித்தையால் ஏற்படுத்தப்பெற்ற பந்தத்தால் ஒருபோதும் மறைக்கப்பெறுவதில்லை. அவர்கள் எப்போதுமே பந்தத்திலிருந்து விடுபட்டிருக்கிறார்கள். தொடக்கத்திலிருந்தே அவர்கள் விடுதலை பெற்றவராய் இருக்கிறார்கள். பரிசுத்தமான இயற்கையுடையவர்களாகவும், ஞானத் தெளிவுடையவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே அவர்கள் எப்போதும் பரிசுத்தமாக ஞானமயமான ஸ்வதந்தரமான உள்பொருளின் இயற்கையை உடையவர்கள். இஃது இவ்வாறாயின், உண்மையையறிந்த ஆசிரியர்கள் தாங்கள் விடுதலை பெற்றதாக ஏன் கூறுகிறார்கள்? இதற்குப் பதில் வருமாறு: எப்போதுமே ஒளிமயமான சூரியன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்வதைப் போலவும், எப்போதும் அசைவில்லாமல் இருக்கும் குன்றுகள் நின்றுகொண்டிருக்கின்றன என்று சொல்வதைப் போலவும் இங்கேயும் கூறுகிறோம்''-மாண்டுக்ய காரிகா-4-98.

மேலும் 'ஆத்மபோதம்' என்னும் நூலில் அவர் கூறுவதாவது: ''அவித்தையின் காரணமாக, ஆத்மா எப்போதுமே அடையப் பெற்றிருப்பினும் அடையப்படாததுபோல் தோன்றுகிறது: அந்த அவித்தை நீங்கும்போது அடையப்பட்டதைப்போல் வெளிப்படுகிறது. தன் கழுத்திலேயே உள்ள நகையைப் போல''.

ஆத்மாவின் உண்மையை ஏற்கின்ற கொள்கைகள் யாவுமே (பிறப்பு இறப்புப் போன்றவை). ஆத்மாவைப் பற்றியன அல்ல, அது மாறுதல் இன்றி எப்போதும் உள்ளது என்பதை ஒப்புக்கொள்ளுகின்றன. ஆனால் சற்றும் பொருத்தமில்லாமல் பன்மைக் கொள்கைகள் ஒவ்வொரு உடலுக்கும் தனியாக ஓர் ஆத்மா இருப்பதாகவும், அது பந்த நிலையில் உண்மையாகவே தன்னுடைய மாறாத் தன்மையையும் பூர்ணத்துவத்தையும் இழப்பதாகவும், விடுதலை பெறும்போது இவற்றை மீண்டும் புதிதாகப் பெறுவதாகவும் கூறுகின்றன. நெருப்பில் சூட்டைப்போல ஆத்மாவுக்கு உண்மையாகவே பந்தம் உண்டெனின், மோட்ச நிலையிலும் பந்தம் ஆத்மாவை விட்டு நீங்காது. எனவே ஆத்மா என்னும் கருத்திலேயே அது எப்போதும் ஸ்வதந்திரமாகவும், பரிசுத்தமாகவும் சம்பூர்ணமாகவும் இருப்பதென்பதும், பந்தத்தை உருவாக்கும் இவற்றுக்கு மாறான பண்புகள் அவித்தையினால் போலியாகத் தோற்றுவிக்கப்படுகின்றன என்பதும் உட்கிடையாக உள்ளன. ஆன்மாவின் உண்மை நிலையை உணர நாம் செய்ய வேண்டுவது எல்லாம் அவித்தையை நீக்குவதேயாகும்-பகவத்கீதை, ஸ்ரீசங்கரர்பாஷ்யம். (13-2).

இந்தியாவில் உள்ள 'தத்துவக் கொள்கைகளுள், மோட்சம் என்பது பலவாறாகக் கருதப்படுகிறது. சிலர் கருத்துப்படி, மோட்சம் என்பது துன்பமின்றியிருப்பதே; வேறு சிலர் துன்ப நீக்கத்தோடு நிரதிசய இன்பத்தை அனுபவிப்பதே மோட்சம் எனக் கருதுகிறார்கள். சாங்கியமும், நியாய வைசேடிகமும் முதல் வகுப்பைச் சேர்ந்தவை; வேதாந்தத்தைச் சார்ந்தவை, பின்னைய வகையைச் சார்ந்தவை. சாங்கியர், புருஷன் தோற்றத்துக்கு மூலமாயுள்ள பிரகிருதியினின்று வேறுபட்டது என்பதை உணர்வதே முத்தி என்பர். புருஷன் பிரகிருதியுடனும், அதனின்றும் வெளிவந்த பொருள்களுடனும் மேலும் தன்னை ஒன்றாகக் கருதிக் கொள்வதில்லை; அது சாட்சியாகவே இருந்து, பிரகிருதியினால் தூய்மையிழக்காமல் இருக்கிறது.

இந்நிலை, கைவல்யம், தனிமையாகவே இருப்பது எனப்பெயர் பெறும். நியாய வைசேடிகர் கொள்கைப்படி, ஆன்மா விடுதலையடையும்போது ஞானம் முதலிய எல்லாக் குணங்களிலிருந்தும் விடுபடும். துன்ப நீக்கமே முத்தி எனவும், இன்ப அனுபவம் இல்லை எனவும் கருதும். ஏன் இவ்வாறு கொள்ளப்படுகிறது என்றால், நாம் இன்பம் அடையும்போது துன்பக் கலப்பில்லாமல் அடைவதில்லை. ஆகவே துன்பமில்லாத நிலை வேண்டுமானால் இன்பத்தையும் நாம் நீக்க வேண்டும் என்பதாம். ஆனால் வேதாந்தக் கொள்கைகள் துன்பம் சிறிதும் இல்லாத நிலை எனக் கொள்வதோடு, பூர்ண அனுபவத்தை அனுபவிக்கும் நிலை எனவும் கூறுகின்றன. அந்த இன்ப அனுபவநிலை என்ன என்பதில், பல கொள்கைகள் மிகவும் வேறுபடுகின்றன. எல்லா மங்கலமான குணங்களுக்கும் இருப்பிடமான கடவுளைக் காணலோ, கடவுளோடு கலத்தலோ எனச் சிலர் கொள்கின்றனர். வேறு சிலர் இன்பமே வடிவான முழுமையான பரப்பிரம்மத்துடன் ஒன்றுபட்டு இருப்பதே முத்தி எனக் கொள்கின்றனர். ஆனால் எல்லா வேதாந்தக் கொள்கைகளிலும் விடுதலை வடிவாயுள்ள இன்பத்தினால் குறிக்கப்படுவது, துன்பத்துக்கு எதிராயுள்ள மகிழ்ச்சி அல்லாமல், முழுமையும் அமைதியும், இன்ப துன்பங்களைக் கடந்த அனுபவமுமேயாம். புத்தருடைய அறிவுரைகளில் விடுதலைப் பற்றிப் பெரும்பாலும் உபயோகிக்கும் நிர்வாணம் என்னும் சொல்லுக்கு 'அவிதல்', 'குளிர்ச்சியாதல்' என்பது நேர் பொருள். புத்தர் நிர்வாணம் என்ற சொல்லால் ஒன்றுமேயில்லாது போகின்ற எதிர்மறை நிலையைக் குறித்தாரா, அன்றேல் இன்பத்தை அனுபவிக்கும் உடன்பாட்டு நிலையைக் குறித்தாரா என்பதுபற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. நிர்வாணம் என்பது நிலையான இரவில் பிறப்பிறப்பற்ற தூக்கம் மட்டும்தானா, அன்றேல் பிறப்பிறப்பற்ற நிலையான வாழ்வா என்னும் கேள்வி எழுகிறது. பௌத்தத்தின் தொன்மையான கொள்கைகளும் அவற்றை ஆராய்ச்சி செய்பவர்களும் நிர்வாணம் எனும் சொல்லால் ''உண்மையில் ஒன்றும் இல்லை'' என்ற நிலையையே குறித்தார் எனக் கருதுகின்றனர். மேலும் குறிப்பாகப் பௌத்த மதத்தை விளக்கிப் பொருள்கூறும் வேதாந்திகள் நிர்வாணத்துக்குப் பொருளாக ''உண்மையில் ஒன்றும் இல்லாததைப் போன்ற'' என்றோ, ''ஒன்றுமில்லை எனும்

வகையில்'' என்றே கருதுகிறார்கள். டாக்டர் இராதாகிருஷ்ணன் ''நிர்வாணம் எல்லாமே அழிந்து போதலைக் குறிக்கவில்லை. ஆனால் எரி மலை போன்ற உணர்வுகளும், தூய்மைபெற்ற பின் முழுமையுடன் சேர்ந்து அனுபவிக்கும் இன்பமும் அழிந்து போதலையே குறிக்கிறது' என்கின்றார்.

பல்வேறு இந்தியத் தத்துவக் கொள்கைகள் மோட்சம் என்பது என்ன என்பதில் தம்முள் வேறுபாடு கொண்டாலும், அவையெல்லாம் சம்சாரம் எனப்படும் பிறப்பு இறப்புச் சக்கர மாகிய சுழலிலிருந்து விடுபடுவதே முத்தி என்பதை ஒப்புக்கொள்கின்றன. வேகமாக ஓடும் நீரில் அகப்பட்ட புழுவானது ஒரு நீர்ச் சுழியிலிருந்து மற்றொன்றுக்கு விரைவில் தள் ளப்படுவதுபோல, ஜீவர்களும் ஒரு பிறப்பி லிருந்து மற்றொரு பிறப்புக்கு அலைக்கழிக்கப் பட்டு, பிறப்பிறப்பு என்னும் சக்கரத்தில் பிடிபட்டு உழல்கிறார்கள். மோட்சம் விடுதலை என்பது மீண்டும் பிறப்புக்குச் செல்லாத, முடி வாக இந்தச் சக்கரத்திலிருந்து விடுபடுதலையே குறிக்கும். இதையே வேறு விதமாகக் கூறினால் மோட்சம் என்பது மேலும் இறப்பு இல்லாத நிலையைக் குறிக்கும்.

அத்வைதக் கொள்கையின்படி பிரம்மம் என்பது மேலான ஆனந்தம். மோட்சம், அதா வது பிரம்மத்தை அடைதல் நிரதிசய ஆனந்த மாக உள்ளது. மோட்சத்தில் முடிவில்லாத பரப்பிரம்மத்தில் நிலையாக ஒருவர் நிறுவப்படு கின்றனர். அந்தப் பரப்பிரம்மமானது முடி வில்லாத இன்ப வடிவினது. இந்தப் பிரம்ம உண்மை எல்லா உண்மைகளையும் விடப் பேருண் மையாய், துன்பக் கலப்பில்லாத இன்ப வடிவாய் உள்ளது. வேதாந்த நூல்களின் மூலமாகப் பிரம்மத்தை ஆன்மாவாக உணரும்போது, ஒருவர் பிரம்மத்தை மட்டுமே அடைகிறார்''.

மோட்சம் என்பது துன்ப நீக்கம் மட்டுமே என்பதைக் கடைப்பிடிக்கும் சில கொள்கைகள் துன்ப நீக்கத்தைத் தவிர இன்ப அனுபவம் என்பது இல்லை என வாதிக்கின்றன. இன்பமும் துன்பமும் வெவ்வேறாக உணரப்படுதலால் அவர்களுடைய கொள்கை அனுபவத்துக்கு முரண்படுகிறது. துன்பத்தின் நீக்கமே இன்ப மானால் இன்பம் என்பது துன்பத்தின் நீக்கமே என நாம் கொள்ளலாம். எல்லா மனிதர்களி டத்திலும் துன்ப நீக்கம் மட்டுமின்றி, நேரான இன்பப் பேறும் இருத்தல் முழு மொத்தமாக உணர்ந்த உண்மையாகும். ஆனந்தம் மேலும் மேலும் வேண்டும் என்ற தேட்டமும் காணப் படுகிறது. மிருகங்களும்கூட ஆனந்தத்தையே விரும்புகின்றன. ஆனந்தத்தை அவைகளுக்கு அளிக்கும் வழிகளை வேறுபடுத்திப் பார்க்கும் திறம் மிருகங்களிடம் இல்லை. மனிதன் மட்டும் விரும்பினால், நூல்களிடமிருந்தும் முனிவர் களிடமிருந்தும் ஆனந்தத்தை அடைவதற் கான வழிகளை அறிந்து, அவைகளை வாழ்க்கை யில் கடைப்பிடிக்குத் திறமையாகிய நலனைப் பெற்றிருக்கின்றான். முனிவர்களும் நூல்களும் ஆன்மாவானது மிகவும் மேலானதெனவும், ஆனந்தம் இறுதியான முடிவு, மோட்சம் என வும் கூறுவதைக் காண்கிறோம்.

மோட்சமானது நிலையான என்றுமுள்ள ஆன்மாவின் தன்மையாய் இருப்பதால், இறப் பானது பூத தேகத்தைக் கொள்ளும் வரைக் கும் இவ்வுண்மையை உணர ஒருவர் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த உடம்பில் குடியிருந்து கொண்டே ஞானத்தைப் பெறும் போது ஒருவர் மோட்சம் அடைகிறார். இத் தகையவர் ஜீவன் முத்தர், உடலில் குடியிருக் கும்போதே மோட்சத்தைப் பெற்றவர்-இது அத்வைத தத்துவத்தின் உயர்ந்த நுண்ணறிவு ஆகும்.

## கடவுள் ஒருவர் உண்டு

''கடவுள் ஒருவர் உண்டு என்பது, நம்மைச் சுற்றி நாடோறும் நடைபெறுகின்ற செயல் களை, ஒரு சிறிது உன்னிப் பார்த்தாலே, நமக்குப் புலனாகும். நமக்கு மேற்பட்ட இயற்கைச் சட்டம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதுதான் உலக நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒழுங்கு படுத்தி வருகின்றது. ஏதோ நம்மால்தான் நாம் மேற்கொள்ளும் முனைப்பு மிக்க செயல்கள், ஒரு வகையில் தேவையில்லாதனவும், பயனற்றனவுமேயாகும். எளிய இயல்பான ஆடம்பரமற்ற செயல் நிலையில்தான், நாம் வன்மையுடையவர்களாகின்றோம். செருக்கற்ற பணிவுடைமையினால் தான், நமக்குத் தெய்விகநிலை கிடைக்கின்றது. நம்பிக்கையும் அன்புமே நம்முடைய ஏராள மான கவலைச் சுமைகளினின்று நம்மை விடுவித்து, நமக்கு நலம் விளைவிக்கின்றது. ஓ! என் அன்பிற் சிறந்த உடன்பிறப்பாளர்களே! கடவுள் இருக்கின்றார்!''

''இயற்கைப் பொருள்களினுள்ளும், ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திற்கு மேலும், கடவுள் என்ற ஓர் உயிர்ப் பொருள் உலவி நிலவி வருகின்றது. அதுவே நம்மை இயக்கி நிற் கின்றது. உலக அமைப்பை நாம் ஏதும் பிறழச் செய்து விடாதபடி, அதுதான் கவனித்துக் கொள்ளுகின்றது. உலகப் பொருள்களிலெல்லாம், அது தன்னுடைய ஆற்றல் மிக்க கவர்ச்சித் திறனைப் பாய்ச்சி ஊடுருவச் செய்துள்ளது. அதன் அறிவுரையை உடன்பட்டு ஒழுகும்பொழுது, நாம் வளர்ச்சியும் செழிப்பும் அடைகின்றோம். அதன் சிற்றுயிர்களை நாம் வருத்த முற்படும் போது, அது நம் கைகளைப் பிணித்து விடுகின்றது. அல்லது நம்மையே தாக்குமாறு செய் கின்றது. உலகப் பொருள் அமைப்புகள், செயல்கள் யாவுமே, கடவுள் ஒருவர் உண்டு என்று நமக்குஉணர்த்தி, நம்பிக்கை கொள்ளச் செய்யும் வகையிலேயே அமைந்திருக்கின்றன''

—எமர்சன்.

*தமிழாக்கம்: ந. ரா. முருகவே[ள்]*

# "அடித்தடித்து அக்காரம் தீற்றிய அற்புதம்"

"தத்துவப் பேரறிஞர்"
(திரு. டாக்டர் தேவசேனாபதி, எம்.ஏ.,பி.எச்.டி.)

இயற்கைக்கு மாறான அருஞ்செயலையோ, அரிய நிகழ்ச்சியையோ, உலகத்தவர் பொதுவாக அற்புதமெனக் கருதுகின்றனர். ஆயின் இயற்கை என்பது யாது என்பதைப் பற்றி, எவ்வாறு துணிந்து கூற முடியும்? விஞ்ஞானிகள் உற்று நோக்கியும், செய்க் காட்சி முறையிலும், இயற்கையின் நியதிகளைக் காண முயலுகின்றனர். தாம் கண்டவற்றை விளக்கும் வகையில், இயற்கையின் நியதி இதுவாயிருக்க வேண்டுமென்று சட்டங்களை வகுக்கின்றனர். இது வரை காணாத உண்மையோ நிகழ்ச்சியோ புலனானால், உடனே அதற்கேற்பச் சட்டங்களை மாற்றியோ திருத்தியோ அமைக்கின்றனர். கண், காது போன்ற பொறிகளால் அறியமுடியாத நுண்மையான காட்சிகளைக் கண்டறியுமாறு, தொலைநோக்கி, ஒலிபெருக்கி, உருப்பெருக்கி முதலியவற்றைப் பயன்படுத்துகின்றனர். பறவைகளைப் போல மனிதன் வான வெளியில் பறக்க முடியாது. மீன்களைப் போல அவன் தண்ணீரடியில் செல்ல முடியாது. ஓரிடத்தில் பேசுபவனை மிகத் தொலைவான வேறோரிடத்திலிருந்து கேட்கவோ பார்க்கவோ முடியாது, ஒலியைப் போலவோ அதை விடவோ விரைந்து செல்ல முடியாது,—இவையனைத்தும் இயற்கைக்கு மாறானவை என்று கருதப்பட்ட காலம் உண்டு. இப்போது இவையனைத்தும் நிகழக் காண்கிறோம். இவற்றை அற்புதங்களென எவரும் கருதார். ஆகவே இயற்கை யாதென்பதை முற்றுமுணர்ந்தால்தான், இயற்கைக்கு மாறானது உண்டாயின், அதனை அற்புதம் என்று கூறுவது பொருந்தும். நிகழக்கூடாதவை எனக் கருதப்பெற்ற பலவற்றை, விஞ்ஞானம் இன்று செய்து காட்டுகிறது.

சமயச் சான்றோர் பேசுகின்ற அற்புதம், வேறொரு வகையானது. அது மனிதனின் ஆன்மிக வரலாறு பற்றியது. மனிதனின் இயற்கை அடிப்படையில், உண்மை நிலையில், தெய்விகமானது. அவன் அதனை மறந்து இறைவனைச் [illegible]பாகக் கொண்டு அதன் வண்ணமாகின்றான். அனைச் சாயல் பிடிக்கின்றான். தனக்குத் தானே தலைவன் என்று கருதிக் கொள்கிறான். உலகமும் அதில் உறையும் மக்களும், எவையும், எவரும் தன்னுடைமையென்றும், தன் நலத்திற்கெனவும் முடிவு செய்கிறான். உயிருள்ளனவும் உயிரில்லனவுமான பொருள்கள் அனைத்தையும் தன் உடைமை எனவும்; தானே தன் செயல்களுக்கு முதல்வன் எனவும் கருதிச் செருக்கித் திரிகின்றான். 'யான்', 'எனது' என்னும் செருக்கு அவனுக்கு உடன்பிறப்பு—செம்பிற் களிம்புபோல. இச் செருக்கினால் பலகாலமாக மாறி மாறிப் பிறந்து வரும் அவனை, இறைவன் வலிய வந்து ஆட்கொள்வதுதான் உண்மையான அற்புதம். அருஞ்செயல். தாம் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றதை ஓர் அற்புதமாகவே சமயச் சான்றோர் காண்கின்றனர். எடுத்துக் காட்டாக, மாணிக்கவாசகர் அருளிய அற்புதத்தைப் பார்ப்போம்.

மெய்ப்பொருள் யாதுஎன்பதைக்கருதாது, அதனை அடைவதற்கு வாய்த்த இம்மண்ணுலக வாழ்க்கையில் தையலார் அழகில் மயங்கித் தலைதடுமாறுவது இயல்பாகி விடுகிறது. இத்தகைய பொய் வாழ்க்கையை விட்டுத் தன்னைப் பற்றிக் கொள்வதற்காகத் தன் பொன்னடிகளைக் காட்டி மெய்யனாய் இறைவன் வெளிப்பட்டது விளம்ப முடியாத ஓர் அற்புதம்.

பூவைக் கையில் கொண்டு நன்றேவரினும் தீதே நேரினும் முட்டுப்படாத அன்போடு இறைவனைப் போற்றாது, தாம் மங்கையர் வனப்பில் மயங்கித் தலைதடுமாறித் துயரில் புகுந்து விடாமல் இருப்பதற்காக இறைவன் அருள் செய்து தன் பொற்கழல்களைக் காட்டி ஞானவேந்தனாய் வெளியே தம் முன் நின்றது விளம்ப முடியாததோர் அற்புதம்.

நல்லவனைப் போல நடித்து, ஆனால் பொய்யான பலவற்றைச் செய்து, 'நான்' 'எனது' என்னும் அகப்புறப் பற்றுக்களால் கடிபட்டு வினைவயமாக அலையும் தம்மைப், பெரிய மறை தேடிய அரிய பொருளாகிய இறைவன் தம் முன் நின்று, தம்மைப் பிடித்து அடித்து அடித்து

இனிப்பை ஊட்டியது அறிந்து கொள்ள முடியா ததோர் அற்புதம்.

பிறப்பும் இறப்பும் ஏன் ஏற்படுகின்றன என்பதை நினையாது, பொய்யே பேசி, மாதர் கண்ணழகில் கலங்கிக் கிடக்கும் தம்மைத் திருவடியின் சிலம்பு ஒலிக்க, திருவாகிய தன் சக்தியைப் பிரியாது தோன்றிப் பெறுதற்குரிய துணைவனுகத் தம்மை ஆண்டு கொண்டது அறிய முடியாததோர் அற்புதம்.

செல்வம், சுற்றம், உலக இன்பங்கள், பெண்களோடு கூட்டுறவு, இவற்ருல் தாக்கப் பெற்றுத் திரியும் தம்மை, இவற்றினின்றும் விடுவித்து, வெய்ய வினைகள் அழிவுறுவதற்காகத் தம் மெல்லிய மலரடிகளைக் காட்டி வீட்டின்பம் தந்து, அவ்வின்பத்தால் தாம் கூத்தாடும்படித் தம் அகத்தே புகுந்து ஆண்டு கொண்டது அறியமுடியாததோர் அற்புதம்.

வளைத்துப் பிடிக்கும் பிறப்பு இறப்புக்களின் தன்மைகளை நினையாது மங்கையரோடு பிணைந்து, அவர் தரும் கலவியில் அழுந்திப் பித்தனய்த் திரியும் தம்மை, எல்லையற்ற குணங்களையுடைய—ஆனல் இன்ன குணம், இன்ன குறி உடையவன் என்று கூறவொண்ணுத—இறைவன், இளமைச் செவ்வியுடைய இறைவியோடும் கூடிவந்து ஆண்டு கொண்டருளியது அறிய முடியாததோர் அற்புதம். இறைவனை வணங்குவதற்காக, தரப்பெற்ற இப்பிறப்பில் மலர் பறித்துத் திருவஞ்செழுத்தை யோதியவாறே அவன் திருவடிகளில் அதனை இடாமல், மாதர் கண்ணழகில் மயங்கிக் கிடக்கும் தம்மைத் தன் திருவடிகளைக் காட்டி, தந்தையாகப் பரிந்து வந்து ஆண்டு கொண்டது அறிய முடியாததோர் அற்புதம்.

இரு வினை காரணமாக உயிரும் உடலும் ஊசலாடுவதைப் போல, இடைவிடாது தொடர்புற்று வர அவ்விரு வினையை அறுத்து, கண்ணுக்குப் புலனுகாத பொருளை அதனைச் சுட்டும் சொல்லால் உணரக் கூடிய நுண்ணுணர்வினர்க்கும் உணர்வதற்கரியவனுன இறைவன் தமக்கு உணர்வு தந்து (இருள் மயமாகிவிட்ட தம்மை) ஒளியாக்கி, இருளினின்றும் ஒளிக்குத் தம்மைக் கடத்திச் சென்று, தளைகளானவற்றைப் பற்றற அறுத்து, உயர்ந்த மேலான தன் கருணையால் உலக ஆசைகளைத் தீர்த்து, அடியார்கள் திருவடியில் கூட்டியது அறிய முடியாததோர் அற்புதம்.

வழி தெரியாது அலையச் செய்கிற காட்டைப் போன்ற, இப்பிறவியில் தலையில் புண்பிடித்த நாய் போல, மாதர்கள் விரும்பியவற்றையே செய்து அவர்களுடன் இணங்கித் திரிகின்ற தம்மை விண்ணவர்களும் காண ஒண்ணுத தன் திருவடிகளைக் காட்டி ஆட் கொண்டது அறிய முடியாததோர் அற்புதம்.

அடர்ந்து வருகின்ற பிறப்பு இறப்பின் தன்மைகளை நினையாது, பெண்கள் அழகிலும் இழி செயல்களிலும் கருத்தைச் செலுத்திக் கிடக்கின்ற தம்மை, எல்லையில்லாத தன் மலரடிகளைக் காட்டி அறிவு தந்து ஆண்டு கொண்டது அறிய முடியாததோர் அற்புதம்.

இவ்வாறு பத்துப் பாக்களில் மாணிக்க வாசகர் ஆன்மிகத் துறையில் நிகழ்ந்த அற்புதத்தை விவரிக்கிருர். உயிரின் இயல்பு யாது, அதற்கு உறுதி செய்வது யாது, அது அடைய வேண்டுவது யாது, அதற்கு நிலையான இன்பந் தர வல்லது யாது என்பவற்றைச் சரியாக உணராது, பொய்ந் நின்ற ஞானம், பொல்லா ஒழுக்கு, அழுக்கு உடம்பு ஆகியவற்ருேடு வாழ்வதே உயிரின் போக்காக உள்ளபோது, இறைவன் தானே வலிய வந்து ஆட்கொள்கிருன். அனைத்தாகும் நற் பண்புகளுக்கும் உறைவிடமாக உள்ள அவன் இன்ன பண்பால் உணரக் கூடியவன், இன்ன குறியால் தெரிந்து கொள்ளக் கூடியவன் என்னும் வரையறைக்கு அப்பாற்பட்டவனுயினும், உயிர்கள் மீது வைத்துள்ள பேரருளின் காரணமாக இறைவியோடும் காட்சி கொடுத்து உயிர்களை உய்விக்கின்ருன். நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைந்து சிறு நெறிகளில் சென்று இன்பம் போலக் காட்டித் துன்பத்தில் அழுத்தும் புலனின்பங்களில் உயிர்கள் மயங்காமல், பேரின்பத்தை நுகர்வதற்கான இறைவன் வன்முறைகளைக் கையாளுவது போலவும் தோற்றலாம்.

நன்மை தராத உணவில் குழந்தையின் நாட்டம் சென்று, நன்மை தரக் கூடிய உணவை அது ஏற்க மறுத்தால், தாய் அக்குழந்தையை அடித்தாயினும் உண்பிப்பாள். இம் முறையில் தான் இறைவன் துன்ப நிகழ்ச்சிகள் போலத் தோன்றுவனவற்றின் மூலமாகப் புலன் வழி வரும் நிலையிலா இன்பத்தை விட்டு நிலையான பேரின்பத்தை நுகர வைக்கிருன். அறிவு படைத்த உயிருக்கு நன்மை தீமைகள் யாவை எனத் தெரிய வேண்டும். தீயனவற்றை விடுத்து நல்லனவற்றை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளாத நிலையிலும், இறைவன் உயிர்கள் மீது வைத்த நேசத்தினுல் வலிய வந்து ஆட்கொள்கிருன். அவன் பணி பிழைத்தால் புளியம் வளாரால் மோதுவிக்கிருன், முனிகிருன், உளம் திருந்தினுல் உவக்கிருன். இவ்வாறெல்லாம் தன்னை விட்டு விலகிச் செல்லும் உயிர்களை அவன் விரும்பி வந்து ஆட்கொள்வது அற்புதம். அடித்தாயினும் அக்காரம் தீற்றும் அற்புதம் என்பது மாணிக்கவாசகரின் திருவுள்ளம்.

# கண்ணபிரானும் உடையவரும்

'மகாவித்வான்'
ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கரார்சாரிய சுவாமிகள்,
காஞ்சிபுரம்.

## கண்ணபிரானும் உடையவரும்

முகுந்தமாலை என்னும் ஸ்தோத்திரத்தில், ''ஹே ராமாநுஜ! ஹே ஜகத்த்ரய குரோ! ஹே புண்டரீகாக்ஷ மாம் ஹே கோபீஜநநாத! பாலய'' என்று ராமாநுஜ திருநாமத்தினாலே பலராம அநுஜனான கண்ணபிரான் அழைக்கப் பட்டுள்ளான். ஆகவே கண்ணபிரானுடைய அந்தத் திருநாமமே ஸ்வாமி உடையவர்க்குச் சாத்தப்பட்டதென்று கொள்ளுகிற ஸம்பிர தாயமும் ஒன்றுண்டு. யதிராஜ ஸப்ததியில் ''சமிதோதய சங்கராதிகர்வ: ஸ்வபலாத் உத்த் ருதயாதவ ப்ரகாச:, அவரோபித வாந்ச்ருதேர பார்த்தாந் நநு ராமாவரஜஸ்ஸ ஏஷ பூய:'' என்ற ச்லோகம் இதற்கு ஆதாரமாக அவ தரித்ததாகும். கண்ணபிரானுக்கும் உடைய வர்க்கும் பல படிகளாலும் ஸாம்யமுண்டு. கண்ணபிரானாகத் தோன்றின பகவான் செய்த செயல்களும், இராமாநுஜர் செய்தருளின செயல்களும் ஒத்திருக்கையாகிய ஒற்றுமை நயம் ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. மேலே யெடுத்துக் காட்டிய ''சமிதோ தய சங்கராதி கர்வ:'' இத்யாதியான யதிராஜ ஸப்ததி ச்லோக ரத்னத்தில் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யம் சிலேடையினால் நிர்வகிக்கப்பட்டுள் ளது; அது வடமொழிக் கடலில் ஆழ்ந்தவர் கட்கே ரஸிக்கக் கூடியது. இப்போது இங்கு நாம் நிரூபிக்கும் ஒற்றுமை நயங்கள் சரித்திரப் போக்கில் சம்பந்தப்பட்டதாகும். கேண்மின்:

1. கண்ணபிரான் திருவவதாரஞ் செய்த இடம் சிறைக்கூடம் என்பது உலகமறிந்தது. இராமாநுஜர் அவதரித்த இடமும் சிறைக் கூடமே. எப்படியெனில்; ''அமரரோடு உயர் விற் சென்று அறுவர்தம் பிறவி யஞ்சிறையே'' (திருவாய்மொழி1-3-11) என்ற நம்மாழ்வார் திருவாக்கின்படி இந்த சம்ஸார மண்டலமே ஒரு சிறைக்கூடமன்றோ. இஃது 'இருள்தருமா ஞாலம்' ஆதலால் இருள் மலிந்த விடத்தே வந்து பிறந்தார் உடையவர். கண்ணனும் 'இருள் நாள் பிறந்த வம்மான்' என்ற திரு மங்கையாழ்வார் பாசுரத்தின்படியும், 'வேண் டித் தவரிரக்க-வீங்கிருள்வாய் வந்து பிறந்ததும்' என்ற நம்மாழ்வார் பாசுரத்தின் படியும் இருள் மலிந்த போழ்தன்றோ வந்து பிறந்தது.

2. கண்ணபிரான் அவதரித்தபோது ''ஜாதோஸி தேவதேவேச சங்க சக்ர கதாதர!' என்கிறபடியே சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனாகவே சுடர் விளக்கத்தோடு திருவ வதரித்தான். சுவாமி அவதரிக்கும்போதும் நம்போலியரைப் போல அழுதல் அரற்றுதல் செய்யாதே மிக்க ஞான வெள்ளச்சுடர் விளக் கத்தையே காட்டிக் கொண்டு அனைவரும் வியப் புறுமாறு அவதரித்தார்.

3. கண்ணபிரான் பிறந்த இடம் ஒன்று; இளமையில் வளர்ந்த இடம் வேறொன்று; பிறகு வளர்ந்தவிடம் மற்றொன்று. (அதாவது) வடமதுரையிலே பிறந்தது; திருவாய்ப்பாடி யிலே இளமையில் வளர்ந்தது; பிறகு முதுமை யில் துவாரகை முதலான இடங்களில் வளர்ந் தது. நம் ஆசாரியரும் பிறந்தது ஸ்ரீபெரும் பூதூரில்; இளமையில் வளர்ந்தது காஞ்சிபுரியில்; பிறகு வளர்ந்தது திருவரங்கம் திருநாராயண புரம் முதலான இடங்களில்.

4. (மற்றொரு வகையுமுண்டு): ''திருமந் திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து'' என்கிற நம் முன்னோர்களின் முதுமொழியின் படியே திருவஷ்டாக்ஷர மகா மந்திரத்தினால் சொரூபவுணர்ச்சி பெறுதலாகிற பிறவியைப் பெற்று, த்வயம் என்கிற மந்த்ர ரத்னத்தின் அநுசந்தானத்தையும் அதன்படி அனுட்டானத் தையுமே செல்வ வாழ்ச்சியாகக் கொண்டிருப் பவரென்க. பிறக்குமிடம் திருமந்த்ரம்; வளரு மிடம் த்வயம்-ஆக இதனாலும் கண்ணனோடு ஒப்புமை.

5. கண்ணபிரான் பிறந்த வயிற்றில் இவ னொருவனே பிறக்கவில்லை; 'மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்தவள்தன் வயிற்றில், சிக்கன வந்து பிறந்து நின்றாய்' (பெரியாழ்வார் திருமொழி 5-3-1) என்கிறபடியே மற்றும் பல மக்கள் பிறந்தாருண்டு; ஆனால் அந்தப் பிள்ளை களினால் உலகுக்கு யாதொரு உதவியும் நேர்ந்த தில்லை; அவர்கள் பிறந்ததும் இறந்ததுமே தெரியவருகின்றது. இதுபோல, எம்பெரு மானார் திருவவதரித்த இவ்வுலகத்தில் மற்றும் பல பேர்களும் ஒக்கப் பிறக்கின்றார்களெனினும் அவர்களால் உலகுக்கொரு நன்மையுமில்லை யாயிற்று. அவர்களின் பிறப்பும் இறப்பும் தான் உலகுக்குத் தெரியும்.

6. கண்ணபிரான் வடமதுரையில் நின் றும் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளும் போது 'வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத் ரோதகோ யயௌ'' என்னும்படி பேராழமான பெருவெள்ளமும் முழந்தாளளவாக வற்றிப் போயிற்றென்று தெரியவருகிறது. அதுபோல, நம் ஆசாரியர் சிறிது ஸஞ்சரிக்கத் தொடங்கும்

போதே 'பிறவி யென்னுங் கடலும் வற்றிப் பெரும் பதமாகின்றதால்' என்ற பெரியாழ்வார் திருவாக்கின்படியே ஸம்ஸாரமாகிய பெருங்கடலும் வற்றத் தொடங்கிற்றென்க.

7. பராத்பரனை பெருமான் தனது பெருமைகளை யெல்லாம் மறைத்து அடக்கிக் கொண்டு நீறு பூத்த நெருப்புப்போலேயாகி இடக்கை வலக்கை யறியாத ஆயர்களோடே கலந்து பழகினன்; அதுபோல எம்பெருமானாரும் மிகுஞானச் சிறு குழவியாய்த் தமது ஞான சக்திப் பெருமைகளையெல்லாம் மறைத்துக் கொண்டு அறிவிலா மனிசரோடே கலந்து பழகியிருந்தனர். கண்ணன் இடையர்களோடு மாத்திரம் கலந்து பழகி யிருந்தானல்லன்; தன்னை வதைக்க வழிபார்த்திருந்த ஆஸுர ப்ரக்ருதிகளோடும் கலந்திருந்து காலங் கழித்தனன். எம்பெருமானாரும் தம்மை மாய்க்க எண்ணின யாதவ ப்ரகாசர் போல்வாரிடத்திலும் கலந்திருந்து காலங் கழித்ததுண்டே. கண்ணன் விரோதிகளை முடித்தனன்; இவர் வாழ்விப்பதும் செய்தனர்.

8. வளர்ந்தருளு மிடத்தில் தீய புந்திக் கஞ்சனால் ஏவப்பட்ட பூதனை தாய்வேஷம் பூண்டு வந்து நஞ்சுதீற்றி முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று தானே முடிந்து போனாள். இந்தப் பூதனையின் வரலாற்றைப் பேசுகின்ற தேசிகர் யாதவாப்யுதயத்தில் 'கம்ஸ ப்ரயுக்தா கில காபி மாயா' என்று மாயை என்கிற சொல்லால் கூறினர். மாயையென்று மூலப்ரக்ருதிக்குப் பெயர். அது உண்மையில் விஷம் போன்றதாயிருக்கச் செய்தேயும் தன்னிடத்தில் பாக்யதா புத்தியை யுண்டு பண்ணிக் கொண்டு தன் பக்கலிலே யீடுபடுத்தி நம் போல்வாரை முடிக்கப் பார்க்கிறது. இப்படியே ஆசாரியரையும் முடிக்கப் பார்க்கையில் அவரை முடிக்க மாட்டாமல் அவரது அளவற்ற பெருமையினால் தானே முடிந்து நின்றது.

9. 'கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி' (திருப்பாவை-6) என்றபடி அஸுராவேசம் பெற்றவொரு சகடத்தைக் கண்ணன் திருவடி ஸ்பர்சத்தால் நொறுக்கி முறித்து முடித்தனன் என்பது பிரசித்தம். எம்பெருமானாரும் தமது திருவடி ஸ்பர்சத்தினால் கடபங்கஞ் செய்தவரே, (எப்படியெனில்) ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போகும் ஸாதனம் கடமெனப்படுவது. இங்கிருந்து நாம் அப்பால் செல்லப் பல வழிகளுண்டு: நரகம் சுவர்க்கம் முதலானவற்றின் வழிகளிற் கொண்டு செல்லுவது கள்ளச் சகடமாகும்; நம் ஆசாரியருடைய திருவடி சம்பந்தத்தினால் அதுதொலைந்தொழிந்ததேயாம். அர்ச்சிராதி மார்க்கமாகிய நல்வழியிற் செல்லும் ஸாதனமே மேம்பட்டுத் தீய வழிகளில் செல்லும் ஸாதனம் சிதைந்தொழிந்ததென்க.

10. கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிடப் பெற்ற கண்ணன் அவ்வுரலையும் இழுத்துக் கொண்டு தவழ்ந்து இரட்டை மருத மரங்களின் நடுவே எழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்ட படியினாலே இந்த இரட்டை மரங்களிரண்டும் முறிந்து விழுந்தனவாக யாமளார்ஜுன பங்க விருத்தாந்தமுள்ளது. இணைபிரியாதே நின்ற இரட்டை மருத மரங்கள்போல், இணை பிரியாது நின்று நம்மை நலியுமவை பலவுண்டு; பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில், 'த்வந்த்வாதீதோ விமத்ஸர:' என்றும், ஏழாவது அத்யாயத்தில் 'த்வந்த்வமோஹேநபாரத' என்றும், பதினைந்தாமத்யாயத்தில், 'த்வந்த்வைர் விமுக்தாஸ் ஸுக துஃக ஸம்ஜ்ஞை:' என்றும் இப்படிப் பலவிடங்களில் த்வந்துவம் (இரட்டை) என்று பல சொல்லப்பட்டுள்ளன; இன்பு துன்பு, அஹங்கார மமகாரம், காமக்ரோதம், புண்ணியபாவம்...என்னுமிவையெல்லாம் இரட்டைகளாம். இவையெல்லாம் எம்பெருமானார் திருவடி ஸம்பந்தம் பெற்றவளவிலே இற்றொழிந்தன வென்க. ''காமாதி தோஷ ஹரமாத்ம பதாச்ரிதாநாம்''.

11. 'வையமேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே' என்றும், 'வாயுள் வையகங் கண்ட மட நல்லார்' என்றும் சொல்லுகிறபடியே கண்ணபிரான் தனது திருவாயில் ஏழுலகங்களையும் அன்பர்களுக்குக் காட்டினன். அதுபோல எம்பெருமானாரும் 1.ச்ருதிகள், 2. ஸ்மிருதிகள், 3. இதிஹாஸங்கள், 4. புராணங்கள், 5. பாஞ்சராத்ரங்கள். 6. ஆழ்வாரருளிச் செயல்கள், 7. ஆசார்ய திவ்ய ஸுக்திகள் ஆகிய ஏழையும் தமது திருவாக்கில் அன்பர்கட்குக் காட்டியருளினர்.

12. யமுனை யாற்றில் ஓர் மடுவில் இருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்னியினால் கொதிப்படைந்தநீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளியனென்னுங் கடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கினன். இவ்வரலாற்றை யாதவாப் யுதய காவியத்தில் தேசிகர் கூறுமிடத்து (4.125) இராமாநுஜர் செய்தருளின செயலையே உவமையாகக் காட்டியருளினர். ஐந்தலைவாய் நாகமாகிய காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்தது-விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் மனம்போனபடியெல்லாம் கூறும் தவறான பொருள்களாலே வேதங்களைக் கெடுத்தபடியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிமையாகப் பருகும்படி செய்தது-சுவாமி தவறான பொருள்களை நீக்கி நல்ல பொருள்களை வெளியிட்டு வேதத்தை ஸத்துக்களுக்கு உபஜீவ்யமாக ஆக்கினபடியாம். யமுனையின் ஸ்தானத்தில் வேதம்; காளியன் ஸ்தானத்தில் குதர்க்கவாதிகள், கண்ணன் ஸ்தானத்தில் ஆசாரியர். 'தூயபெரு நீர் யமுனைத்துறைவனை' என்னும்படி யமுனையாறு இடையறாது பகவத் ஸம்பந்தத்தையுடையதாயிருந்தது போல, வேதமும் பகவத் ஸம்பந்தத்தை நியதமாக வுடைத்தாயிருக்குமிறே.

13. காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சையுமிழ்ந்து நாசம் விளைவித்ததுபோல புறமதத்தவர்கள், ஐந்து விதமான துர்வாதங்களாலே நாசத்தை விளைவிக்கின்றனர்; (எப்படியென்னில்) 1. ஈச்வரனே யில்லையென்னுதல். 2. ஈச்வரன் உண்டெனினும் அவன் அனுமானத்தால் ஸித்திப்பவனேயன்றிச் சாஸ்த்ரத்தால் ஸித்திப்பவனல்லன் என்னுதல்; 3. சாஸ்த்ரங்களைக் கொண்டு ஈச்வரனை யங்கீகரித்தும் அவனுக்

குணங்களும் விக்ரஹமும் இல்லையென்னுதல்; 4. ஈச்வரன் ஒருவனே யென்பதில்லை, பல ஈச்வரர்கள் உண்டென்னுதல்; 5. பிரபஞ்சமே யில்லை-ஸர்வம் சூன்யம் என்னுதல்; ஆக இப்படிப்பட்ட ஐவகையான அபார்த்தங்களினால் புறமதத்தவர்கள் வேதங்களைக் கெடுக்க, அந்தக் கெடுதல்களை எம்பெருமானால் போக்கியருளினர். காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடனம் புரிந்தாற்போலே, 'நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே' (திருமாலை-1) என்ற கணக்கிலே யமபடர்களின் தலைமீதும் குத்ருஷ்டிகளின் தலைமீதும் கூத்தாடப் பெறுவோம்.

14. குதிரை வடிவங்கொண்டு மஹா பயங்கரனாக வந்த கேசியென்னும் அசுரனைக் கண்ணபிரான் தொலைத்தருளினன்; அதுபோல நம் பேராசிரியர் 'இந்த்ரியாணி ஹயாநாஹு' என்ற உபநிஷத்தின்படியே குதிரைகளாகச் சொல்லப்பட்ட இந்திரியங்களின் வலியை யடக்கி ஜிதேந்திரியராய் 'மதநகதநைர் நக்லிச்யந்தே யதீச்வஸம் ச்ரயா:' (யதிராஜ ஸப்ததி) என்று சொல்லும்படி வாழ்ந்தனர்.

15. கம்ஸனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஓர் அசுரன் விளாமரத்தின் வடிவமாய், தன் கீழே கண்ணன் வரும்போது மேல் விழுந்து கொல்வதாக எண்ணி வந்து நிற்கவும், மற்றொரு அசுரன் கண்ணனை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு நிற்கவும், இவற்றை யறிந்த கண்ணபிரான் 'விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே' 'கன்று கொண்டு விளங்கனியெறிந்து' என்கிறபடியே கன்றைச் சுழற்றி விளவின் மீதெறிந்து இரண்டையும் ஒருசேர முடித்தருளினன் என்ற வரலாறு முள்ளைக்கொண்டே முள்ளைக் களைகிற படியைக் காட்டுகின்றது. இது போலவேஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரர் புறமதங்களைக் கண்டிக்குமிடத்து அவை பரஸ்பர வ்யாஹாதங்களாயிருக்கும் படியை நன்கு நிரூபித்துக் காட்டி அவைகளைக் கொண்டே அவற்றை மறுத்தொழிப்பவர்.

16. இடையர்கள் வழக்கப்படி இந்திரனுக்குப் பூசை செய்யப் பற்பல வண்டிகளில் சோறும், தயிரும், நெய்யும், காய்கறிகளும் சேகரிப்பதைக் கண்டு, கண்ணன் அப்பூசனை அனைத்தையும் கோவார்த்தன மலைக்கே இடும்படி கட்டளையிட்டுத் தானே ஒரு தேவதா ரூபங் கொண்டு, அவற்றை முற்றும் அமுது செய்தருள, இந்திரன் பசிக்கோபத்தினால் மேகங்களை ஏவிக் கடூரமான கல் மழையை ஏழுநாள் பெய்விக்க, அதனால் யார்க்கும் யாதொரு தீங்கும் நேரிடாதபடி கண்ணன் அம்மலையைக் குடையாக எடுத்துப் பிடித்து நின்றனன் என்பது பிரஸித்தமான கதை. தேவதாந்தரத்திற்கு வழிபாடு செய்வதைப் பொறாத தன்மையும், அந்த வழிபாடுகளையெல்லாம் தானே ஏற்றுக் கொள்ளும் தன்மையும், அதனால் எதிரி என்ன தீங்கு செய்ய நினைத்தாலும் அதற்குப் பிரதியாகத் தீங்கிழைக்க நினையாத பெருந்தகவும், தன்னை யடுத்தவர்களைத் தான் ரக்ஷித்துக் கொண்டு நிற்றலுமாகிய ...ஷயங்கள் இவ்விதிஹாஸத்தில் கிடைக்கின் ...ன. 'மறந்தும் புறந்தொழா மாந்தர்' என்றி ...க்குமாசிரியர் தேவதாந்தர பஜனத்தைச் சிறிதும் சகியார். ''திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு' என்று துணிந்து உபதேசிப்பர். ஸாக்ஷாத்நாராயணா தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா' என்றும், 'பீதக வாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து' என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானே ஆசார்யனாக வந்து பிறந்ததனால் ஆராதனைகளெல்லாம் ஆசார்யனுக்கே சேரும். ''குற்றஞ் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்'' (ஸ்ரீவசன பூஷணம் 305) என்றிருப்பவர், பிழை செய்பவர் திறத்திலும் ப்ரதியாகத் தீங்கிழைக்க நினையார். பெருமழையில் நின்றும் கண்ணன் காத்தருளினது போல 'அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தத: துக்கவர்ஷிணி-பவ துர்த்தி நே' (ஸம்ஸாரத் துயர்ப் பெருமழையினின்றும்) காத்தருளினர். கண்ணன் ஏழுநாள் காத்தனன். ஆசிரியர் காப்பது ஏழேழ் பிறவிக்கும்.

17. கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக, அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி அஸுரா வேசம் பெற்ற ஏழு எருதுகளை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன். நம் பரமாசார்யர் 'எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம்போலே திருமந்த்ரம்' (முமுக்ஷுப்படி 113) என்கிறபடியே திருமந்த்ரமாகிய திருமாங்கலியத்தைச் சேதநர்களுக்குக் கட்டி விவாஹம் நடத்துகைக்கு அங்கமாக, காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், அஸூயை என்கிற ஏழு விரோதிகளையும் தொலைத்தருளினர். கண்ணன் இரண்டு மல்லர்களை மடித்ததுபோல ஆசிரியர் 'நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து' என்கிறபடியே அகங்கார மமகாரங்களை அடியறுத்தவர். கண்ணன் குவலயாபீடமென்கிற மதயானையை முடித்தாற்போலே 'மதக்களிறைந்தினையும் சேரி திரியாமல் செந்நிறீஇ' என்கிற பொய்கையார் பாசுரத்தின் படியே மத களிறாகிய இந்திரியத்தின் துஷ்டத் தன்மையைத் தொலைத்தவர். கண்ணன் மாலாகாரர் திருமாளிகைக்கெழுந்தருளி அவர் தந்த பூவைப் பெற்று உகந்ததுபோல நம் ஆசிரியர் 'அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்ப மிந்த்திரிய நிக்ரஹ:, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:, ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ; ப்ரீதிகரம் பவேத்' என்னப்பட்ட எண்வகைப் பூவையும் சிஷ்யர்கள் பக்கலிலே செழித்து வளரக் காணப் பெற்றுக் களித்தனர்.

18. கண்ணபிரான் கம்ஸ சிசுபால கௌரவ ப்ரக்ருதிகளை முடித்துப் பஞ்ச பாண்டவாதிகளை வாழ்வித்தது போல, நம் பரமாசார்யர் 'தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனர்' என்னும்படியாக 'நாட்டிய நீசச்' சமயங்களை மாள்வித்து அர்த்த பஞ்சகம் முதலிய விசேஷார்த்தங்களை எங்கும் விளங்கச் செய்தனர். **

# சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயில்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**கோயில் :**

சிதம்பரம், சைவ சமயத்தின் தலைசிறந்த பெருந் தலம். உலகம் வியந்து போற்றுகின்ற சிறந்த கலை வடிவமாகத் திகழும் நடராசப் பெருமான் எழுந்தருளி விளங்கும் புண்ணியப் புனிதப் பெருந்தலம், சிதம்பரமேயாகும். தமிழ்நாட்டில் எத்தனையோ பல நூற்றுக்கணக்கான கோயில்கள் இருப்பினும், ''கோயில்'' என்றால், அது சிதம்பரத்தை மட்டுமே சிறப்பாகக் குறிக்கும். அத்தகைய பெரும் சிறப்பு வாய்ந்தது சிதம்பரம். சைவத் திருமுறைகளில் சிதம்பரத்தினைக் ''கோயில்'' என்றே குறிப்பிட்டுப் பெரியோர்கள் வழங்கியுள்ளனர்.

**மூர்த்தி—அம்பலக் கூத்தன் :**

தலம் என்றால் சிதம்பரமே! தெய்வத் திருவுருவம் ஆகிய மூர்த்தம் என்றால், அது நடராசப் பெருமானின் உருவமே! தீர்த்தம் என்றால் அது சிதம்பரத்தில் உள்ள சிவகங்கையே ஆகும். இதனைச் சைவப் பெருஞ் சான்றோர் ஆகிய குமரகுருபர சுவாமிகள்,

''தீர்த்தம் என்பது சிவகங்கையே
ஏத்தரும் தலம் எழிற் புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''

என்று வியந்து போற்றிப் பாராட்டித் துதிக்கின்றார்.

**தலப்பெயர்கள் :**

சிதம்பரத்திற்குத் தில்லை, புலியூர், பொது, புண்டரிகபுரம், சிதாகாசம், சிற்றம்பலம் முதலிய பல பெயர்கள் உண்டு. முற்காலத்தில் இத்தலம், தில்லை என்ற ஒருவகைப் புதர்ச் செடிகள் நிறைந்த காடாக இருந்ததனால், இதற்குத் தில்லை, தில்லைவனம் என்னும் பெயர்கள் ஏற்பட்டன. வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் வழிபட்டு அருள் பெற்றதனால், இதற்குப் புலியூர் என்று சிறப்புப் பெயர் ஏற்பட்டது. திருப்பாதிரிப்புலியூர், திருஎருக்கத்தம்புலியூர், திருவோமாம்புலியூர் என்னும் வேறு பிற தலங்கள் இருப்பதனாலும், அவைகளையெல்லாம்விட, இங்கேயே மிக்க பெரும் பற்றுடன் நடராசப் பெருமான் எழுந்தருளி நிலைபெற்று வீற்றிருந்து அருள்வதனாலும், இது பெரும்பற்றப் புலியூர் என்று மிகவும் சிறப்பித்துப் புகழ்ந்து ஓதப்படும். ''பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே'' என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். ''எச்சமயத்தவரும் வந்து இறைஞ்சா நிற்பர்'' என்று தாயுமான சுவாமிகள் பாடியபடி, பக்தர்கள் எல்லோருக்கும் பொதுவான தலமாக விளங்குதலால், இதற்குப் பொது என்றும் ஒரு பெயர் உண்டு.

**தில்லைச் சிற்றம்பலம் :**

ஆன்மாக்களின் இருதயம் ஆகிய புண்டரிகம் (தாமரை) போல விளங்குவதனால், இதற்குப் புண்டரிகபுரம் என்று காரணப்பெயர் ஏற்பட்டது. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களுக்குரிய தலங்களுள், இது ஆகாசத்துக்குரிய தலமாதலால், இதற்கு ஞானகாசம், சிதாகாசம், சிதம்பரம், சிற்றம்பலம் என்னும் பல பெயர்கள் வழங்கும். இவற்றுள் தில்லை என்னும் பெயரும், சிற்றம்பலம் என்னும் பெயரும், மிகவும் சிறப்பாகச் சைவத் திருமுறைகளில் பெரிதும் எடுத்து ஓதப்பெற்றுள்ளன.

''அல்லல் என்செயும்? அருவினை என்செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்?
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லை யில்லதோர் அடிமை பூண்டேனுக்கே''

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

''செல்வ நெடுமாடம் சென்றுசேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே''

என்பது திருஞானசம்பந்தர் தேவாரம்.

### பஞ்ச சபைகள் :

நடராசப் பெருமானுக்கு உரிய சபைகள் ஐந்து என்பர். அவைகளுள் திருவாலங்காடு இரத்தினசபை; மதுரை இரசித சபை (வெள்ளி அம்பலம்); திருநெல்வேலி தாமிர சபை; திருக்குற்றாலம் சித்திரசபை; சிதம்பரம் கனகசபை (பொன்னம்பலம்) ஆகும்.

இவைகளேயன்றிச் சிதம்பரம் கோயிலி லேயே நடராசருக்கு ஐந்து சபைகள் உண்டு. அவைகள் முறையே சிற்சபை, இராசசபை, கனகசபை, நிருத்தசபை, தேவசபை எனப்படும். நடராசப் பெருமான் இருக்குமிடம் சிற்சபை; ஆயிரக்கால் மண்டபம் இராச சபை; சிற் சபைக்கு முன்னால் உள்ளது கனக சபை; கொடி மரத்திற்கு அருகில் மிகவும் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியிருப்பது நிருத்த சபை; பேரம்பலம் என்பது தேவசபை; இவை களெல்லாம் நேரிற் கண்டு தரிசித்து மகிழ வேண்டிய பெருஞ் சிறப்புடையவையாகும்.

### இறைவன் :

இறைவன் அருவம், உருவம், அரு வுருவம் என்னும் மூன்று நிலைகளில் விளங்கி யருள்கின்றான் என்பது சைவ சித்தாந்தம். இவற்றை முறையே வடமொழியில் சகளம், நிஷ்களம், சகளநிஷ்களம் என வழங்குவர். சிதம்பரத்தில் சகளத் திருமேனியாகிய உருவம், நடராசர் வடிவம். நிஷ்களத் திருமேனியாகிய அருவம் சிதம்பர ரகசியம். சகள நிஷ்களத் திருமேனியாகிய அருவுருவம் ஸ்படிகலிங்கம். இந்த ஸ்படிக லிங்கமே, அழகிய திருச்சிற்றம் பலமுடையார் எனப் போற்றப்படுவதாகும். இவைமட்டுமேயன்றிச் சிதம்பரம் திருக்கோயி லில் இரத்தின சபாபதியாகிய மரகத நட ராசரும், சுவர்ணகால பைரவரும் எழுந்தருளி விளங்குகின்றனர்.

### திருக்களிற்றுப்படி :

சிதம்பரம் கோயிலில் உள்ள பேரம்பலம்: சிற்றம்பலம், திருவணுக்கன் திருவாயில், திருக் களிற்றுப்படி என்னும் இடங்களைக் குறித்துச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சேக் கிழார் சுவாமிகள் தமது பெரியபுராணத்திற் குறிப்பிட்டுப் புகழ்ந்து பாடியிருக்கின்றார். திரு வணுக்கன் திருவாயில் நடராசப் பெருமான் ஆகிய சபாநாயகர் எழுந்தருளியிருப்பது. திருக்களிற்றுப்படி, யானைத் துதிக்கை வடிவாய் இரண்டு புறமும் அமைந்துள்ள ஐந்து படிகள். இவ்வைந்தையும் கடந்த மேல்நிலையிலேயே, சபாநாயகர் எழுந்தருளியிருக்கின்றார். யானைத் துதிக்கை பிரணவத்தையும், ஐந்துபடிகள் ''நமசிவாய'' என்னும் பஞ்சாக்கர மந்திரத் தையும் குறிக்கின்றன.

### திருச்சித்திர கூடம் :

சிதம்பரத்தினை வைணவர்கள் 'திருச்சித் ரகூடம்' என வழங்குவர். இங்கே பெருமாள் தில்லைக் கோவிந்தராசர் எனவும், தாயார் புண்டரீகவல்லி எனவும் பெயர் பெற்றுக் கோயில் கொண்டுள்ளனர். திருமங்கையாழ் வார், குலசேகர ஆழ்வார் என்னும் இருவரும், முறையே பெரிய திருமொழி, பெருமாள் திரு மொழிப் பாடல்களால் தில்லைச் திருச்சித்திர கூடம் என்னும் சிதம்பர தலத்தினை மங்களா சாசனம் செய்து போற்றியுள்ளனர்.

### ஆனந்த தாண்டவம் :

சிவபெருமான் செய்தருளிய தாண்ட வங்கள் ஏழு. அவைகள் முறையே காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், உங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் எனப்படும். இவற்றுள் சிதம்பரத் தில் நடராசப் பெருமான் செய்தருள்வது ஆனந்த தாண்டவம் ஆகும்.

''ஆனந்தக் கூத்தன்
அருள்பெறில் நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகி நின்று
ஆடாமோ தோள் நோக்கம்''

என்று மணிவாசகப் பெருமான் தமது திரு வாசகத்தில் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார். இந்தத் தாண்டவமே சிருட்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களும் நிகழ்வதற்குக் காரணமாக இருப்பதனால், இதனைப் பஞ்ச கிருத்தியப் பரமானந்த தாண்டவம் எனவும் பெரியோர்கள் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

### கோபுர தரிசனம் :

சிதம்பரம் கோயிற் கோபுர தரிசனம் மிகவும் விசேடமானது. ''கோபுர தரிசனம் பாப விமோசனம்'' என்பது பழமொழி. சிதம் பரம் கோயிலை நான்கு அழகிய கோபுரங்கள் பெரிதும் அழகு செய்கின்றன.

சிதம்பரம் கோயிலுக்குள் கிழக்குக் கோபுர வாயில் வழியாக மணிவாசகரும், தெற்குக் கோபுர வாயில் வழியாக ஞானசம் பந்தரும், மேற்குக் கோபுர வாயில் வழியாக அப்பர் சுவாமிகளும், வடக்குக் கோபுர வாயில் வழியாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் வந்து வழிபட்டனர் என நூல்கள் கூறுகின்றன.

*(1)* சிதம்பரம் கோயிலின் கிழக்குக் கோபுரம், கி.பி. *1118* முதல் *1135* வரை அரசு செலுத்திய பேரரசனாகிய விக்கிரம சோழன் கட்டியது. இதனைக் கி.பி. *1785*-இல் காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்ப முதலியாரின் தமக்கையார் ஆகிய சுப்பம்மாள் என்பவர் புதுப்பித்துத் திருப்பணி செய்தார்.

*(2)* மேற்குக் கோபுரம், கி.பி. *1251* முதல் *1268* வரை அரசாண்ட சுந்தரபாண்டி யன் கட்டினான்.

(3) தெற்குக் கோபுரம், கி. பி. 1243 முதல் 1280 வரை அரசாண்ட கோப்பெருஞ் சிங்கன் என்னும் பல்லவ மன்னனால் கட்டப் பெற்றது.

(4) வடக்குக் கோபுரம், விசயநகரப் பேரரசரும், கி. பி. 1509 முதல் 1539 வரை அரசாட்சி புரிந்தவரும் ஆகிய கிருஷ்ணதேவ ராயர், தம்முடைய ஒரிசா வெற்றியின் நினைவாகக் கட்டினர்.

(5) கிழக்கு, மேற்குக் கோபுரங்களில் 108 நாட்டிய பேதங்களையும் அறிவிக்கும் சிற்பங்கள் அழகிய முறையில் அமைந்துள்ளன.

**மண்டபங்கள் :**

இங்குள்ள நூற்றுக்கால் மண்டபம் கட்டியவர், தொண்டைநாட்டு மணவிற் கூத்தனகிய காலிங்கராயன் என்பவர். சிவகாமி அம்மையின் கோயிலும், சிவகங்கைத் தீர்த்தமும், இரண்டாம் குலோத்துங்க மன்னனால் அமைக்கப்பட்டன. இங்குள்ள ஆயிரக்கால் மண்டபத்தில்தான், சேக்கிழார் சுவாமிகள் தம் பெரிய புராணம் அரங்கேற்றியருளினர் என்பர்.

சிதம்பரம் கோயில், முதன் முதலில் சிம்மவர்மன் என்னும் மன்னனால் அமைக்கப்பெற்றது. இக்கோயிலில் அண்டம், பிண்டம் என்னும் இரண்டின் நுட்பங்களையும் உணர்த்தும் நிலையில் அமைந்திருக்கின்றது.

**கோயிலின் தத்துவ அமைப்பு :**

அண்டத்தின் ஒரு பகுதி, பரத கண்டம். அதில் உள்ள இலங்கைக்கும், இமயமலைக்கும் இடையில் உள்ளது, தில்லை என்னும் சிதம்பரம். இலங்கை இடைகலை நாடி. இமயம் பிங்கலை நாடி. சிதம்பரம் சுழுமுனை என்னும் நடு நாடி எனப்படும்.

நான்கு வேதங்கள், 4 கோபுரங்கள்; 1,000 கால் மண்டபம், சகஸ்ராரம் என்னும் 1,000 இதழ்த் தாமரை; சிவகங்கைத் தீர்த்தம் சகஸ்ராரத்தை அடுத்துள்ள அமிழ்தப் பொய்கை; நான்கு தம்பங்கள், நான்மறையின் அதிதெய்வங்கள்; அடுத்துள்ள 28 நெடும் தூண்கள், 28 ஆகமங்கள்; 96 பலகணிகள் 96 தத்துவங்கள். விமானத்தின் 9 கலசங்கள், நவசக்திகளின் அடையாளம். விமானத்தின் 64 கழிகள் 64 கலைகள்; கனக சபையில் வேயப் பெற்றுள்ள பொன் ஓடுகள் 21,600. அவை மனிதர்கள்விடும் 21,600 சுவாசங்களின் எண்ணிக்கையை உணர்த்துகின்றன. அப்பொன் ஓடுகளில் அடித்துள்ள ஆணிகள் 72,000. அவை நம் உடம்பில் உள்ள 72,000 நாடிகளைக் குறிக்கும்.

இங்குள்ள இராச சபை, தேவ சபை, நிருத்தசபை, கனகசபை, சிற்சபை என்னும் ஐந்து சபைகளும் தூலவுடல், சூக்குமவுடல், குணவுடல், கஞ்சுகஉடல், காரண உடல் என்னும்

அன்னமய கோசம்

பிராணமய கோசம்

மனோமய கோசம்

விஞ்ஞானமய கோசம்

ஆனந்தமய கோசம்

என்பனவற்றைக் குறிக்கின்றன. இத்தகைய பற்பல தத்துவ நுட்பங்கள், சிதம்பரம் கோயிலமைப்பில் புலப்படுத்தப்பட்டுள்ளன.

**தில்லையிற் பிறகோயில்கள் :**

சிதம்பரத்தில் நடராசப் பெருமான் கோயில் மட்டுமேயன்றி, இளமையாக்கினர் கோயில் என்னும் திருப்புலீச்சுரம், பதஞ்சலி முனிவர் பூசித்த அனந்தேச்சுரம், தில்லைக் காளியம்மன் கோயில், பிள்ளையார்கோயில், மத்யந்தனேசுவரர்கோயில், செங்கழுநீர்ப்பிள்ளையார் கோயில், சேக்கிழார்கோயில், கமலீசுவரர்கோயில், வீரபத்திரர்கோயில், நந்தனர் கோயில், கூத்தாடும் பிள்ளையார்கோயில் என்னும் வேறு பலவும் உள்ளன.

மேலும் இங்குச் சிவகங்கைத் தீர்த்தம் மட்டுமேயன்றி, தெப்போற்சவம் நிகழும் ஞானப்பிரகாசர்குளம், நந்தனர் ஓமகுண்டத்தில் மூழ்கி எழுந்த ஓமக்குளம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், திருப்பாற்கடல் தீர்த்தம் என்பனவும் உள்ளன.

கிழக்கே திருவேட்களம் என்னும் தேவாரப் பாடல்பெற்ற தலம் உள்ளது. அங்கேயே உமாபதி சிவாசாரியார் என்னும் சைவ சித்தாந்த சந்தானசிரியரின் சமாதிக் கோயில் உள்ளது.

சிங்காரத்தோப்பு என்னும் இடத்தில், அவர் தம் ஞானசிரியர் ஆகிய மறைஞான சம்பந்தரின் திருக்கோயில் உள்ளது. இவைகளெல்லாம், அன்பர்கள் சிதம்பரத்திற்கு வந்து நேரில் கண்டு தரிசித்து மகிழத் தக்கவையாகும். சிவ பக்தர்களுக்குச் சிதம்பரமானது, பூலோக கைலாசமாக விளங்குகின்றது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**முடிவுரை :**

இத்தகைய தெய்விகப் பெருஞ் சிறப்புமிக்க, சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயிலுக்கு, மிகப்பெரிய அளவில் திருப்பணித் திட்டங்கள் வகுக்கப்பெற்று, திருப்பணிவேலைகள் நன்கினிது நடைபெற்று வருகின்றன. சிறந்த இத்திருப்பணிக்கு அன்பர்கள் தங்கள் தங்களால் இயன்ற நன்கொடைகள் வழங்கி, இம்மை மறுமை நலங்கள் அனைத்தும் எய்தி இன்புறுவார்களாக!

# திருச்சிற்றம்பலக் கோவையார்

## [கருத்துத் தொகுப்புச் சுருக்கம்]

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## —(முற்றொடர்ச்சி)

**தோழி:** *படம் விளங்குகின்ற பாம்பைப் போன்ற அல்குலை உடைய எம் தலைவி, கருமை நிறம் பொருந்திய அலைகளை உடைய கடலை நோக்கினாள் ; மடல் அவிழ்கின்ற தாழைப் பூக்களை உடைய கானலை நோக்கினாள்; கண்களில் நீரைக் கொண்டாள்; மெல்லிய இடையை உடைய தன் தோழியர்களை யெல்லாம் புல்லித் தழுவிக் கொண்டாள். அவள், தன் உள்ளத்தில் கருதியது, யாதோ ஒன்று உண்டு போலும்! (199)*

*என்னுடைய பைந்தொடியாகிய தலைவி, இன்று என்னைப் புல்லித் தழுவிக் கொண்டாள். தான் வளர்த்த பூவைப் பறவையை என்கையில் தந்தாள்; பிறகு தான் விளையாடுகின்ற பந்தினையும், பாவை (பொம்மை)யையும், என்பால் அளித்தாள். அதன்மேலும் தன்னுடைய பசுங் கிளியையும் என்பாற் கொடுத்தாள். மான் போன்ற பார்வையை உடைய உமையம்மையை, இடப் பாகத்தில் கொண்டவராகிய சிவ பெருமானின் தில்லையின்கண் உள்ள, கொவ்வைக் கனியைப் போலச் சிவந்த வாயையுடைய, நெடுங் கண்ணியாகிய எம் தலைவியின் கருத்து இன்னதென்று, யான் அறிகின்றிலேன். தலைவனே, எம்மைப் பிரிந்து நின்னோடு உடன் செல்ல விரும்பியே, எம் தலைவி இங்ஙனமெல்லாம் செய்தாள் போலும்! (200).*

**தலைவன் :** *வானுலகம் எங்கணும் கற்றுச் சொல்லப்படும் புகழையும், ஒளிமிக்க சந்திரனாகிய தலைக்கண்ணியையும் உடைய, பழையோனாகிய சிவபெருமானின் புலியூரில் உள்ள, அல்லியங் கோதை போலும் தோழியே! நுங்கள் தலைவியின் மெல்லிய கொங்கைகள் பெரியன; அவற்றைத் தாங்கும் இடையோ, மின்னலைப் போன்றது; மெல்லிய கால்களும் பூப்போல்வன; கற்கள் நிறைந்ததும், வெம்மை மிகுந்ததுமாகிய காடு, பூப்போன்ற அவளது மெல்லிய கால்களுக்கு ஏற்றதாக இல்லாமல், கொடிய வெப்பம் மிக்கதாக விளங்குகின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக, எம்முடைய பெரிய நகரமும், மிக மிகத் தொலைவாக இருக்கின்றது. [ஆ]தலின் நீ கருதுவது போல, நும் தலைவியை அருள்[ப]ன் என்னுடன் கொண்டு செல்லுதல் எளி[த]ன்று; மிகப் பெரிதும் அரிதாக உள்ளது (201)*

**தோழி:** *தலைவனே! பெண் மான்களும் ஆண்மான்களும், மிக்க நீர்வேட்கையால், மிகப் பெரிய கானல் நீரை, உண்மையான நீர் என்று உணர்ந்து சென்று அணுகும் பாலை நில வழி, நடந்து செல்லுதற்கு அரியதாய், பரற் கற்கள் பரவி விரவி, மேடு பள்ளங்கள் உடையதாக இருப்பினும், நின்னோடு உடன் செல்லுவதாக இருப்பின், அஃதும் எம் தலைவிக்குத் தில்லையின் எல்லையிலுள்ள குளிர்ந்த மருத நிலமும், பொய்கையும் போல, மிக்க இன்பம் தருவதாகவே இருக்கும் (202).*

*தலைவனே! ஒப்பற்ற கங்கை நதியைப் பொதிந்த, அழகியசெஞ்சடையையும், நெற்றிக் கண்ணையும் உடைய, சிவபெருமானின் தில்லை வரைப்பில், தாமரை படர்ந்த பொய்கையைப் போன்றவன் நீ! அழகிய கண்களை உடைய இத் தலைவி, அகன்ற அந்தப் பொய்கையின்கண் வாழும் செங்கயல் மீன் போன்றவள். அதனால் நின்னோடு உடன் ஏகுங்கால், இவளுக்கு வேறு ஒன்றால் ஏதேனும் துன்பம் வரக் கூடும் என்று, இவளை நீ நின்னிற் பிரித்து, வேறாகக் கூறுவ[து] என்னை? செங்கயல் மீனுக்குப் பங்கயத் தட[ம்] அல்லது வேறு வேண்டப்படுவது ஒன்று உண்டோ? (203)*

*ஈங்கோய் என்னும் தலத்தில் பொலிந்து விளங்கி, சிற்றம்பலத்தின்கண் நின்று ஆடுகின்ற கூத்தப் பெருமானின், திருவாயினின்று மலர்ந்த மறைகளைப் போன்ற, அறிவாற் சிறந்த, மதிபோலும் நுதலையுடைய தலைவியே! குலமகளிர்க்குப் பழி நீக்கிப் பாதுகாத்தலில், நாணம் என்னும் நற்பண்பு தாய் போலச் சிறந்தது. அந்த நாணத்தைக் காட்டிலும், திண்மை மிகுந்த கற்பு மிகவும் சிறந்தது. ஆதலின் குலமகளிர் தம் நாணத்தைத் துறந்தும் கற்பைப் பேணுதற்கு உரியவராவர். (204).*

*குறவர் குலத்துப் பாவையாகிய தலைவியே! சிவபிரானது புலியூரை மறக்குமாறு நமக்குத் தீவினை நேருமாயின், நாம் வெவ்வேறு பல பிறவிகளிலும், சென்று சென்று பிறந்து உழன்று, மிகவும் துன்பமுற நேரும். அங்ஙனம் பல பிறவிகளிற் பிறந்துழல நேரினும், பின்னும் பின்னும் சென்று சேர்வதற்குத் தகுந்த, சிறந்த பண்பை உடைய நம் தலைவர், நீ நின் கூந்தலின்*

கண் அணிந்துள்ள வேங்கைப் பூவொடு, கோங்கம் பூவையும் கலந்து, பாதிரி மலரையும் சேர்த்துப் புனைவதற்கு விரும்பியிருக்கின்றார். இது குறித்து நின் கருத்து யாதோ?

[''கோங்கம் விராய்ப் பாடலம் புனைவார் நினைவார்'' என்றதனால், நீரில்லாத கொடிய பாலைநில வழியில் நின்னுடன் செல்லக் கருதினர் என்று தோழி கூறினளாம். கோங்கு—பாலை நிலப் பூ. புலியூரை நினைந்தார்க்குப் பின்னை அதனை மறத்தல் அரிது என்னும் கருத்தால், ''மறப்பான் அடுப்பது ஓர் தீவினை வந்திடின்'' என்றாள். புலியூரை ஒருகால் உணர்ந்த அளவிலேயே பிறவி கெடும்; அவ்வாறன்றி அதனை மறந்ததனால், பிறவிகள் பலப்பல நேரக் கூடுமாயினும் என்னும் கருத்தில், ''பிறப்பான் அடுப்பினும்'' என்றாள்] (205).

**தலைவி :** குழலிசை போலும் சொற்களை உடைய தோழியே! தலைவர் செல்லும் வழி நிழலற்றது ; கொதிக்கும் தன்மை வாய்ந்தது; நீரில்லாதது; அதுமட்டுமோ! அதன் இரு பக்கத்திலும் கிழ நரிகள் ஊளையிடுகின்ற காடுகள் அடர்ந்தது ; நெருப்பின் நுனி போலும் நுனியை உடைய, வெப்பமான பரற் கற்கள் நிறைந்தது என்று சொல்லுகின்றனை. தில்லையம்பலவனின் கழல்களைத் தம் தலைமேல் வைத்து, கைகளைக் குவித்து வணங்குதற்குப் பயிலாத பாவிகளைப் போல, இத்தகைய கொடிய வழியின்கண் செல்லுதற்குரிய குறிப்பு, தலைவருக்கு உண்டானதற்குக் காரணம் யாதோ? (206)

**தோழி :** தலைவியே! நீயும் தலைவரும் உடம்பும் உயிரும்போல, ஒருவரை ஒருவர் இன்றியமையாத அன்பு கொண்டுள்ளீர்கள். இத்தகைய நும் காதலை நினையாமல், சிங்கமும் புலியும் யானையுமாகிய விலங்குகளால், தலைவனுக்கு நேரக் கூடிய தீங்குகளைக் குறித்து அஞ்சி, அவனை நீ இங்கு வரற்பாலை அல்லை என்று கூறுவேன். அவ்வாறு வருதலை ஒழிந்து, தலைவன் நின்னை மணஞ்செய்து கொள்ள வேண்டின், நம்மவர் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தையும், இவ்வுலகத்திலுள்ள பொன் முதலாகிய எல்லாப் பொருள்களையும், ஈடாகப் பெற்றாலும், நின்னை எளிதில் மணஞ்செய்து கொடுக்கமாட்டார்கள். அதுவே நீரில்லாததும், மக்கள் வாழும் இடமல்லாததும் ஆகிய, பாலைநில வழியில் செல்லுவதற்குத் தலைவனின் நெஞ்சைத் துணிவித்தன (207).

**தலைவி :** விடையை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமான் விரும்பும் புலியூரில், என்னுடன் தோன்றி, என்னோடு ஒரு நிகராக வளர்ந்து, பொலிவார்ந்த திருவை உடைய என் நாணமானது, தலைவர் மீது யான் வைத்த விருப்பம் இடையே புகுந்ததனால் தள்ளப் பெற்று, நின்ற நிலைகுலைந்தது. அதன் மேலும் கற்பு என்னும் பெரிய கடிய காற்று அடித்து, என்னிடமிருந்து பறித்துப் புறத்தே எறிய, அந்நாணம் என்னை விட்டு நீங்குவதாயிற்று. இங்ஙனம் நாணம் இழந்த என்னைப் போல இடர்ப்படாதிருத்தற்காக, இனிமேல் மகளிர் என்போர், தம் ஏழு பிறப்பின் கண்ணும், நல்ல குடியில், பிறவாது ஒழிவார்களாக! (208).

**தோழி :** நம்பிக்கைக்கு உரிய தலைவனே! தலைவியின் கண்கள் மிகவும் நீண்டவை ; செவ்வரிகள் படர்ந்தவை ; மிகவும் கூர்மையானவை ; அவற்றைக் கண்டால் கூர்மையான அம்புகளும் அஞ்சி, அம்பறாத் தூணியிற் சென்று பதுங்கிக் கொள்ளும். அத்தகைய கண்களையுடைய தலைவியின் கால்கள், செம்பஞ்சியை மிதிப்பினும் கூட, மிகவும் நடுங்கும் மென்மையான இயல்பின. தலைவியின் அத்தகைய மலர் போலும் சிறிய கால்களுக்கு, நீ செல்லுவதனால், பரற் கற்கள் நிறைந்த பாலை நில வழியும், நல்ல மெல்லிய தளிராக விளங்கக் கூடும். ஆதலின், இவள் நின்னொடு உடன்போக்குச் செல்லுதற்குத் துணிவு கொண்டு விட்டாள். (209).

என் உயிர் போன்றவளாகிய தலைவிக்குப் பெறுதற்கரிய உயிர் போன்ற தலைவனே! நினது அருளைப் பெறுவதன் மேலுள்ள விருப்பத்தினால், பொன் போன்ற நல்ல மகிழம் பூக்கள் கீழே விழ, அவை விழுகின்ற ஓசையைக் கேட்டு, அது நீ செய்யும் குறியாக நினைத்துக் கொண்டு, நாங்கள் இவ் இருளை விரும்பி, இங்கு வந்து சேர்ந்தோம். இவ் இருளானது, சிவபெருமானின் அழகிய மிடற்றைப் போன்றும், அவனை வணங்க நினையாதவரது தீவினை போலக் கருமையுற்றும், எங்கும் பரவி நிறைந்துள்ளது. (210)

**தலைவன் :** கங்கையையும் சந்திரனையும் அணிந்த சடையை உடைய சிவபெருமானின் புலியூரில், அழகிய மேகலையை அணிந்துள்ள இத்தலைவியின், அனிச்சமலர் போன்ற அழகிய சிறிய கால்கள், வெப்பம் மிக்க நெருப்பே பழமாகப் பழுத்தது போன்ற, சிவந்த திரள்போலும் பரற் கற்களை உடைய காட்டைக் கடக்க முற்படுமாயின், ஐயகோ! இனி என் காரணமாகத் தலைவி எய்தும் துன்பங்கள்தாம் எத்துணையன? (211).

**தோழி :** வேல் ஏந்திய வீரர்கள் சூழ, தேர்மீது ஏறிவரும் வள்ளலாகிய தலைவனே! சிவபிரானின் தில்லையை வாழ்த்தாதவர்களின் மனம்போல, உலகம் முழுவதும் இருள் படர்ந்தது. தில்லையை வாழ்த்துபவர்களின் மனம் போல, பொய்கைகள் கலக்கமற்றுத் தெளிந்தன. இம் முதிய பெரிய நகரும் அமைதியாக, ஆழ்ந்த துயில் கொள்கின்றது. நினது உள்ளத்தில் நீ கருதியதனைத், தெய்வம் இப்பொழுதே தரும். நின்பொருட்டு என் தோழியையும் யான் கொணர்ந்துள்ளேன். காண்பாயாக! (212)

**தோழி :** சிலம்பனே! தேவர்கள் இடைவிடாது நடுங்கும்படி, பறந்து செல்லும் முப்புரங்கள் அழிய, எரியால் விளையாடிய சிவபிரானின், தென் தில்லையின்கண் உள்ள தலைவியினிடத்தில், அறம் திருந்துதற்குக் காரணமாகிய உனது அருளும்கூட வேறுபடுமாயின், இவ் அகன்ற பெரிய உலகில், மறைகளின் முறைமையும் பிறழும்; கடல்களும் எஞ்சா...

வற்றும்! ஆதலின் இவளை நீ நின் அருளிற் பிறழாமல் குறிக்கொண்டு காத்தருள்க. (213)

**தோழி :** தலைவனே! தலைவியே! எம்மைத் தேடிவந்து வலிந்து பிடித்து ஆட்கொண்டு, எல்லையில்லாத பேரின்பத்தைத் தந்தருளிய, சிவபிரானின் சிற்றம்பலம் நிலைபெற்ற தில்லை மாநகரின்கண், நீவிர் இருவரும் திருத்தகச் சென்று சேர்மின்! நும்மை தேடிக்கொண்டு தோழியர் கூட்டமும், நற்றாயும், செவிலித் தாயும் பின் வராதபடி, யான் அவர்களை இவ்விடத்திலேயே இருக்குமாறு செய்கின்றேன்; இவ்வூரின்கண் உண்டாகிய பழிச்சொல்லை ஒருவகையால் நீக்குகின்றேன். பின்னர் யான் அங்கே வந்து நும்மை விரைவில் காண்கின்றேன். அப்பேறு நமக்கு இனிதே கூடுவதாக! (214).

**தலைவன் :** பெரிய பாம்புகளைப் பூண்பதற்கு உரியனவாகத் திருத்திய, ஒளிவடிவினனாகிய சிவபெருமானின், புலியூரைப் போன்ற மாட்சிமை மிக்க பெரிய நகரங்கள், நாம் செல்லும் நெறியின் இரு பக்கங்களிலும் நெருங்கி ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும். நம் முன்னே உள்ள காடுகள், நாம் சென்று காண்பதன்பொருட்டுத் திருத்தமாகச் செய்யப்பட்டனபோலத் திகழும். அதனால், யான் விரும்புவண்ணம் அழகு செய்யப் பெற்ற தலைவியே! இவைகளைப் பார்த்துக் கொண்டே, நீ நின் சிறிய கால்களால் மெல்லென நடந்து, வருந்தாமற் செல்வாயாக. (215).

**தலைவன் :** வண்டுகள் நறுமணத்தை ஆராய்ந்து உணரும் கூந்தலை உடைய தலைவியே, அதோ தொலைவாக வருகின்ற ஒரு சிலரைக் கண்டு நீ அஞ்சற்க. அவர்கள் நின் உறவினர்களாயின், அம்பலவனின் திருவடிகளை ஆராய்ந்துணராத அறிவிலிகளைப் போல, யான் அஞ்சுவேன். அவர்கள் நின் உறவினர் அல்லராயின், தேர்த் தொகுதியும், வீரர்களின் திரளும், யானைகளின் கூட்டமும், குதிரைகளின் ஈட்டமும் ஆகிய அனைத்தும் திரண்டு வரினும், அவைகள் அனைத்தும் என் கையில் விளங்குகின்ற வேலின் வாய்க்கு இரையாதற்கு ஒரு சிறிதும் உதவமாட்டா. யான் அவைகளையெல்லாம், ஒரு கணத்தில் வென்று புறங்காண்பேன். வானளாவி உயர்ந்த இம்மலைநிலப் பகுதியில் யான் செய்யும் செயலைக் கண்டு கொண்டு, நீ அஞ்சாதிருப்பாயாக. (216).

தலைவியே! எல்லார்க்கும் முன்னவனாகிய இறைவனின் அருளை, முற்பிறப்பிலும் நினையாத தீவினையை உடைய நீசர்கள், சேரும் துன்பம் மிக்க இப்பாலை நிலத்தினை, இப்பொழுதே விரைவில் கடந்து, பொன் நிறைந்து மணியால் விளங்கும் அழகிய மாளிகைகளை உடைய புலியூரின் கண், புகழ்ந்துரைப்போர் 'தென்னவனே' என்று புகழ்ந்து போற்ற, இறைவன் எழுந்தருளி நின்று கூத்தாடும் திருச்சிற்றம்பலத்தை, [illegible]ன்றே சென்று காண்போம். இனி நமக்கு அரு[illegible] குறைவும் இல்லை. இனி நாம் என்ஞான்[illegible] இன்பத்தில் மூழ்கித் திளைக்கலாம். (217)

**கண்டோர் :** ஆற்றல் மிக்க தலைவனே! இனி நீவிர் செல்லும் நெறிக்கண் நன்மக்களில்லை. இங்கு இருப்போர், கொடிய வேடுவரே. நீயோ தனியாக இருக்கின்றாய். மெல்லிய மலர்களை அணிந்த கூந்தலை உடைய இவளும், நின்னுடன் வழிநடந்து வந்த வருத்தத்தால், வாடி இருக்கின்றாள். சிற்றம்பலத்தை உடைய சிவபிரானுக்கு ஆட்படுதல் செய்யாத பாவிகளைப்போல, சூரியனும் விளக்கம் ஒழிந்து தன் கதிர்களைச் சுருக்கிக்கொண்டு, மேலைக் கடலுக்குட் சென்று மறைந்தான். கடிய இந்தக் கொடிய பாலை நில வழியை, இப்பொழுது கடந்து செல்லுபவர்கள் எவரும் இலர். ஆதலின் நீ இவளுடன் இன்றிரவு இங்குத் தங்கியிருந்து பின்னர்ச் செல்வாயாக. (218)

இதோ ஓர் ஆடவன், அழகிய சொல்லையுடைய ஒரு பெண்ணை அன்போடு அணைத்துக் கொண்டு, அவளது அழகிய சிறுபுறமும், அசைநடையும் காண்பதற்கு விரும்பி, அவள் பின்னே செல்லுகின்றான். மூங்கில் போலும் மெல்லிய அழகிய தோள்களையுடைய அவளோ, அவனுக்கு முன்னே தான் செல்ல நாணம் கொண்டு, அவனது புறக் கொடையும் வலிச் செலவும் காண, அவனது பின்னே தயங்கித் தயங்கி, மெல்லென நெடும் பொழுது நடந்து செல்லா நிற்கின்றாள். இதனால் இவர்களின் செயல், இப்பெரிய பாலை நில வழியைக் கடந்து செல்லுகையாகத் தெரியவில்லை. பொன்னே ஒரு வடிவுகொண்டு பெரிதாகத் தோன்றினாற் போலும் அழகிய வடிவம் உடைய, இறைவன் உறைகின்ற தில்லையின் எல்லையின் கண், நல்ல வயல்களில் பூத்துப் பொலிகின்ற மலர்களின், குளிர்ந்த தேனை உண்ட வண்டுகளைப் போன்று, இன்பக் களியால் மயங்கி நிகழ்வதொரு நாடகம் போலவே, இவர்களின் செயல், நாம் கண்டு மகிழ்ந்து இன்புறுதற்கு ஏற்ற நிலையினதாக விளங்குகின்றது. (219)

**தலைவன் :** மகளிர் பிறரின் அழகிற்கெல்லாம் கட்டளைபோலும் அழகினை உடைய தலைவியே! வழிநடை வருத்தத்தால் வாடிய மேனியை உடைய நின் அழகினைக் கண்டு, கண்களால் கொள்ளும் பயனைப் பெற்றேன். இனி இங்குச் சிறிது தங்கி இளைப்பாறி இருந்து, நினது பண் மயமான மெல்லிய இனிய மொழிகளை, யான் என் செவி நிறையப் பருகுதற்கு, என் அருகே வருக. விண்ணுலகங்களின் தலைவனும், தில்லையின் மெல்லியல் பங்கனும், எம்இறைவனுமாகிய சிவபெருமானின், கடம்பை என்னும் தலத்தில் உள்ள பொய்கையைப் போல, இக் கடிய கானகம் குளிரும்படி, நீ இனிமையாகப் பேசுக. யான் அதனைக் கேட்டு இன்புறுகின்றேன். (220)

**கண்டோர் :** தலைவனே! மின்னலைப் போன்ற இடையை உடைய இத் தலைவியுடன், சிற்றம்பலவரின் குன்றத்தைக் கடந்து, நீ அப்பால் சிறிது தொலைவு சென்றால், தாமரைப் பூக்கள் மலர்ந்து நெருங்கிய அழகிய கிடங்கும், வெள்ளை முறுவலை உடைய மகளிர், துறை தொறும் துறைதொறும் சென்று சேரும்

பொய்கைகளும் சூழ்ந்த தில்லைநகரம் தோன்றும். அது மிகவும் அணிமையிலேயே இருக்கின்றது. நீவிர் அத்தில்லை நகர்க்கு விரைந்து இனிது செல்வீராக. (221).

**தலைவன் :** தலைவியே! நினது அழகிய நடையைப் போலும் நடையை உடைய அன்னப் பறவைகள் நிறைந்து, சிவபிரானைப்போலத் தமது முடியின்கண் பிறைச் சந்திரனைத் தாங்கிய மாளிகைகள், அப்பெருமானைப் போலச் சூலமும் உடையனவாக விளங்க, அதோ நம்முன் தோன்றுகின்ற நல்ல பெரிய நகரமானது, கடலின்கண் இடையறாது எழுகின்ற அலைகளைப் போலப் பரவி, வானளாவி எழுந்து, ஒளியாலும் அசைவாலும் மின்னலைப் போன்ற கொடிகள் நிறைந்ததாய், மேரு மலையைப் போல உயர்ந்தோங்கிப் பொன் மயமாகத் திகழும் மதில்களை உடையதாய்த் திகழ்கின்ற, புலியூர் ஆகும். அதுவே நாம் சென்று அடைதற்குரிய நகரம். (222)

**தலைவன் :** ஏந்திழையே! இதோ இங்கு உள்ளவை செய்குன்றுகள்; இவைகள் சிறந்த மலர்கள் பூத்த குளங்கள்; அதோ அங்குத் தெரிபவை, வானத்தின்கண் இயங்குதலால் வருந்தும் சந்திரன், தங்கி இளைப்பாறும் சோலைகள்; இவ்விடம் உலகத்திற் பொய் முதலிய குற்றங்கள் நீங்க, அந்தணர்கள் மறைகளை ஓதுகின்ற இடம்; இந்த இடம், மேரு மலையை வில்லாகக் கொண்ட அம்பலவாணர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில். இதுதான் நம்முடைய தில்லைப்புலியூர் நகரம் ஆகும். (223)

**செவிலித்தாய் :** அடியவர்களின் நெஞ்சகமே, தான் எப்போதும் இருந்து தங்கிப் பயிலும் இடம் என்று அனைவரும் சொல்லும் வண்ணம், அடியவர்களின் நெஞ்சினின்று நீங்கி அறியாத சிவபெருமானது தில்லைநகரில், பலவகைப் பூக்களை அணிந்த கூந்தலையும், வேல்போலப் பிறழும் கண்களையும் உடைய தோழியே! மயில்போலக் கண்களை விழித்து, குயில்போலப் பேசுகின்ற எம்முடைய புதல்வி, எங்கே இருக்கின்றாள்? எங்கே சென்றாள்? நீ இன்று வருத்தமாக இருப்பதற்குக் காரணம் யாது? (224)

**தோழி :** செவிலித்தாயே! ஆட்செய்தல் திருமாலுக்கும் இயலாத அருமையுடையதும், தில்லைக்கண் உள்ளார் எல்லார்க்கும் வழிபடுதற்கு எளிமை வாய்ந்ததுமாகிய, திருவடியை உடைய சிவபெருமானுக்குரிய இம் மலையில், நீ சொல்லியபடி யாங்கள் அனைவரும் சென்று ஒரு புறத்தே விளையாடிக் கொண்டிருந்தோம். ஒளிமிகுந்த வேலை ஏந்தியவனாய், சிங்கத்திற்கு நிகரான ஆற்றல்மிக்க தலைவன் ஒருவன், அழகிய மாலை ஒன்றை அணிந்து கொண்டு சென்றான். அதனைக் கண்டு நின் மகளாகிய தலைவி, அவன்பாற் சென்று, இவ்வழகிய மாலையை யான் என் பாவைக்கு அணிவிக்கத் தருக என்று கேட்டாள். அவனும் தனக்கே யுரிய வள்ளன்மைப் பண்பு உடையவன் ஆதலின், பிறிதெதுவும் சிந்தியாமலும், மறுக்காமலும், உடனே அம் மாலையைக் கொடுத்துச் சென்றான். இஃது அறியாப் பருவத்தில் நெடுங்காலத்திற்கு முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். அதுபற்றி, ''உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர், கொண்டார்க்கு உரியர் கொடுத்தார்'' என்பதனைத் தலைவி இன்று தன் மனத்தில் உட்கொண்டு, தலைவனுடன் உடன்போக்குச் சென்றனள் போலும்.

[''ஆளரிக்கும் அரிதாய்த் தில்லையாவருக்கும் எளிதாம் தாளரின் குன்றில்'' என்றதனால், இந்நிகழ்ச்சி தெய்வந்தர வந்தது என்றும்; ''பாவைக்கு'' என்றதனால் அறியாப் பருவம் என்றும்; ''கோளரிக்கு நிகரன்னார்'' என்றதனால் இவளுக்கு ஏற்ற தகுதியுடையவர் என்றும்; 'மேவி' என்றதனால் பயிர்ப்பு நீங்கிற்று என்றும்; ''தார்'' என்றதனால், மெய்யுற்றதனோடு ஒக்கும் என்றும்; செவிலிக்குத் தோழி குறிப்பால் புலப்படுத்தினாள்] (225)

**செவிலித்தாய் :** தக்கனது வேள்வியைக் கெடுத்தவனும், ஒருநாளும் அழிவில்லாத பழையோனும் ஆகிய சிவபிரானின் தில்லைக்கண், பலவாகிய மலர்கள் நிறம் கிளர, மடுவில் குடைந்து நீராடச் சென்று, அதில்தான் அழுந்தி இறக்கப் புகுந்த வேளையில், அதுகண்டு ஓடி வந்து தன்னை இரக்கமுற்று எடுத்து, அணைத்துக் காத்து உதவி புரிந்தருளிய தலைவனோடு, மாவடுவைப் போலும் அழகிய கண்களை உடைய தலைவி, உடன் போக்குச் சென்றாள். அங்ஙனம் சென்ற செயல் அறமேயாயினும், மிக இளம் பருவமுடைய தலைவிக்கு, இத்தகையதொரு பெரும் முதுக்குறைவு (பேரறிவுடைமை) சிறிதும் தகாது; ஆயினும், எம் அன்னையைப் போலும் தலைவிக்கு, உரிய நன்மையும் கடமையும் ஆவது, அத்தலைவனை வழிபட்டு ஒழுகுவதல்லது பிறிதொன்று இல்லை. (226).

ஒளி பொருந்திய இழைகளை அணிந்த தலைவி, நம்மை விட்டுத் தான் பிரிவதற்கு முன்னர், ஏதோ ஒரு கருத்தைத் தன் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தனள் போலும்! அதனால்தான் அவள், அப்போது என்னைநோக்கி அன்புடன் புன்முறுவல் புரிந்தாள்; என்பால் வந்து என் மார்பகத்தைத் தழுவி என்னைப் புல்லிக் கொண்டாள்; இங்ஙனம் அவள் குறிப்பினாற் செய்த சிறிய சிறிய அன்புச் செயல்கள் எல்லாம், கூற்றுவனை வென்ற ஆற்றல்மிக்க சிவபெருமானின் சிற்றம்பலத்தைக் கருதாத பாவிகள், சேர்கின்ற கொடிய காட்டு நெறியில், தான் செல்ல இருத்தலை உணர்த்துதற்கே போலும். அக் குறிப்புக்களையெல்லாம், அந்தோ, யான் அப்போது உணரப்பெறாது ஒழிந்தேன்! (227).

தாமே தமக்கு உவமையாய், மற்று எவரும் தமக்கு ஒப்பாகாத, சிவபெருமானின் தில்லையில் பூக்கின்ற குளிர்ந்த அனிச்சப்பூவி[illegible] மிதிப்பினும் நடுங்கி, நின் கால்கள் [illegible] ளம் கொள்ளும் அளவிற்கு மென்மை [illegible]

தலைவியே! எரிகின்ற நெருப்பின்மேல் பதித்த வேல்போலச் செறிந்து, சுடுகின்ற பரற் கற்களையுடைய, கொடிய காட்டின்கண் சிலம் பணிந்த நின் கால்களை எடுத்துவைத்து நடந்து செல்லுதல் இயலுமோ! கொடிய பாவியேன் ஆகிய யான் பெற்று வளர்த்த எம் அன்னையாகிய தலைவி, கொடிய காட்டு நெறியிற் சென்று, என்ன பாடுபட்டு வருந்துகின்றாளோ? என்று நினைக்குந்தொறும், என் உள்ளம் பெரிதும் பதறுகின்றது. (228)

நம் தலைவி, கள்ளங் கபடு இல்லாத பேதைப் பருவத்தினள்; எப்போதும் எவரிடத்தும் அழகிய சொற்களைப் பேசுபவள். எப்போதும் என்னைப் பிரியாமல் என்னோடு உடனாகவே இருப்பவள். அவளை அணைத்திருக்கின்ற என்னுடைய கைகள் சிறிது தளர்ந்தாலும், ‘நாம் தனியாக இருக்கின்றோமோ?’ என்று எண்ணி, அஞ்சி வருந்தி அழுது புலம்புபவள். அத்தகையவளின் பேரறிவு, தேவர்களின் கூட்டமெல்லாம் பிழைக்கும் படி, ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினை உண்டு, தில்லையம்பலத்தில் திருநடனம் செய்கின்ற சிவபெருமானின், சிறந்த திருவடிகளைப் பணியாத பாவிகளை, வருத்தும் கொடிய நோய்களைப் போல, இன்று என்னை மிகவும் வருந்துமாறு செய்துவிட்டது. (229)

பண்டொரு காலத்தில் திருமால் வணங்கிப் பணிய, அவருக்குச் சக்கரப் படையை வழங்கி அருள்புரிந்த சிவபெருமானின், தில்லையம்பலத்தைப் பணியாத பாவிகளைப்போல, யாழ் ஓசையைப் போலும் இனிய மென் மொழிகளை உடைய வன்மனப் பேதையாகிய தலைவி, தன் ஆருயிர்த் தோழியரையும் விட்டு, என்னையும் அதற்கு முன்னரே நீங்கி, இப் பெரிய ஊரிலுள்ளார் அனைவரும் பழிச்சொல் கூறிக் கலங்கவும், நம்மைச் சேராதவர்கள் இகழும் படியும், யாரோ ஓர் அயலானின் பின்னே, கொடிய பாலைநில வழியில் சென்று விட்டாள். அவளைப் பிரிந்து, யான் இனி எங்ஙனம் ஆற்றியிருப்பேன்? (230)

கொற்றொழில் அமைந்து கூரிய சூலப் படையை உடைய, தில்லையம்பலவனை வணங்காதவர்கள் போல, அன்பற்ற, கல்மனம் படைத்த கொடியவள் ஆகிய தலைவி, பாலைநில வழியில் எவ்வாறு சென்றாளோ? அங்கு எவ்விடம் தங்குவாளோ? எங்ஙனம் தன் வாழ்க்கையை நடத்துவாளோ? என்றெல்லாம், யான் பலவாறு வருந்திப் புலம்புகின்றேன். அவளால் வளர்க்கப்பட்ட இக் கிளியானது, தன்னை வளர்த்த தலைவி தன்னைப் பிரிந்து சென்றதை உணர்ந்து மயங்கி, ‘‘ஐயோ! என் அன்னை என்னைப் பிரிந்து போயினாள், அவள் எவ்விடத்தில் உள்ளனளோ? இனி என்னைப் பருந்து வந்து தாக்கிக் கொன்று விடுமே’’ என்று சொல்லி, அலறிக் கதறுகின்றது. தலைவி பிரிந்து சென்ற ருத்தத்தைக் காட்டிலும், இக் கிளியின் கை என் உள்ளத்தை ஈர்ந்து பெரிதும் துகின்றது. (231)

பெற்றவளாகிய யான் வருந்தவும், தன்னால் அன்புடன் வளர்க்கப் பெற்ற இக்கிளி துன்புற்று வாடவும், நல்ல தேன் போலும் இனிய சொற்களைப் பேசுகின்ற தலைவியானவள், அறிவு முதிர்ந்த இயல்பு நிறைந்து, தான் விரும்பிய காதலனுடன், நெருப்புப் போலும் கொடிய காட்டு நெறியில் நடந்து சென்றாள். சுடர் வானவன் ஆகிய சூரிய தேவனே! யான் உன்னைப் பெரிதும் பணிந்து இறைஞ்சி வேண்டிக் கொள்கின்றேன். தன்னை அணுகப் பெற்றவரைப் பிறவித் துன்பங்கள் அடையாதபடி காத்தருள்கின்ற, சிவபெருமானின் தில்லையில், தேன்துளிக்கின்ற அழகிய நறுமலர்கள் பூத்துப் பொலிவதைப் போல, அவளது முகம் எப்போதும் இன்பமாக மலர்ந்து மகிழ்ச்சியுடன் இருக்கும்படி செய்தருள்க. (232).

எங்கள் தலைவி, அழகால் மலரையும், கூர்மையால் வாளையும் போன்ற, மைதீட்டிய கண்களை உடையவள். கார்மயில் போலும் சிறந்த சாயலை உடையவள். மிக்க இளம் பருவத்தினள். தில்லையம்பலவனின் திருமலையில், மொய்த்து வளரும் காந்தள் மலர்களைப் பாம்புகள் என்று நினைத்துக் கொண்டு, துணுக்கிட்டு ஓடி ஒளித்து, மலர்போலும் தன் கைகளால், கண்களை மூடிப் புதைத்துக் கொண்டு பதைக்கும் இயல்புடையவள். அத்தகையவள், கூரிய வாட்படையை உடைய தன் தலைவனுக்குச் செய்வதற்குரிய குற்றேவல்களை யெல்லாம், அறிந்து செய்ய வல்லவள் ஆவளோ?

[பிரிவினால் தன் மகளாகிய தலைவியின்பால் அளவின்றிப் பெருகும் அன்புணர்ச்சியினால் ‘‘எம் கார்மயில்’’ என்றும், ‘‘என் மைம் மலர் வாட் கண்ணி’’ என்றும், பல்கால் தன்னோடு அடுத்துக் கூறிப் புகழ்ந்தாள். பாம்புகள் மயிலைக் கண்டு அஞ்சுவது இயற்கை. ஆனால் ‘‘தலைவியாகிய மயில், காந்தளைப் பாந்தள் (பாம்பு) என்று எண்ணி அஞ்சித் துண்ணென்று ஒளித்தது’’ என்று குறிப்பிட்டது, நோக்கு என்னும் இலக்கிய அணியாகும்] (233)

**தோழி:** மூங்கில் போலும் தோள்களை உடைய நற்றாயே! நீ வருந்துதல் வேண்டா. தக்கனது வேள்வியின்கண், பரந்த புகழை உடைய தில்லையம்பலவனை இகழ்ந்து கூறி, தேவர்கள் தாம் பெற்ற ஆற்றல் குறைந்தும், தலை கண் கை முதலிய உறுப்புக்களை இழந்தும், சிதறி ஓடிய எல்லாத் திசைகளிலும் சென்று, திருமகள்போலும் நும் தலைவியைத் தேடிக் கண்டு வருவேன். நீ கவலைப்பட்டு வருந்துதல் வேண்டா (234)

**நற்றாய்:** சுற்றத்தாரைக் கூவியழைத்து உண்ணுகின்ற இயல்புடைய, நல்ல பறவையே! சிறந்த ஐந்து குணங்களால் பொலிந்து விளங்கும் காக்கையே! படங்கள் ஐந்தை உடைய பருத்த பாம்பை அணிந்த, சிவபிரானின் தில்லையைப்போன்ற அழகும் சிறப்பும்மிக்க எங்களுடைய தலைவியும், அவளுடைய காதலனாகிய மன்னனும், இப்பொழுதே இங்கு வந்து சேரும்படி நீ அழைத்தால், நினக்கு விருப்பமான மீனின் உணங்கலை, நீ அஞ்சாது உண்ணலாம். தெய்வத்திற்குப் படைத்த நல்ல நிணத்தை

உடைய பலியையும், நினக்கே உரியதாகக் கொடுப்பேன். நீ நின் குரலெடுத்துக் கூவிக் கரைந்து தலைவன், தலைவி ஆகிய அவ்விருவரையும் வருவிப்பாயாக.

[காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்னும் ஒரு நம்பிக்கை, மக்களிடையில் பரவலாக நிலவி வருவதால், நற்றாய் தன் ஆற்றாமை காரணமாகக் காக்கையை நோக்கி இங்ஙனம் கூறி இரந்து நிற்கின்றாள். காக்கைக்குச் சிறந்த குணங்கள் ஐந்து உண்டென்று குறிப்பிட்டிருத்தல், மணிவாசகப் பெருமானின் நுண்மாண் நுழைபுலச் சிறப்பினை, உணர்த்துவதாகும். காக்கையினைச் சிறப்பித்துப் பாடினமையால், காக்கைபாடினியார் என்னும் காரணப் பெயர் பெற்ற சங்ககாலப் புலவருங்கூட, இச் செய்தியைக் கூறிற்றிலர். இஃது ஒன்றே, மணிவாசகப் பெருமானின் மாட்சிமையினை உணர்த்துவதற்குப் போதியதாகும். மறைந்த புணர்ச்சித்தாதல், கரவாது கரைந்து சுற்றத்தாரை விளித்து உடனுண்ணுதல், பொழுது இறவாது இடம்புகுதல், நெடுகக் காண்டல், சுறுசுறுப்பு உடையதாதல் என்னும் ஐந்தும், காக்கைக்குரிய சிறந்த பண்புகளாகும். இவ்வுண்மை ''மாக்குணங்கள் ஐந்தாற் பொலியும் நல சேட்டைக் குலக் கொடியே'' என்னும் வரியால் புலனாதல் காணலாம்.](235)

நான்கு மறைகளையும் கற்றுவல்ல, உத்தமர்களாகிய அந்தணர்களே! பரந்து செல்லும் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சை உண்ட, தென்தில்லை முன்னோனாகிய சிவபிரானின் அருளால், காவல் பொருந்திய இந்தச் சிறந்த மாளிகையின்கண், மணம் பொருந்திய மலர்களைச் சூடிய கூந்தலை உடைய எங்கள் தலைவியை, மீண்டும் காண்டல் இயலுமோ? இம் மாளிகையிலேயே நாங்கள் அவளுக்குத் திருமணம் செய்து மகிழ்தல் இயலுமோ? என்று, நீங்கள் நன்றாக ஆராயுங்கள்; எமக்கு நிகழும் எத்தகைய ஐயப்பாடும் தீரும்படி தெளிவாக விளக்கிச் சொல்லுங்கள்.

[இச் செய்யுளில் கடி என்னும் சொல் மூன்று முறை வந்துள்ளது. அவைகள் முறையே காவல்-திருமணம்-நறுமணம்-என்னும் பொருள்களில் வந்தன. 'முன்னும் கடுவிடம்' என்பதில் முன்னுதல், பரந்து செல்லுதல் என்னும் பொருள் குறித்து வந்தது.] (236)

**செவிலித்தாய் :** தெளிந்த பெரிய கங்கையைத் தன் சடையில் உடைய அம்பலவனை நினையாத பாவிகள் சேர்தற்குரியது, முள்ளும் பரலும், முரம்பும், நிறைந்த பாலைநில வழி. இதன்கண் இங்கே தோன்றுகின்ற இந்த அடிச்சுவடுகள், முற்காலத்துப் பல தீவினைகளைச் செய்த யான் எடுத்து வளர்த்த, ஒளிபொருந்திய கூரிய படைபோலும் கண்களை உடைய, தலைவியினுடையவைகளாகும்! மற்று இதோ இங்குப் பதிந்துள்ளவை, கள்வனும், பகடு(யானை) போலும் வலிமையுடையவனுமாகிய, அவளது காதலனின் அடிச் சுவடுகளாக இருக்கும் என்று கருதுகின்றேன். (237).

பால்போலும் வெண்மையான திருநீற்றை அணிந்த, சிவபெருமானின் திருவடிகளைப் பணியாத பாவிகள் அடையும் வருத்தம்போல, மிகக் கொடிய வருத்தம் எனக்கு நேரும்படி, தீய பாவியேனாகிய யான் எடுத்துவளர்த்த மாட்சிமை மிக்க, அழகிய இழைகளை அணிந்த தலைவியின், கால்களாகிய மெல்லிய மலர்கள், அழகிய மெல்லிய சிறந்த தவிசினை மிதிப்பினும், அதனைப் பொறுக்க மாட்டாமற் பதைத்து வருந்திக் கொப்புளம் கொள்ளும் தன்மை வாய்ந்தவை. அத்தகைய மெல்லிய தலைவியின் கால்கள், ஐயகோ, வேல்போன்ற கூர்மையையும், சுடுகின்ற வெம்மையையும் உடைய பரற்கற்கள் நிறைந்த, கொடிய காட்டு வழியிலே, இன்று யாரோ ஒருவிடலையின் பின் தொடர்ந்து செல்வன ஆயின. இதனை அவைகள் எவ்வாறு பொறுத்துக் கொள்ளுதற்கு வல்லன ஆயினவோ? (238)

**செவிலித்தாய் :**

மலர் கொய்தலால் பொலிவுற்றுத் திகழ்கின்றவளே! புலிப் பல்லால் அமைந்த கழுத்தணியைத் தரித்தவளே! பொன் வளையல்களைப் பூண்ட வேட்டுவர் குலப் பெண்ணே! என் மகள் இளைய பேதைப் பருவத்தினள். அவள் இப்பாலை நில வழியிற் சென்ற பின்னர்தான், பெதும்பைப் பருவம் அடைந்தனள். எங்கள் வீட்டு முற்றத்தின் கண்ணும், என்னைவிட்டுச் சிறிது பிரிய நேர்ந்தால், வாடைக் காற்றினால் வாடி அசைந்து சுழல்கின்ற மெல்லிய பூங்கொடியைப் போல, மிகவும் அஞ்சித் தமியளாய் நடுங்கி நிற்பாள். சிவபிரானின் தில்லையைப் போன்று அழகிய, அத்தகைய என் மகள் கொடிய இப் பாலை நில வழியின்கண், இன்று அயலான் ஒருவனுடன் என்னைப் பிரிந்துவிட்டுப் போயினள். அவளை நீ கண்டனையோ? கண்டனையேல், அவள் எங்கு? எவ்வண்ணம் போயினாள்? என்று கூறுக. (239)

பெண் புறாவே! அயலானுமாய்த் தமியனுமாகிய ஒருவனது நயமான அழகிய சொற்களையே நம்பி, அவனைத் துணையாகப் பற்றிக் கொண்டு, என்னை விட்டுப் பிரிந்து, என் மகள் அவன் பின்னே சென்றாள். கங்கை நீரைப் பண்டு தன் விரிந்த சடையின்கண் ஏற்றவனும், தில்லையம்பலத்தின்கண் உள்ளவனும், மலையரசியைத் தன் திருமேனியின் ஒரு கூற்றிற் கொண்டவனும், ஆகிய கூத்தப் பெருமானைப் பணியாதவர்களைப் போல, மிக்க பாவத்தைச் செய்த என்பொருட்டு, அங்ஙனம் அயலானொடு சென்ற என் மகளுக்கு, 'இது தகுதி அன்று' என்று, நீ ஒன்றும் கூறாது ஒழிந்தாய். நீ இது முறையன்று என்று அறிவுரை கூறித் தடுத்திருப்பின், அவள் சென்றிருப்பாள் அல்லள் (240).

குழைகள் எழிலைச் செய்யவும், வண்டுகள் இசை மிழற்றி நின் மலர் ஆகிய பாவையைத் தாலாட்டவும், நீயும் நின் பாவையுமாய் இனிது மகிழ்ந்து நின்று, வாழ்ந்து குலாவுகின்ற பெ... குரவ மரமே! பாய்ந்து செல்லும் விடை... உடைய சிவபெருமானின் புலியூரைச்...

என்னுடைய புதல்வி, நின் முன்னே கொதிக்கின்ற இப் பாலை நிலத்தின்கண் வருந்தி நடந்து கடந்து செல்லவும், அவளை அங்ஙனம் செல்லாதபடி தடுத்து விலக்காமல், நீ பார்த்துக் கொண்டு வறிதே நின்றிருந்தாய். அது மட்டுமேயன்றி, அவள் இவ்வாறு, இன்ன இடத்திற்குச் சென்றனள் என்று, எனக்குக் கூற நீ நின் வாயையும் திறக்கின்றிலை. இது நினக்குத் தகுமோ?

[ஏதேனும் ஒரு துன்பமுற்றவர், அத் துன்பத்தின் மிகுதியால், தாம் செல்லும் வழியிற் காணும் பலரிடமும், தம் துன்பத்தினைக் கூறிப் புலம்பி நிற்றல், உலக மக்கள் இயல்பு. அம்முறையில் செவிலித் தாயும், புறு என்னும் பறவையையும், குரா (குரவம்) என்னும் மரத்தினையும் நோக்கிப், பலகூறித் தன் துன்ப உணர்ச்சியைத் தணித்துக் கொள்ளுகின்றாள். குரவ மரத்தைத் தன்னைப் போல ஒரு தாயாகக் கருதிக் கொண்டு, அதனிடம் செவிலி இங்ஙனம் பேசுகின்றாள். குரவ மரத்தின் மலரைப் ‘பாவை’ என்றல் மரபு. பாவை என்னும் சொல், ஈண்டுக் குரவ மலர் என்னும் பொருளையும், புதல்வி என்னும் பொருளையும் சுட்டி நின்றது. குரவ மரத்தினைத் தாயாகிய ஒரு பெண்போலக் குறித்தமையின், அதன் மலரைப் பாவை (புதல்வி) என்றும், அதன் தழையினைக் குழை (காதணி) என்றும், அம்மலரின்கண் வண்டுகள் இசை மிழற்றுதலை ஒலுறுத்துதல்(தாலாட்டுதல்) என்றும் செவிலித்தாய் குறிப்பிட்டாள். குழை—தளிர், குண்டலம். யான் என் பாவையை இழந்து துன்புறுகின்றேனே, நீ மட்டும் நின் பாவையுடன் வளமுற்று மகிழ்ந்திருக்கலாமா? என்பாள் ‘‘குழை எழில் வீச, வண்டு ஒலுறுத்த, நீயும் நின் பாவையும் நின்று நிலாவிடும்நீள் குரவே’’ என்றாள். எனக்கு ஆறுதலாக ஒரு சொல்லும் சொல்லுகின்றிலை என்பாள் ‘‘வாயும் திறவாய்’’ என்றாள். ‘‘தேனூறு பால்வாய்ப் படிறீ! அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்? வந்துன் கடை திறவாய்!’’ என வரும் திருவெம்பாவைச் செய்யுட் பகுதி, இங்கு நாம் நினைந்து இன்புறத் தக்கது] *(241)*

பிறர்க்குத் திருநீறு கொடுப்பதற்கு இப்பி வடிவாகத் தலையோட்டால் அமைக்கப்படும் சுத்தி என்னும் பொக்கணமாகிய திருநீற்றுப் பையையும், அக்க மணிமாலையையும், கட்டங்கம் (கட்வாங்கம்) என்னும் மழுப் படையையும், வட்டமாகச் சுற்றிய சடையினையும், திருநீற்றை நீரில் குழைத்து உடம்பு முழுவதும் பூசிய வெண்மையான கோலத்தையும் உடைய விரதியர்களே! புலியூர் அம்பலத்தை உடைய சிவபெருமான்பால், மிகுந்த பக்தியை உடைய அடியவர்களைப் போல, மிகவும் பருத்து இறுமாந்த முலைகளை உடைய, ஒரு பேதைப் பெண், தனக்குப் பின்னே தொடர்ந்து வரப், பெருந்தகை ஒருவன் இவ்வழியில் முன்னே செல்கின்றனனோ? கூறுமின்கள்.

[தலங்கள்தோறும்சென்று இறைவனை வழி(ப)டும் விரதம் உடைய, விரதியர் என்னும் செவ்வொழுக்கம் உடைய சான்றோர்கள், ‘சுத்திய பொக்கணத்து என்பு அணி, கட்டங்கம், சூழ்சடை, வெண்பொத்திய கோலத்தினர்’’ என்று இங்குப் புகழப் பெற்றனர். பண்டு இத்தகைய பெருமக்கள், யாண்டும் இருந்த குறிப்பும் சிறப்பும், இதனாற் புலனாகின்றன. தன் மகளை, ‘‘அம்பலவர்க்கு உற்ற பத்தியர் போலப் பித்தி’’ என்றாள். சிவபக்தர், தம் உள்ளத்துள் நிகழும் இன்புறவால், மேனிக் கண்வரும் ஒளியும், ஒடுங்காமையும் வாய்ந்து, இறைவனுக்கன்றி வேறு எவர்க்கும் எதற்கும் தாழாத உள்ளத்தராய்ச் செம்மாப்புற்று இறுமாந்திருப்பர் என்னும் உண்மை, ‘‘பத்தியர்போலப் பணைத்து இறுமாந்த பயோதரத்து ஓர் பித்தி’’ என்பதனாற் புலப்படுத்தப் பெற்றது. பயோதரம்-பாலைத் தன்னுள்ளே பொதிந்து கொண்டிருப்பவை, முலைகள். அவைகள் பெருத்தலும், நிமிர்ந்து நிற்றலுமாகிய இயல்புடைமையின், ‘‘பணைத்து இறுமாந்த பயோதரம்’ எனப் பெற்றன. மகளிரின் உறுப்புக்களுள் கண்களை ஞானத்திற்கும், இடையினை வைராக்கியத்திற்கும், முலைகளைப் பக்தி உணர்வின் பெருக்கத்திற்கும், அறிகுறியாகச் சுட்டிப் பாடுவது, சான்றோர் கவிதை மரபு] *(242)*

மூங்கிற் றண்டு ஏந்திய கையினையும், மெல்லிய மான்தோல் பொருந்திய தோளினையும், வெண்மையாகிய பூணூலையும் உடையவர்களாய், மேகங்களின் இடிமுழக்கம் போல, வேதங்களை எடுப்பான உரத்த குரலில் ஓதிக் கொண்டு, இவ்வழியே செல்லுகின்ற வேதியர்களே! தில்லையம்பலத்திலுள்ள பிறை சூடிய பெருமானின் கையில் உள்ள மானைப் போல, மருண்ட நோக்கம் உடையவளாய், அழகிய இளைய மான்போன்ற பெண் ஒருத்தி, மயில் போல அசைந்த சாயலை உடையவளாய், வெப்பத்தால் யாவரையும் வருத்தும் இப் பாலை நிலம்தானும் கண்டு, மிகவும் துன்புற்று வருந்தும்படி, ஒரு தலைவனுடன் நும் எதிரே இவ்வழியிற் சென்றனளோ? கூறியருள்மின்!

[இச் செய்யுள், வேதம் ஓதிக்கொண்டு வழிநடந்து செல்லும் வேதியர்களின் இயல்பினை இனிது விளக்குகின்றது. வெதிர்-மூங்கில் தண்டு, முக்கோல் எனினுமாம். வேதம் ஓதும் வேதியர், மூங்கிற் றண்டு ஏந்துதலும், மான் தோலும் பூணூலும் அணிந்திருத்தலும், உதாத்தம் அனுதாத்தம் சுவரிதகம் என்னும் முறைகளில் வேதங்களைப் பாராயணம் செய்து கொண்டு செல்லுதலும், தமக்கு இயல்பாக உடையர் என்பது, இதனால் இனிது புலனாகின்றது. தலைவியைச் சிவபிரானின் கரமான் போலும் மான் என்றும், அவள் மயில் போலும் சாயலள் என்றும் குறிப்பிட்ட திறன், மிக்க நயம் செறிந்த தாகும்! ‘எதிரே வருமே’? என்பது வினா. ‘சுரமே வெறுப்ப’ என்பது, பிறரை வருத்தும் இயல்புடைய சுரமும், தான் கண்டு வருந்தும்படி, என உம்மைப் பொருள் குறித்து வந்தது] *(243)*

ஆணும் பெண்ணுமாய், காதலனும் காதலியுமாய், கணவனும் மனைவியுமாய் வருகின்ற, நும்மைத் தூரத்தே கண்ட அளவில், என்னுடைய மகளும், அவளுடைய காதலனும்

தான், மீண்டு திரும்பி வருகின்றூர்கள் என்று நினைத்து, மிகவும் மகிழ்ச்சியுற்றேன். ஆனல் நீங்கள் அவர்களல்லாத வேற்றுவராகக் காண்கின்றீர்கள். நும்மைப் போலவே, மிக்க பெருந்தகைமை பொருந்திய ஆணும் பெண்ணுமாகிய இருவர், இவ்வழியில் நும் எதிரில் சென்றனரோ? கூறுமின்கள் என்று, செவிலித்தாய், தான் தன் மகளைத் தேடிக் கொண்டு செல்லும் வழியில், ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து வரும் காதலர் இருவரை நோக்கி வினவினுள்.

அதற்குத் அக் காதலன், புலியூர்க்கண் நின்று என்னை ஆண்டு கொண்ட, சிவபெருமானின் திருமலையில் உள்ள ஆளி (சிங்கம்) போலும் பேராற்றல் மிக்க ஆடவன் ஒருவனை, வழியில் யான் பார்த்தேன் என்று கூறித், தன் காதலியை நோக்கி, ''தூண்ட வேண்டாத ஒளிவிளக்கைப் போன்ற அழகும் அறிவும் உடையவளே! யான் கண்ட ஆடவனுக்கு அயலில், அவனுடன் யாரேனும் இருந்தனரா? அன்னையாகிய இவள் யாது கூறுகின்றுள்? இவள் வினவுவது போல, நாம் வரும் வழியில் பெண் ஒருத்தியை நீ கண்டனையோ? கண்டிருப்பின் அதுபற்றி இவ் அன்னைக்கு நீ கூறுக'' என்றுன்.

[இச் செய்யுள், திருச்சிற்றம்பலக் கோவையாரில், அறிஞர்கள் பலராலும் அடிக்கடி எடுத்துக் கூறி மகிழப் பெறும் சிறப்புமிக்கதாகும். பண்டைக் காலத்தில் ஆடவரும் மகளிரும் எத்தகைய சிறந்த கற்பொழுக்கம் உடையவராகத் திகழ்ந்திருந்தனர் என்பது, இச் செய்யுளால் அழகுற விளக்கப் பெற்றுள்ளது. ஆடவன் எவனும் அயற் பெண்களை நோக்குவதில்லை; அங்ஙனமே மகளிரும் அயல் ஆடவரைக் காண்பதில்லை. தீய நோக்குடன் பிற மகள் எவளையும் நோக்காத பேராண்மை ஆடவர் மாட்டும், பிற மகன் எவனையும் நோக்காத கற்பெனும் பெருந்திண்மை மகளிர் மாட்டும், இயல்பாக அமைந்திருத்தல் வேண்டும் என்னும் உயரிய நாகரிகப் பண்பாட்டு ஒழுக்க நலன், மணிவாசகப் பெருமானல், இச் செய்யுளில் அழகுற அறிவுறுத்தப் பெறுகின்றது.] (244).

பொலிவு மிக்க கயிலாய மலையை உடைய, சிவபெருமானின் புலியூரைப் போன்றவளும், குற்றமற்றவளும், மிக இளம் பருவத்தினளும் ஆகிய என் மகள், நின்று கொண்டிருந்தது இவ்விடமாகவும்; தன்னை எதிர்த்து வந்த புலியினது வாயின்கண், தன்னுடைய பெரிய கையை உள்ளே நுழைத்து, அதன் வாயைக் கிழித்து, அப்புலி விழுந்து கிடந்து அலறி உயிர்விடும்படி, திண்ணிய ஆற்றல் மிக்க ஆண்தகையாகிய அவன், தன்னுடைய வேலைச் சுழற்றி வேகமாக எறிந்து, அப் புலியைக் கொன்றது அவ்விடமாகவும் தோன்றுகின்றது. இதனல் என் மகளும், அவளது காதலனும் சென்ற நெறி, இதுவேயாதல் வேண்டும்!(245)

**கண்டோர்:** அன்னையே! நீவிர் கூறிய கோலமும் சீலமும் உடையார் இருவரை, யாங்கள் இக்குன்றத்தின்கண் வரும் வழியிற் கண்டோம். அவ்விருவரும் இணைந்து இயைந்து ஒருவராகச் செல்லுதலின், அவனது கழலும் அவளது சிலம்பும்; அவனது வெண்பட்டும் அவளது செம்பட்டும்; ஒளிமிக்குத் திகழ்ந்து, ஒரு வடிவே போன்றிருந்தன. அதனல் அவர்களின் தோற்றம், சிவபிரானும் தேவியும் பிரிப்பின்றி ஒருங்கியைந்த அம்மையப்பர் (அர்த்த நாரீசுவரர்) தோற்றம் போலக் காணப் பெற்றது. ஆதலின் நாங்கள் எல்லாம், அவ்வழகைப் பெரிதும் வியந்து மகிழ்ந்து தொழ நினைத்தோம். அவ்வழகின் சிறப்பு, மிகப் பெரிதும் வியந்து போற்றத் தக்கதே அன்றி, இவ்வாறு இருந்தது என்று சொல்லுவதற்கு இயல்வதன்று. (246).

அன்னையே! கெண்டை போலும் அழகிய கண்களை உடைய நுமது மகள், கொடுமை மிக்க கடமாவை எதிர்த்துப் பிளந்து கொன்ற வீரனகிய தலைவனுடன், நீண்ட இந்தப் பாலை நில வழியைக் கடந்து, ஓர் இடுக்கணும் இன்றி, எம்மை அருளுடன் ஆட்கொண்டு காத்து வருகின்ற சிவபெருமானின் தில்லையின் எல்லையிற் சென்று, நலமாகச் சேர்ந்திருப்பர். அதனல் நீர் செயற்பாலது, நும் ஊர்க்கு மீண்டு செல்வதே யாகும். இனி, அவர்களைத் தேடிக் கொண்டு, வீணுக நீர் அலைதல் வேண்டா. (247)


நறுமணத்தால் வண்டுகள் சென்று படிகின்ற சந்தனக் கோடுகளும், ஆழ்ந்த கடலின் கண் தோன்றுகின்ற முத்துக்களும், வெண்ணிறமான சங்குகளும், தாம் தாம் தோன்றிய இடத்தைவிட்டு, நீங்கித் தம்மை விரும்பி அணிபவர்கள் எங்கிருப்பினும், அங்குச் சென்று சேர்ந்து, அவர்தம் உடலுக்கு அணியாக விளங்கும். கங்கை நதியைச் சூடுகின்ற சிவபெருமானின் சிற்றம்பலம் போன்ற அழகும், கரும்பு போன்ற இனிய சொற்களும் உடைய பெண்களும்கூட, மேற்குறித்த சந்தனமும் முத்தும் சங்கும் போன்ற தன்மை உடையவர்களே யாவர்! ஆதலின் நீர் கவலை கொள்ளுதல் வேண்டா. நும் மகள், தான் சென்று சேர்ந்து வாழ்தற்குரிய தகுதிமிக்க தலைவனையே அடைந்திருக்கின்றுள். (248).

**கண்டோர்:** (தமக்குள்): இவ் வம்மையார் தாம், அவ்விடத்து இல்லத்தின்கண் எடுத்துத் தலைவியை வளர்த்தவர் போலும்! தம்மை அணுகுபவர் யாவராயினும், அவர்களை நரகக் குழியில் அழுந்தாமல், மேலே எடுத்து, அவர்களின் தீவினைகளைத் தீர்த்துக் காத்தருள்பவனுகிய சிவபெருமானின் தில்லையின்கண், தூண்டிலை விழுங்கிய வரால்மீன்கள், துள்ளிச் சென்று உயரிய தென்னை மரங்களிலுள்ள குலைகளின்மீது தாக்குதலால், அவற்றின் பழங்கள் கீழே விழுந்து, செம்பொற் கிண்ணம் போலப் பூக்கள் மலர்ந்த தாமரைகளைக் கிழிக்கின்ற, வளம் நிறைந்த வயல்கள் மிகுந்த தம் ஊரின்கண், அவ்விருவரும் நலமாகச் சென்று சேர்ந்திருப்பர். அவர்களுக்கு இனி ஓர் இடரும் இல்லை. (249).

—தொடரும்

(உடன்போக்கு முற்றிற்று.)

# கம்பர் விளக்கும் கவிதை இயல்





ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

தமிழ் மொழிக்கு எத்தனையோ பல சிறப்புக்கள் உண்டு. ஏராளமான இனிய சிறந்த கவிதைகளைப் பெற்றிருத்தலும் அவைகளுள் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலம் தொட்டே, தமிழிற் சிறந்துயர்ந்த கவிதை இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. தமிழைப் போலப் பழமையும் பெருமையும் வாய்ந்த, சிறந்த கவிதை இலக்கியங்களைப் பெற்றுள்ள மொழிகள், உலகில் ஒரு சிலவே யாகும். தமிழ் நூல்களுள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு துறையில் தனிச் சிறப்புடையது. பொதுவாக எல்லா வகையான மக்களும் எளிய இனிய முறையிற் கவிதையின்பம் துய்த்து மகிழ்தற்குத் துணை புரிவது, கம்ப ராமாயணம் என்னும் கவின் மிகு நூலே எனலாம்.

அதன்கண் கதையின் சிறப்பும், கருத்தின் வளமும், கவிதையின் எழிலும் ஒருங்கே பொருந்தி ஒளிர்கின்றன. எல்லாச் செல்வங்களையும் பெற்று, இவ்வுலகம் முழுவதையுமே அரசாட்சி புரிந்தாலும்; தேவருலகம் சென்று, அங்கே கற்பக மர நிழலில் அமர்ந்து, எத்துணைப் போகங்களைத்தான் நுகர்ந்தாலும்; கற்றவர்களின் உள்ளத்தினைக் களிப்படையச் செய்வது கம்ப நாடன் கவிதை ஒன்றேயாகும். அதனைப் போலக் கற்றவர்களின் உள்ளத்தைக் களி[illegible]ளும்பச் செய்வது வேறு பிறிதொன்றில்லை.

"கம்ப நாடன் கவிதையிற்போற்
கற்றோர்க் கிதயம் களியாதே"

கம்ப நாடரின் கவிதைச் சிறப்பு, கட்டுரைத்தற்கு எளிய தொன்றன்று. பெண்களிலெல்லாம் திருமகள் போலவும், விண்மீன்களிலெல்லாம் சூரியன் போலவும், உலகிலுள்ள மலைகளிலெல்லாம் இமய மலை போலவும், ஈடும் எடுப்[illegible] இன்றிச் சிறந்துயர்ந்து திகழ்வது கம்ப[illegible]யணம். அதனைப் போன்ற கவின் மிக்க வேறொன்றனை நாம் காண்பதரிது.

"கம்பரா மாய ணம்போற்
கவின்மிகு நூலும் காணேம்"

கம்பராமாயணம் உலகப் பெருங் காப்பியங்களுள் ஒன்று. உலகப் புகழ் பெற்ற இலியதம், ஈனிதம், துறக்க நீக்கம், மகாபாரதம் போன்ற பெருங்காப்பியங்களுடன் மட்டுமேயன்றித், தனக்கு மூல முதல் நூல் ஆகிய வான்மீகி ராமாயணத்துடனும் கூட, அது சரி நிகர் சமானமாகத் திகழத்தகும் சிறப்புடையது. (*) இவ்வாற்றால், கம்பராமாயணம் கவின் மிகச் சிறந்த ஒரு பெருங் கவிதை இலக்கியம் என்பதும், கம்பர் தலைசிறந்த ஒரு பெருங் கவிஞர் என்பதும் தெளிவாம். கம்பரின் கவித்திறனை யுணர்வதற்கு அவர் தம் நூல் முழுவதுமே சான்றாகும்.

## கவிஞன் செயல் :

உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராகிய ஷேக்ஸ்பியர், தம்முடைய நூல்களில் அங்கங்கே கவிதை பற்றியும், நடிப்பினைப் பற்றியும் குறிப்பிட்டுச் சென்றிருத்தல், ஈண்டு நாம் எண்ணி உளங் கொள்ளுதற்கு உரியது.

"கவிஞனின் கண்ணு[illegible]து, மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினால் விண்[illegible]ல் இருந்து மண்ணையும் மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று அளந்து பார்வையிடுகின்றது; பிறர் காணவும் கருதவும் இயலாத பொருள்களின் இயல்புகளைக் கற்பனை யுணர்வானது உருவாக்கித் தரத்தர, அவைகளைக் கவிஞனின் எழுதுகோல் எழில் கனிந்த வடிவங்களாக இனிது தீட்டுகின்றது; காற்றுப் போல நுண்ணியனவாய்க் காணப்படாமையின் இல்லனவாய் விளங்கும் அவற்றிற்கு ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது"

---

(*) "In the Ramayana of Kamban, the world possesses an epic which can challenge comparison not merely with the Iliad, and the Aeneid, the Paradise Lost and the Maha Bharatha, but even with its original itself, namely, the Ramayana of Valmiki."

—V. V. S. IYER,

(†)வல்லதம் விழியின் வீச்சால்
மண்ணொடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து,
கற்பனை உணர்வின் மாண்பால்,
இல்லதொன் றனையும் ஊர்பேர்
இயைபுறப் படைத்துக் காட்டும்
நல்லியற் கவிஞர் செய்கை
நலமெலாம், நவிலற் பாற்றோ?

—தமிழாக்கம், ந. ரா. மு.

என்று ஷேக்ஸ்பியர் தம்முடைய "ஒரு நடு வேனிலின் இரவுக் கனவு" என்னும் நூலிற் பாடியிருப்பது, ஒரு கவிஞர் என்ற நிலையில் அவர் எத்தகையவர் என்பதனை, நாம் உணர்வ தற்குத் துணை புரிகின்றது.

## நடிப்புக்கலைக் குறிப்பு :

இங்ஙனமே மிகவும் புகழ்பெற்ற பிறி தொரு நூல் ஆகிய ஹாம்லெட் என்னும் நாட கத்தின்கண், மிகச் சிறந்த நடிகராகவும் விளங்கி யிருந்த ஷேக்ஸ்பியர், தம்முடைய நடிப்புக் கலை யுணர்வின் நலமனைத்தும் விளங்கும் வண்ணம், வழங்கியுள்ள ஒரு சில குறிப்புக்களும், இங்கே இயைபு பற்றி நாம் அறிந்து கொண்டு இன்புறு தற்குரியன.

"நீங்கள் உங்கள் பேச்சுக்களை நயமாகவும் பொருத்தமாகவும் பேசுங்கள். கூச்சலிட்டுக் கத் தாதீர்கள். காற்றை ஈர்வாள் (Saw) கொண்டு அறுப்பதுபோன்று, கைகளை மேலும் கீழும் ஆட்டிக் குதிக்காதீர்கள். அமைதியாகப் பெருந்தன்மை தோன்ற நடியுங்கள். உணர்ச்சியினைப் புயலும் சூறுவளியும் போல ஆக்கிச் சிதைத்து விடாமல் அளவாகவும் செம்மையுடனும் வெளியிடுங்கள். உணர்ச்சியினை அளவுக்கு மீறி மிகைப்படுத்தி, இரைச்சலும் கூச்சலும் இட்டுப் பேசி, சுவைக்குந் திறன் இல்லாத தரையாளர்களைக் (Groundlings) களிப்பூட்ட முயலாதீர்கள். மிகைப்படுத்தி நடிப்ப வர்களின் உரையாடலைக் கேட்பது, என் உள்ளத் தைப் பெரிதும் துளைத்து வருத்துகின்றது. அள வுக்கு மீறி நடிப்பவனைச் சவுக்கினுல் அடித்து ஒறுத்தலை, நான் விரும்புகின்றேன். அத்தகைய வன் செயல், ஏரோதையே (Herod) விஞ்சும் ஏரோது போல இருக்கின்றது. மிகை நடிப்பை விலக்கி விடுமாறு, உங்களை யான் பெரிதும் மன்றுடி வேண்டுகின்றேன்.

அதன்பொருட்டு மிகுந்த கோழை போலவும் ஆகிவிடாதீர்கள். உங்கள் அறிவின் திறனையே ஆசானுகக் கொண்டு, ஏற்றபடி இனிதாக நடி யுங்கள். சொல்லுக்குச் செயலும், செயலுக்குச் சொல்லும் ஒத்திருக்குமாறு பார்த்துக் கொள் ளுங்கள். இயற்கையினை உள்ளது உள்ளபடியே விளக்கிக் காட்டுவதுதான், நடிப்பின் குறிக்கோள். அளவிற்கு மிகவோ குறையவோ நடித்தால், ஒரு வேளை அறிவில்லாதவர்களுக்கு மகிழ்ச்சியைத் தர லாம்! ஆனுல் அறிவுடையவர்களுக்கு அது வருத் தத்தையே விளைவிக்கும். மனித இயல்பைப் "போலச் செய்து" காட்ட (Imitate) மாட் டாமல், காண்போர்க்கு அருவருப்பை உண் டாக்கி விடுபவர்களை, மனிதர்கள் என்றே நான் மதிக்கமாட்டேன்.....நகை வேழம்பர்கள் (Clowns) என நடிப்பவர்கள், தங்களுக்கென்று எழுதப் பெற்ற வசனத்தை மட்டுமே பேசுக. அவர்கள் தம் மனம் போனபடி எதனையும் உளறுமல் இருப் பது இன்றியமையாதது........"(*)

## நெஞ்சின் மிக்கது வாய்சோரும் :

இக்குறிப்புக்களின் வாயிலாக, ஒரு நடிகர் என்ற நிலையில் ஷேக்ஸ்பியர் எத்தகைய அநுபவ மும் உணர்வும் வாய்ந்து விளங்கியிருந்தார் என்ப தனை, நாம் அறிந்து கொள்ளப் பெறுகின்றனம் அல்லமோ? இவ்வாறு ஷேக்ஸ்பியர் தம் இயல் பும் உணர்வும் புலனுகுமாறு இடையிடையே சில சில குறிப்புக்களை "நெஞ்சின் மிக்கது வாய் சோரும்" என்னும் உண்மைக்குப் பொருந்த விடுத்துச் சென்றுள்ளமை போலவே, கம்பரும் தம் கவியுள்ளமும் கருத்தும் புலப்படுமாறு, தமது நூலிற் சிற்சில குறிப்புக்களைப்பொறித்துப் போந்தருளியுள்ளார். கம்பராமாயணம் முழுவ தையும் நன்கு நுனித்து ஆராய்ந்து கற்பவர் களுக்கு, இடையிடையே போதரும் அவர்தம் கவிதையியற் குறிப்புக்கள், ஆராப் பெரு விருந் தாக அமையும். இங்கு இயன்ற வரையில் நாம் அவற்றை ஒரு சிறிது ஆராய்ந்து கண்டு மகிழ்வோம்!

## 1) கவிருணும் சொல்லும் :

அயோத்திமா நகரம், கவிஞர்கள் அனைவ ராலும் புகழப் பெற்றது ; வட நூல் முனிவர் கள் பலரும் போற்றி வாழ்த்தியது ; தேவர் களும் கூடத் தம்முடைய உலகத்தை விட்டு இறங்கிப் போந்து, தங்கி வாழ்வதற்கு விரும்பு கின்ற அத்துணை மாட்சிமை வாய்ந்தது.

---

(†) " The Poet's eye, in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth,
from earth to heaven ;
And as imagination bodies forth
The form of things unknown, the poet's pen,
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name."

—SHAKESPEARE,
*A Midsummer Night's Dream*

(*) Speak the speech, I pray you, as I pronounced it to you, trippingly on the tongue . . . Nor do not saw the air too much with your hand, but use gently . . . for in the very whirlwind of your passion, you must acquire and beget a temperance that may give it smoothness.

O, it offends me to the soul to hear a robustious periwig-pated fellow tear a passion to tatters, t[o] very rags, to split the ears of the groundlings . . .I woul[d] have such a fellow whipped for over-doing Termagant; it out-herods Herod. Pray you avoid it.

Be not too tame neither, but let your discretion be your tutor. Suit the action to the word, the word to the action ; with this special observance, that you over-step not the modesty of nature... The purpose of playing is to hold, as it were, the mirror up to nature . . Let those that play your clowns speak no more than is set down for them . . ."

—SHAKESPE[ARE]
*Hamlet*, 3 ; 2 : 1-

''செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர் அனைவரும், வடநூல்
முனிவரும் புகழ்ந்தது; வரம்பில்
எவ்வுல கத்தார் யாவரும் தவஞ்செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ்வுல கத்தார் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது. அர்யாத்திமா நகரம்''

இப்பாடலின்கண் அயோத்திமா நகரினைப் புகழ்தலே, கம்பரின் கருத்தாயினும், கவிஞர்களைப் பற்றியும், அவர்கள் வழங்கும் சொற்களைப் பற்றியும் கூட, அவர் இடைப் பிறவரல் போலக் குறிப்பிட்டிருக்கும் திறம், நினைத்து உணர்ந்து மகிழத் தக்கது. கவிஞர்கள் கையாளும் சொற்கள் செம்மையுடையவை; மதுரம் சேர்ந்தவை ; நற்பொருள் உணர்த்துபவை; சீரியவை ; கூரியவை ; தீவியவை (இனிமை மிக்கவை) என்கின்றார். இத்தகைய சொற்களைக் கையாளும் திறமை பெற்றவர்கள்தான், கவிஞர்கள் ஆவர் எனவும் சுட்டுகின்றார்.

''செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர்''

எனவரும் வரிகள், கம்பரின் கவிதை யுணர்வை மட்டுமேயன்றிக், கவிதை குறித்தும், அவர் கொண்டிருந்த பல அனுபவம் மிக்க கருத்துக்களைப் பற்றியும், புலப்படுத்துதல் காணலாம்.

## 2) புன்கவியின் தெளிவின்மை :

அயோத்திமா நகரம் உயர்ந்த மதில்களை உடையது. அம் மதில்களைச் சுற்றி ஆழமான பெரிய அகழி அமைந்துள்ளது. அதன்கண் உள்ள நீர், தெளிவு இன்றிக் கலங்கியிருக்கின்றது. அணுகுதற்கு இயலாதபடி அதற்குப் பல காவல்கள் அமைந்துள்ளன. மேலும் அங்கே ஏராளமான கொடிய முதலைகளும் உண்டு. இங்ஙனம் அகழியானது, ஆழமும் கலக்கமும் காவலும் உடையதாய், முதலைகளும் நிறைந்திருக்கும் தன்மையினை, அரிய இனிய பல உவமைகளாற் கம்பர் அழகுற விளக்குகின்றார்.

*(1)* அகழியின் பரப்பு, கடல் போன்றது. *(2)* அதன் ஆழம், பொன் விலை மகளிர் மனம் போன்று, அளவிட்டு அறிய முடியாதது. *(3)* அதன் கலக்கம், நல்ல புலமை நலம் நிரம்பப் பெறாத ஒருவனின் புன்கவியைப் போலத் தெளிவு இன்றி மருட்சி விளைவிக்கும் தன்மையது. *(4)* அதற்கு அமைந்துள்ள காவல், கன்னி மகளிர் தங்கி வாழும் அந்தப்புரம் போலப் பகைவரால் எளிதில் அணுகுதற்கு இயலாத அருமைப்பாடு வாய்ந்தது. *(5)* அங்கே வாழும் வலிய கொடிய முதலைகள், நம்மை நன்னெறியிற் செல்ல விடாமல், புன்னெறியில் வீழ்த்தி வருத்துகின்ற ஐம்பொறிகளைப் போன்றவை.

''அன்னமா மதிலுக்கு ஆழிமால் வரையை
அலைகடல் சூழ்ந்தென அகழி,
பொன்விலை மகளிர் மனம்எனக் கீழ்ப்போய்ப்,
புன்கவி எனத்தெளிவு இன்றிக்,
கன்னியர் அல்கும் தடம்என யார்க்கும்
படிவரும் காப்பின தாகி,
நன்னெறி விலக்கும் பொறிஎன, எறியும்
கராத்தது நவிலலுற் றதுநாம்!''

—நகரப்படலம், 14.

அகழியின் இயல்பினை விளக்குதற்கு அழகிய ஐந்து உவமைகளை ஆராய்ந்து கூறியருளிய கம்பர், ''புலமை நிரம்பாத நிலையில் ஒருவன் பாடும் புன்கவிகள் பொருட்டெளிவு இல்லாமல், பயில்வோர்க்கு ஐயங்களை மிகுவித்து மயக்கமே விளைவித்துக் கேடு சூழும்'' என்னும் உண்மையினை ''புன்கவி எனத் தெளிவு இன்றி'' என்பதனால் உணர்த்தியிருத்தல் உளங்கொளத் தக்கது.

## 3) செஞ்சொற் கவியின்பம் :

இராமபிரான் விசுவாமித்திர முனிவருடன், மிதிலைமா நகருக்குச் செல்கின்றார். மிதிலை நகரின் அழகிய பல்வேறு காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து கொண்டே, அதன் வீதிகளில் அவர் நடந்து போகின்றார். அதுபோது மிதிலை நகர அரண்மனையின்கண் உள்ள கன்னிமாடத்தின் மேலிடத்தில், அன்னங்கள் கூடி விளையாடி இன்புறும் இடத்திற்கு முன்புறத்தில், சீதைப் பிராட்டி நின்று கொண்டிருக்கின்றாள். அங்ஙனம் சீதை நின்று கொண்டிருத்தலை, இராமபிரான் காண நேர்கின்றது. அந்தச் செய்தியைக் கம்பர் சொல்ல வருகின்றார்.

சீதையின் அழகினை இராமபிரான் காண்கின்றார். சீதையோ பேரழகு வாய்ந்தவள். அவளது அழகின் அளப்பருஞ் சிறப்பினையெல்லாம் விளக்க முயல்கின்றார் கம்பர்! அவருக்கு ஓர் உவமை போதவில்லை. பல உவமைகளைக் கூறுகின்றார். பொன்னின் சோதியும், பூவின் நறுமணமும், தேனின் தீஞ்சுவையும் போலச் சீதைப் பிராட்டி பொலிந்து தோன்றினாள் என்கின்றார். அப்போதும் அவருக்கு மன நிறைவு ஏற்படவில்லை. ஆதலின் ஒரு சிறந்த கவிஞன், செம்மையான சொற்களால் யாத்த ஒரு சிறந்த கவிதையினால் விளையும் இன்பம் எத்தகையதாக இருக்குமோ, அவ்வாறு சீதை பொலிந்து நின்றாள் எனப் பாடி இன்புறுகின்றார்.

''பொன்னின் சோதி, போதினில் நாற்றம்
பொலிவே போல்,
தென்னுண் தேனில் தீஞ்சுவை,
செஞ்சொற் கவியின்பம்,
கன்னிம் மாடத் தும்பரின் மாடே
கனி பேடோடு
அன்னம் ஆடும் முன்துறை கண்டு
ஆங்கு அயல் நின்றாள்.''

—மிதிலைக்காட்சிப்படலம், 23.

ஒரு காலத்து ஒரு பொறிக்கு மட்டுமே, இன்பந் தரவல்ல பொருள்கள், உலகிற் பல உண்டு. ஆனால் ஐம்பொறிகளுக்கும் ஒரு சேர இன்பம் தரவல்ல பெருமை, பெண்களுக்கே யுரியதாகும். இதனைக் ''கண்டு கேட்டு உண்டு

உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள'' எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுவர். அம்முறையிற் சீதைப் பிராட்டியின் பேரழகு, இராமபிரானின் ஐம்பொறிகளுக்கும் ஒரு சேரப் பேரின்பம் தர வல்ல நிலையிற் சிறந்து பிறங்கிற்றும். பொன் ஊற்றுக்கும், பொன்னின் சோதி கண்ணுக்கும், போதினில் நாற்றம் மூக்குக்கும், தேனின் தீஞ்சுவை நாக்குக்கும், செஞ்சொற்கவி காதுகளுக்கும், முறையே இன்பம் தரும் இயல்பின. ''பொன்னின் ஒளி, பூவின் வெறி, சாந்து பொதி சீதம், மின்னின் நிழல் அன்னவள்தன் மேனி ஒளி'' என்று கோலங்காண் படலத்தும் (28), வருகின்றது. பொன், பொன்னின் சோதி, போதினில் நாற்றம், தேனில் தீஞ்சுவை என்பவற்றேடு, **செஞ்சொற் கவியின்பம்** எனவும், சீதைப் பிராட்டி பொலிந்து திகழ்ந்தாள் எனக் கம்பர் குறிப்பிட்டருளியுள்ளார். இதனுல், கம்பர் வெறும் கவிஞர் மட்டுமேயல்லர், கவிதையின்பம் இனையதென்று அநுபவித்துணர்ந்து திளைத்தவரும் ஆவர் என நாம் உணரலாம். இல்லையேல், சீதையினையே அவர் ''செஞ்சொற் கவியின்பம்'' என்று சிறப்பித்து உருவகம் செய்து பாடியிருத்தல் இயலாது என்பது திண்ணம்.

## 4) சான்றோர் கவி :

இராமபிரான் தன் தந்தையாகிய தசரதனின் கட்டளைப்படி, சீதையோடும் இலக்குவனேடும் காட்டிற்குச் செல்லுகின்றனர். அங்கே அகத்திய முனிவர், ''நீவிர் உறைவதற்கு ஏற்ற இடம் கோதாவரிக் கரையில் உள்ள பஞ்சவடி என்னும் ஆச்சிரமமே யாகும்'' என்று கூறுகின்றூர். வழியில் அவர்கள் சடாயுவைச் சந்தித்து மகிழ்கின்றனர். சடாயு அவர்களுக்குப் பஞ்சவடிக்குச் செல்லும் வழியினைக் காட்டுகின்றூர். மூவரும் கோதாவரி நதி தீரத்தை அடைகின்றனர். அக் கடவுள் மா நதியின் அழகும் சிறப்பும் கண்டு இன்புறுகின்றனர்.

இங்ஙனம் கோதாவரியினை வீரர் கண்டார் என்பதொன்றே, கம்பர் பாட வேண்டுவது ஆயினும், கோதாவரியின் வெள்ளம் போல, அவர்தம் கவிதையுள்ளத்திற் கற்பனை வெள்ளம் பெருகி விடுகின்றது ஆதலின், கோதாவரி நதியினைச் சான்றோர் கவிதையோடு ஒப்பிட்டுக் காட்டி, உள்ளம் களிதுளும்புகின்றூர் கம்பர்!

கோதாவரி நதியானது, தான் பாயும் நாட்டிற்கு அழகும் சிறப்பும் அளிக்கின்றது ; செழிப்பை யுண்டாக்கி விளை பொருள்களை மிகுவிக்கின்றது ; வெள்ளப் பெருக்கின் மிகுதியினுல் பற்பல கால்வாய்களின் வாயிலாக எங்கும் பரவி நிறைகின்றது ; இறங்கும் நீர்த் துறைகள் பலவற்றை அங்கங்கே கொண்டு ஒளிர்கின்றது; மலை காடு வயல் மணல்வெளி கடற்கரை என்னும் ஐவகை நிலப் பகுதிகளின் வழியாகவும் ஓடிப் பாய்ந்து பயன் தருகின்றது ; பளிங்கு போல விளங்கி மிகவும் தெளிந்து காணப்படுகின்றது; வற்றுத பெரு நதி யாதலால் குளிர்ச்சி நிரம்பி இடையறுமல் ஓடிக் கொண்டே யிருக்கின்றது.

சான்றோர் அருள்கின்ற கவிதையும் (1) நாட்டிற்குச் சிறப்பை யளித்து உலகுக்கு நலம் பயக்கின்றது. (2) அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பொருள்களையும் நல்குகின்றது. (3) கற்பவர்களின் அறிவுக்கு விருந்தாக அமைகின்றது. (4) அகத்திணை புறத்திணை என்னும் பொருட்டுறைகளை யுடையதாய்ப் பயில்பவர்க்குக் கவலைகளை நீக்கி ஆறுதல் அளிக்கின்றது. (5) குறிஞ்சி முல்லை மாலை நெய்தல் மருதம் என்னும் ஐந்திணை வளங்களையும், அவற்றிற்குரிய புணர்தல் இருத்தல் பிரிதல் இரங்கல் ஊடல் என்னும் ஐவகை ஒழுகலாறுகளையும் பற்றிச் செவ்விதின் விளக்குகின்றது. (6) நமக்கு எழும் ஐயங்களை நீக்கித் தெளிவு பெறச் செய்கின்றது. (7) மெல்லென்ற ஓசையுடன் தடையறச் செல்லும் நடையழகு பெற்று விளங்குகின்றது. இங்ஙனம்,

1. புவியினுக்கு அணியாதல்.
2. ஆன்ற பொருள் தருதல்.
3. புலத்திற்ருதல்.
4. அவியகத்துறைகள் தாங்கல்.
5. ஐந்திணை நெறி அளாவல்.
6. சவியுறத் தெளிதல்.
7. தண்ணென்று ஒழுகல்.

என்னும் பலவகை ஒப்புமைகளும், கோதாவரி நதிக்கும், சான்றோர் கவிதைக்கும் இடையே விளங்குதலைச், சுவை பெருகவும், சிலேடை என்னும் அணி நலம் அமையவும், பாடியிருக்கும் கம்பரின் கவிதைத் திறம், சாலவும் பாராட்டிக் களிப்பதற்குரியது.

''புவியினுக்கு அணியாய், ஆன்ற
பொருள்தந்து, புலத்திற் ருகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறி அளாவிச்,
சவியுறத் தெளிந்து, தண்ணென்று
ஒழுக்கமும் சான்று, சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்!''

## 5) கவிஞர் சொற்பொருள் :

இராமபிரான் சபரிக்கு வீடு பேறு அளித்த பின்னர்ப் பம்பை என்னும் பெரிய பொய்கையினை அடைகின்றூர். ஆதலின் கம்பர் அதன் சிறப்பினைப் புனைந்து பாட முற்படுகின்றூர். பம்பைப் பொய்கை மிகவும் அழகானது. கீழே பாதாளம் வரையில் ஆழ்ந்து சென்று, நாகர்கள் வாழும் இடம் இதுதான் என்று காட்டக் கூடிய தன்மை அதற்கு உண்டு. அத்தகைய அதன் ஆழம், சிறந்த கவிஞர்கள்பயன்படுத்தும் சொற்களின் பொருள்கள் எங்ஙனம் மிகவும் ஆழ்ந்து ஆழ்ந்து நுணுகிச் செல்லுமோ, அங்ஙனம் பெரிதும் நெடிது ஆழ்ந்து சென்றுள்ளது என்கின்றூர்.

''எற்பொரு நாகர்தம் இருக்கை ஈதெனக்
கிற்பதோர் காட்சிய தென்னினும், கீழுறக்
கற்பகம் அனையஅக் கவிஞர் நாட்டிய
சொற்பொருள் ஆம்எனத், தோன்றல் சான்றது
—பம்பைப் படலம்,

கற்பக மரம் நினைத்த பொருளை யெல்லாம் விரைந்து கொடுக்க வல்லதாதல் போல, உள்ளத்திற்கு இனிய பொருள்களைப் பற்றியெல்லாம், உடனே தங்கு தடையின்றி விரைந்து பாட வல்லவர்களே கவிஞர்கள்! அத்தகைய சிறந்த கவிஞர்கள் வழங்கும் சொற்கள், மாட்சி மிக்கனவாக விளங்கும். அவற்றின் ஆழ்ந்த அழகிய நுண்பொருள்கள், ஆராயுந்தோறும் மேன்மேல் விரிந்து வளர்ந்து செல்லும் இயல்பினவாகத் திகழும். இவ்வுண்மையினைக் கம்பர் இப்பாடலிற் செம்மையுற விளக்கியிருக்கும் தன்மை, கற்போர்க்குக் கழிபேருவகை பயப்பதாகும்.

## 6) கவிஞர்களும்—தேனீக்களும் :

இராமபிரான் வாலியைக் கொன்று, சுக்ரீவனுக்கு முடிசூட்டி, அவனுக்கு அரசியல் நெறி முறைகளை அறிவுறுத்தி, அவன் கிட்கிந்தையை அரசாளும்படி அனுப்பிவிட்டுத், தான் மாலியவானில் தங்கியிருந்தார். அந்நிலையில் கார் காலம் போந்தது. அக் கார் காலத்து நிகழ்ச்சிகளைப் புனைந்து பாடப் புகும் கவியரசர் கம்பர், கார் காலத்தில் பூக்கள் பலப்பல மலர்தலையும், அவற்றின்கண் சென்று படிந்து, வண்டுகள் தேனை உண்டு தொகுத்தலையும் குறித்துப் பாடுகின்றார்.

''சரத நாண்மலர் யாவையும்
குடைந்தன தடவிச்
சுரத நூல்தெரி விடர்எனத்
தேன்கொண்டு தொகுப்ப,
பரத நூன்முறை நாடகம்
பயனுறப் பகுப்பான்
இரதம் ஈட்டுறும் கவிஞரைப்
பொருவின தேனீ!''

—கார்காலப்படலம், 38.

காமக் களியாட்டு நூல்களைக் கற்று வல்ல காமுகர்கள், பருவம் உற்றுப் பூப்பு எய்திய மகளிர் பலரிடமும் சென்று, அவர்களைத் தம் இனிய நயமான சொற்களினால் மயக்கி வயப்படுத்தி, அவர்களுடன் கூடிக் குலாவிக் களித்தல் போல, தேனீக்கள் அன்று அலர்ந்த புதிய நறுமணம் மிக்க பூக்கள்தோறும் சென்று படிந்து, அவற்றின் இனிய தேனை உண்டு தொகுத்துச் சேர்த்து வைக்கின்றன. அத்தகைய தேனீக்கள் போல, வித்தகம் மிக்க வியன்பெருங் கவிஞர்களும், பரத நூலினை முறை பிறழாமல் தாம் இயற்றும் நாடக நூலின்கண், பலவகைச் சுவைகளையும் நிரந்தினிது ஒருங்கு தொகுத்துப் பொருந்த அமைக்கின்றனர். தேனீக்கள் ஒரு வகையில் கவிஞர்களின் இயலையும் செயலையும் உடையனவாய், அக் கவிஞர்களைப் போன்று திகழ்ந்தன என்பது, இப்பாடலின் திரண்ட பொருள். தேனீக்களைக் கவிஞர்களுக்கு ஒப்பிட்டுக் கூறும் இப்பாடல், எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் இன்பம் பெரிதும் பயப்பதாகும்.

## 7) நாவரும் கிளவிச் செவ்விநடை :

இராமபிரான் திருவுள்ளப்படியே சுக்கிரீவன், வானர வீரர்களை நான்கு திசைகளுக்கும் உய்த்துச், சீதையைத் தேடி வருமாறு அனுப்புகின்றான். அதுபோது சுக்கிரீவனின் கட்டளைக்கேற்ப, அநுமன் தென்றிசை நோக்கிச் செல்ல இருக்கின்றான். அப்போது அநுமான்பால் இராமபிரான், சீதைப் பிராட்டியின் அடையாளங்களையெல்லாம் எடுத்துக் கூறியருள்கின்றார். சீதையின் நடையழகு, தேவர்களும் கண்டு வியந்து வணங்கத் தக்கது. அன்னத்தின் நடையோ, பிடியின் நடையோ, அதற்கு ஒரு சிறிதும் ஈடாக மாட்டா. சிறந்த புலவர் பெருமக்களின் நாவிலே இருந்து பெருகும் அழகிய கவிதையின் நடையும் சொல்லும் (Style & Diction), எத்துணை அழகும் சிறப்பும் உடையனவாக மிளிருமோ, அத்தகைய நடையழகினை யுடையவள் சீதை என்று, இராமபிரான் இயம்பியதாகக் கம்பர் கவினுறப் பாடியருள்கின்றார்.

''பூவரும் மழலை அன்னம்
புனைமடப் பிடியென் றின்ன,
தேவரும் மருளத் தக்க
செலவின எனினும் தேறேன்;
பாவரும் கிழமைத் தொன்மைப்
பருணிதர் தொகுத்த பத்தி
நாவரும் கிளவிச் செவ்வி
நடைவரும் நடையள் நல்லோய்!''

—நாடவிட்ட படலம்64

இதன்கண் ''குலவிச்சை கல்லாமற் பாகம் படும்'' என்றபடி, தொன்றுதொட்டுப் பாரம்பரியமாக வரப்பெறும் புலமைச் சிறப்புடையதாகலின், அத்தகைய புலவர் பெருமக்களைத் **''தொன்மைப் பருணிதர்''** என்று சிறப்பித்தார். அத்தகைய சிறந்த புலவர்களுள்ளும் ஒரு சிலர்க்கே, பெரிதும் முயல வேண்டாமல், மிக எளிதாகக் கவிபாடும் ஆற்றலும் பேறும் வாய்க்குமாகலின் **''பாவரும் கிழமை''** என்று பாராட்டினர். அனையகவித்திறம் அமையப் பெற்றவர்களின் நாவினின்று மலரும் சொற்களும் சொற்றொடர்களும், தாமே ஒழுங்குபட்டு வரிசையின் அமைந்து, செம்மை மிக்க சிறந்த நடையழகு வாய்ந்து திகழுமாகலின், **''தொடுத்த பத்தி நாவரும் கிளவிச் செவ்வி நடை''** எனப் போற்றிப் புகழ்ந்தார். இவ்வாற்றால் நமக்குக் கம்பரின் நல்ல கவிதையுள்ளம் புலனாதல் காணலாம்.

## 8) நல்லியல் நவையறு கவிஞர் சொல்:

போர்க்களத்தில் வச்சிரமுட்டி, பிரகத்தன், துன்முகன் முதலிய வீரர்கள் இறந்துபட்ட செய்தி, இராவணனின் செவிகளை எட்டுகின்றது. அது கேட்டு வருத்தமும் சீற்றமும் அடைந்த இராவணன், தானே போர்க்களத்திற்குப் புறப்பட்டுப் போகின்றான். போர் முனைக்கு இராவணனே போந்துள்ளான் என்னும் செய்தியினை, இராமபிரான் அறிகின்றார்.

அவரும் போர்ப் பறந்தலைக்குச் செல்ல விரும்பினார். அதன் பொருட்டுத் தம் மரவுரி ஆடையின்மேல், வயிரவாளை எடுத்து அணிந்தார். சேவடியில் வீரக்கழல் சேர்த்தினார். மார்பிற் கவசம் தரித்தார். பின்னர்த் தம்முடைய தோளில் அம்புப் புட்டில் ஆகிய தூணியைத் தாங்கினார். அத்தூணி எத்தகையது தெரியுமா? சிறந்த நல்ல குற்றமற்ற கவிஞர்களின் நாக்குப் போன்றது அது! அதனில் இடையறுது குறைவின்றிப் பெருகிக் கொண்டே இருக்கும் அம்புகளோ, இணையற்றுச் சிறந்த நல்லியல் நவையறு கவிஞர்தம் நாவினின்று இடையறாமல், தங்கு தடையின்றிப் பெருகி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் ஆற்றல் மிக்க அழகிய அரிய சொற்கள் போன்றவை, என்கின்றார் கம்பர்!

''பல்லியல் உலகுறு பாடை பாடுஅமைந்து

எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய

நல்லியல் நவையறு கவிஞர், நாவரும்

சொல் எனத் தொலைவிலாத் தூணி தூக்கினான்.''

—முதற்போர் புரிபடலம், 114.

கவிஞர்கள் என்போர், எந்த ஒரு நூலையும் முறையாகக் கற்று முயலாமலே, வாயில் வந்தவாறு வெறும் சொற் சதிர்களால் வரம்பின்றிப் பாடி விடுபவர் அல்லர். ''கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும் கொள்ளார் அறிவுடையார்'' எனத் திருவள்ளுவர் கூறுதற்கேற்ப, அத்தகையவர்களின் கவிகள் **'நன்கவி'** எனப் போற்றப் பெறாமல் **'புன்கவி'** எனவே இகழ்ந்து புறக்கணிக்கப்படும். ஆதலின் கவிஞர்கள் என்போர் நல்ல மொழியறிவு பெற்றிருத்தல் வேண்டும். எனவே **''பல்லியல் உலகுறு பாடை பாடு அமைந்து''** என்றார். பல மொழிகள் பயிலுதல் இயலாவிடினும், தாம் அறிந்த மொழியிலாதல் ஆழ்ந்த புலமை கைவரப் பெற்று, அதன் எல்லையற்ற நூற் கடலை எல்லை கண்டு கற்று வல்லவர்களாக விளங்குதல் வேண்டும். ஆதலின், **'எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய'** என்றார். மேலும் கவிஞர்கள் என்போருக்கு நற்பண்பு— நல்லொழுக்கம்— நற்குறிக்கோள் என்பன மிகவும் இன்றியமையாதன வாகலின், அவையனைத்தும் அமையப் பெற்றவர்களே, சிறந்த குற்றமற்ற கவிஞர்கள் எனத் தக்கவர் ஆவர் என்பது, கம்பரின் கருத்து. எனவே, **''நல்லியல் நவையறு கவிஞர்''** என்றார். இத்தகைய கவிஞர்களுக்கே,

''எனைவைத்தி எனைவைத்தி எனச்சொற்கள்

இடையிடைநின் றிரந்து வேண்ட

இனிவைப்பாம் இனிவைப்பாம்.....''

என்று கூறக் கூடிய முறையில், அவர் தம் தூய நாவினின்று சீரிய சொற்கள் இடையறுமல் தொடர்ந்து தாமே வெளிப்படும். இவ்வுண்மையினை வலியுறுத்த **''நவையறு கவிஞர் நாவரும் சொல்''** என்றார்.

இராமபிரான் போருக்குப் புறப்பட்டு, அம்புப் புட்டிலை எடுத்துத் தம் தோளில் அணிந்து கொண்டார் என்று சொல்லவரும் இடத்தில், இங்ஙனம் கவிஞர் பெருமான் ஆகிய கம்பர், தம் கவியுள்ளத்தின் இயல்பு புலப்படும் வண்ணம், கவிஞர்களின் இயல்பினையும், அவர்களுக்குரிய அளவிலாச் சொல்வளத்தின் நிறைவையும், உவமையாக எடுத்துக் காட்டிப் பாடியிருக்கும் திறம், கழி பேருவகை விளைவிப்பதாகும்.

## 9) ஆற்றற் கவிஞரின் அங்கதம் :

இராமபிரான் அநுமன் மீது இவர்ந்து போர்க்களம் சென்றார். அரக்கர் எறிந்த படைக் கலன்களை யெல்லாம், வானர வீரர்களின் உடலிற் படாதபடி தடுத்து விலக்கினார். முதல் நாட் போரிலேயே, இராவணன் ஒருவன் மட்டுமே எஞ்சி நிற்க, எதிர்த்து வந்த அரக்கரை யெல்லாம் அழித்தொழித்தார். இராவணனின் வில்லை ஒடித்தார். அவனது தேர் குடை கொடி ஆகிய அனைத்தையும் பொடிப் பொடி ஆக்கினார். தம் அம்பொன்றினால், அவனுடைய மணி முடியையும் இடறிக் கீழே விழுமாறு செய்தார். அதனால் இதுகாறும் போருக்குச் சென்றால் ''வெல்லும் அவ்வளவு அல்லது தோற்றிலா விறலோன்'' ஆகிய இராவணன், செய்வதறியாமல் திகைத்து வெள்கி நின்றான்.

அப்போது இராவணன் எவ்வாறு இருந்தான் தெரியுமா? ஒருவன் எவ்வளவுதான் சிறப்பும் செல்வாக்கும் மிக்கவனாக இருந்தாலும், ஆற்றல் நிறைந்த ஒரு நல்ல பெரிய கவிஞனின் பகைமையை வருவித்துக் கொண்டு, அவனால் அங்கதம் (Satire) என்னும் வசை கவி (Lampoon)யினைப் பாடப் பெறுவான் எனின், அதன் விளைவாகத் தன் சிறப்பும் செல்வாக்குமெல்லாம் அழிந்தொழிந்து போக, எவ்வாறு அவன் இழிவடைந்து தாழ்ந்து வருந்தி நிற்பானோ, அவ்வாறு இராவணனும் இராமபிரானால் மணி முடி யிழந்து, இழிதகவுற்று வருந்தி நின்றானாம்.

''மாற்ற ருந்தட மணிமுடி

இழந்தவாள் அரக்கன்,

ஏற்றம் எவ்வுல கத்திலும்

உயர்ந்துளன் எனினும்,

ஆற்றல் நல்நெடுங் கவிஞன்

அங்கதம் உரைப்பப்,

போற்ற ரும்புகழ் இழந்தபேர்

ஒருவனும் போன்றான்!''

—முதற்போர்புரி படலம், 249.

இப்பாடலில் கவிஞர்களின் இணையிலா ஆற்றலையும், அவர்களின் அன்பைப் பெறாமல் பகைமையை அடைந்து அங்கதம் பாடப் பெறுபவர்கள் கேடுற்று வருந்துதலையும், கவிஞர் பிரான் ஆகிய கம்பர் குறிப்பிட்டருளியிருத்தல்,

கருதியுணரற்பாலது. 'வில்ஏர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க ; சொல்ஏர் உழவர் பகை' எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாமும், கூறியிருத்தல் காணலாம்.

## 10) பல அலங்காரப் பண்பு :

இராமபிரானல் மணிமுடி இழந்த இராவணன், நாணத்தால் தன் தலையைக் குனிந்து கொண்டு, போர்க்களத்தினின்றும் பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கி, வெறுங்கையோடு இலங்கை புக்கான். சானகி நகுவள் என்றே, அவன் மனம் நாணத்தாற் சாம்பியது. அந்நிலையில் அவனது பாட்டனுகிய மாலியவான் இராவணன்பால் வந்து, அவனுக்கு ஆறுதல் கூறி, உற்றது வினவினன். அதுபோது இராவணன், இராமபிரானின் பல்வகை ஆற்றல்களையும் எடுத்துக் கூறி வியந்து, பின்வருமாறு புகழ்கின்ருன்.

இராமனின் வில்லாற்றலுக்கு இணையே இல்லை. வேதங்கள் உண்மை தவறினாலும், அவனுடைய அம்புகள் குறி தவற மாட்டா. அவைகள் பல திறப்பட்டன. அவைகள் மேன் மேற் கிளைத்து, ஒன்று பத்து நூறு ஆயிரம் எனப் பெருகிக் கொண்டே செல்லும் இயல்பின. சிறந்த கவிஞர்களின் நாவினின்று தடைப்படாமல் நிரலே இயைந்து வெளிப்படும் பொருள் பொதிந்த சொற்கள் போலவும், அச் சொற்களால் முறையே அமையும் எதுகை மோனை முதலிய தொடை வகைகள் (Rhymes & Alliterations) போலவும், அவற்றில் இயைந்து அழகுற அமையும் இசைத் திறங்கள் ( Euphonic Rhythms, Cadences ) போலவும், அவ்விசைத் திறன் அமைந்த செய்யுட்களுக்கு இனிமையூட்டும் பலவகை அணிகள் (Rhetoric & Figures of Speech) போலவும், இராமபிரானின் வில்லினின்று புறப்படும் அம்புகள் எல்லாம் வியத்தகு செயல்கள் புரிகின்றன. ''ஒப்பு வேறு உரைக்க லாவதில்லை. வேதம் தப்பின போதும், அன்னன் தனு உமிழ் சரங்கள் தப்பா'' என்கின்ருன் இராவணன்!

''நல்லியற் கவிஞர் நாவிற்
பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச், செய்யுள் கொண்ட
தொடைஎனத், தொடையை நோக்கி
எல்லையில் செல்வம் தீரா
இசைஎனப், பழுது இலாத
பல்லங் காரப் பண்பே
காகுத்தன் பகழி மாதோ!''

—கும்பகருணன் வதைப்படலம், 22.

இவ்வினிய பாடலின் கண் கவிஞர்களின் சிறப்பினை **'நல்லியற் கவிஞர்'** என்றும் ; அவர்தம் நாவினின்று வெளிப்படும் சொல்லின் இயல்பினைப் **'பொருள் குறித்து அமர்ந்த நாமச் சொல்'** என்றும்; அச் சொற்களினல் செய்யுளும் ,செய்யுட்டொடைகளும், செய்யுட்கு அழகு தரும் சிறந்த அணிவகைகளும் அமையும் அருமைப்பாட்டினைப் **'பல் அலங்காரப் பண்பு'** என்றும்; கம்பர் குறிப்பிட்டருளியிருத்தல், நினைத்தொறும் மகிழ்ச்சி விளைவிப்பது ஆகும்.

## 11) புலவர் சொற்றுறை :

இலக்குவனுக்கும் கும்பகருணனுக்கும் இடையே போர் நிகழ்கின்றது. கும்பகருணன் தன் தோள்கொட்டி ஆர்ப்பரித்தான். அவ்வார்ப்பரிப்பு கூற்றுவனையும் துணுக்குறச் செய்தது. அவனுல் வானரப் படையில் ஓர் பாதியின் மேலும் அன்று தேய்ந்தது. அதுகேட்டுச் சினந்து, சுமித்திரை பயந்த சிங்கம் ஆகிய இலக்குவன், அரக்கர்களைச் சென்று தாக்கினன். இலக்குவனின் அம்புகளால் ஒரு சிலர் கைகள் வெட்டுண்டனர். ஒரு சிலர் செவி அறுபட்டனர்; வேறு சிலரின் மூக்குகள் தனித்து விழுந்தன. மற்றும் சிலர் கால்கள் முறிந்தனர். பிறர் சிலருடைய கண்கள் பழுதுற்றன. இங்ஙனம் இலக்குவனின் அம்புகள், அரக்கர்களின் ஒவ்வோர் உறுப்பினை அறுத்தொழித்தமை, புலவர் பெருமக்கள் சிலர் தமக்குக் கொடுக்கப் பெறும் பொருளின் அளவிற்கு ஏற்றபடி, கொடுப்போரைப் புகழ்ந்து செய்யுட்கள் இயற்றி முடித்தலைப் போன்று விளங்கியது.

''சிலவ ரைக்கரம்; சிலவ ரைச்செவி;
சிலர் நாசி;
சிலவ ரைக்கழல்; சிலவ ரைக்கண்,
கொளும் செயலால்;
நிலவ ரைத்தரு பொருள்வ ழித்தண்
தமிழ் நிரப்பும்
புலவர் சொற்றுறை புரிந்த வும்போன்
றன, சரங்கள்.''

—கும்பகருணன் வதைப்படலம், 226.

## 12) தமிழ்நெறி வழக்கம் :

இராவணனின் மூலபல சேனைகள் யாவும் போரில் மடிந்தொழிந்து போகின்றன. அதனை அவன் கேள்வியுறுகின்ருன். அச்செய்தி உண்மைதானு என்று அறியத், தானே நேரிற் போர்க்களம் காணப் போதருகின்ருன். அங்கே அவன் பல துயரம் மிக்க காட்சிகளைக் காண்கின்ருன். அவனது கண்களில் இருந்து வருத்தத்தினல் நீர் கொழிக்கின்றது ; சீற்றத்தினல் குருதி கொப்பளிக்கின்றது ; இராமன் தன் வில்லினின்று பொழிந்த அம்புகளினல் அரக்கர் பல்லாயிரவர் இறந்து கிடத்தலையும், இரத்த வெள்ளம் ஆறு போலப் பெருக்கெடுத்துக் கடலிற் சென்று கலத்தலையும், கடல் அதனையுண்டு உமிழ்ந்து அலைமோதுதலையும், இராவணன் கண்டான்.

''குமிழிநீ ரோடும் சோரிக்
கனலொடும் கொழிக்கும் கண்ணன்,
தமிழ்நெறி வழக்கம் அன்ன
தனிச்சிலை வழங்கச் சாய்ந்தார்;

அமிழ்பெருங் குருதி வெள்ளம்
அற்றுவாய் முகத்தில் தேக்கி,
உமிழ்வதே ஒக்கும் வேலை
ஓதம்வந்து, உடற்றக் கண்டான்.''

—இராவணன் களங்காண் படலம், 25.

இப்பாடலிற் கம்பர் இராமனின் ஒப்புயர் வற்ற வில்லைத் **தனிச் சிலை** என்று பாராட்டு கின்றார். அவ்வில்லின் ஒப்புயர்வற்ற தன்மை யினை விளக்க, வேறு பிற மொழிகளுக்கு இல் லாத இலக்கண நெறிமுறைகளும் (Grammatical Refinements), மரபு வழக்குகளும் (Idiomatic Usages) ஆகியவற்றை, ஒப்பற்ற நிலையில் பெற்று விளங்கும் ஒப்புயர்வற்ற தமிழ் மொழி யின் சிறப்பே, அவ் வில்லுக்கு ஏற்ற உவமை யாகும் எனக் கருதி, **'தமிழ் நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை'** எனப் புகழ்ந்து போற்று கின்றார். கம்பர் தமிழ்ப் பெருங் கவிஞர், தமிழால் உயர்ந்தவர், தமிழை உயர்த்தியவர், தமிழ் மொழி நூற் கடலின் ஆழமெலாம் கண்டு அளந்தறிந்த தமிழ்ப் பெரும் புலவர். தமிழின் அருமை பெருமைகள் அனைத்தையும் தகவுற உணர்ந்தவர். அதனால்தான், அவர்தம் தமிழி யற் கவிதை நெஞ்சம், இராமனின் இணையற்ற வில்லுக்கு உவமை கூற வருங்கால், தமிழ் நெறி வழக்கின் தன்னிகரற்ற தன்மையினை எடுத்துக் காட்டி யருள்கின்றது. இதனாற் கம்பரின் கவிதையுள்ளமும், தமிழுள்ளமும் நமக்கு நன் கினிது விளங்குதல் காணலாம்.

## முடிவுரை :

இதுகாறும் கூறிவந்தவாற்றால், கம்பரின் பெருமையும், அவர் தம் கவிதையின் அருமை யும், அனைவர்க்கும் புலனாகும். இது பற்றியே நம் தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்,

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.....'''

எனப் பெரு முழக்கம் புரிந்தருளினார். இத் தகைய பெருங் கவிஞர்பிரான் ஆகிய கம்பர் அருளிய காவியத்தினை, முறைப்படி ஆராய்ந்து கற்றின்புறுதல், நம் அனைவருக்கும் உரிய தலையாய கடமையாகும்.

''அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்தினி திருக்கும் கவியுளம் காண்கிலார்''

எனப் பாரதியார் பாடியிருப்பது போன்று, கதைச் சுவை ஒன்று மட்டுமே கருதியன்றி, ஆழ்ந்து இனிதமைந்திருக்கும் கம்பர் தம் கவி யுளத்தையும் கண்டு மகிழும் முறையில், நாம் அவர்தம் நூலைக் கற்றல் இன்றியமையாதது. ''நாங்கள் இந்தியாவை இழந்தாலும் இழப் போம் ; ஆனால் எங்கள் ஷேக்ஸ்பியரை இழக்க ஒருகாலும் ஒருப்படமாட்டோம்'' (*) எனக் கூறிப், பிறநாட்டார் தம்முடைய நாட்டுக் கவிஞர்களையும், அவர்கள் இயற்றிய நூல்களை யும் பெரிதும் மதித்துப் போற்றி வருதலைப் பின்பற்றி, நாமும் கம்பர் போன்ற பெருங்கவி ஞர்கள் பலரும் அருளிய நூல்களை ஆராய்ந்து கற்றுப் பயன் அடைந்து, நலம் பெற முற்படு வோமாக!

**

(*) "Consider now, if they asked us, will you give-up your Indian Empire or your Shakespeare, you English. . Really it were a grave question . . . Indian empire or no Indian Empire ; we cannot do without Shakespeare. Indian Empire will go, at any rate, some day ; but this Shakespeare does not go, he lasts forever with us; we cannot give-up Shakespeare . . ."

—THOMAS CARLYLE,
*The Hero as Poet*

# செய்திச் சுருக்கம்.....

திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் தகவல் தொடர்பு நிலையம் ஒன்று, திருப்பதிக்கு வருகை தரும் பக்தர்களின் சௌகரியத்தை முன்னிட்டுத் திருப்பதியில், 25-9-77 அன்று, சென்னை அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. ஆர். அர்ச் சுனன், B.A., முன்னாள் பீகார் மாநில ஆளுநர் திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார், B.A.B.L., திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிர்வாக அதிகாரி திரு. எஸ். சோம சுந்தரம், B.A., B.L., ஆகியோர் முன்னிலையில், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் நிர்வாக அதிகாரி திரு. பி. எஸ். இராஜகோபால ராஜு, I. A. S. அவர்களால், குத்துவிளக்கு ஏற்றி வைத்துத் திறக்கப்பட்டது. பெருமக்கள் பலர் வருகை தந்திருந்தார்கள். இனி, திருப்பதிக்கு வரும் பக்தர்கள், திருத்தணிகைக் கோயிலைப் பற்றியும், அது சம்பந்தமான மற்றும் பல விவரங்களைப் பற்றியும், திருப்பதி தேவஸ்தானத்தின் முதல் சத்திரத்தில் உள்ள, இத் தகவல் தொடர்பு நிலையத்துடன் தொடர்பு கொண்டு, தெரிந்து கொள்ளலாம். சென்னை அறநிலையத் துறையின் ஆணையாளர் உயர்திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S., அவர்களது பெரு முயற்சியாலும், ஆசியினாலும், இந்நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதுபோல, முன்பே ஒரு தகவல் தொடர்பு நிலையம், மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் ஆலயத்தில் தொடங்கப் பட்டு நன்கு நடைபெற்று வருகின்றது.

—ஆசிரியர்.